www.padippakam.com


# களத்தில்

> ஒரு சத்திய இலட்சியத்திற்காக தம் இன்னுயிரை ஈகம் செய்த எம் இனிய வீரர்களை இன்று நாம் எமது நெஞ்சப் பசுமையில் நினைவு கூர்ந்து கௌரவிப்போம். அவர்களது வீரத்திற்கும், அதியுயர்ந்த தியாகத்திற்கும் தலை குனிந்து வணக்கம் தெரிவிப்போம்.
>
> தமிழீழத் தேசியத்தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2027 நளி 20 ( 04.12. 1996 ) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (123) அன்பளிப்பு: 60 p


# சவால்களை உறுதியுடன் எதிர்கொண்டு போராட்டம் வெல்லும்

## -மாவீரர் நாள் உரையில் தேசியத் தலைவர்

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், தமிழீழத் தியாகிகளின் திருநாளான மாவீரர் நாள் 27 - 11 - 96 அன்று தேச மக்களுக்கு விடுத்த வீரவணக்க உரையில், தற்போதைய தமிழீழப் போரின் போக்குப் பற்றியும், சந்திரிகா அரசின் சமீபத்திய, "புலிகளுடன் நிபந்தனையுடன் பேசத் தயார்" எனும் கபடத்தனமான அறிக்கைகள் பற்றியும் தெளிவான விளக்கங்களை அளித்துள்ளதோடு, "சகலவிதமான சவால்களையும் எதிர்கொண்டு எமது போராட்டம் வெல்லும்" எனவும் கூறியுள்ளார்.

"தமிழர் மண்ணை ஆக்கிரமித்து, அந்த ஆக்கிரமிப்பை இராணுவ மேலாதிக்க நிலையாகக் கருதி, அதனைத் தனக்கு அனுகூலமான அழுத்தமாகப் பாவித்து, பேச்சுக்களை நடாத்த சிங்கள அரசு எண்ணலாம். ஆனால், எம்மைப் பொறுத்தவரை இவ்விதமான பேச்சுவார்த்தை சுதந்திரமானதாக சமத்துவமானதாக அமையாது. ஏனெனில், இராணுவப் பலத்தை துருப்புச் சீட்டாக வைத்து, எமது மக்களின் உரிமைகளுக்காகப் பேரம் பேச முயலும் ஒரு அரசிடம் நாம் நீதியை எதிர்பார்க்க முடியாது. அதனால்தான், இராணுவ ஆக்கிரமிப்பின் அழுத்தம் நீங்கிய சுமூகமான இயல்பு நிலையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதை நாம் விரும்புகிறோம்.

படைகள் விலகுதல், நெருக்கடியைத் தணித்தல், இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் ஆகியன அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு முன் நிகழ்வாக அமைதல் அவசியம் என்பதே எமது நிலைப்பாடாகும். இப் பிரச்சினைகள் பற்றிப் பேசி ஓர் உடன்பாட்டைக் காணவும் நாம் தயாராக இருக்கிறோம்"

என, தேசியத் தலைவர் அவர்கள் விளக்கியுள்ளார்.

(தலைவர் அவர்களது, மாவீரர் நாள் உரையின் முழு விபரமும் 5ம் பக்கத்தில் உண்டு)



# மட்டக்களப்பில் இராணுவத்தின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்

மட்டக்களப்பில், ரோந்து சென்ற இராணுவத்தின் மீதும், நாவலடிச்சந்தி இராணுவ முகாம் மீதும் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர். 30-11-96 அன்று நடந்த ரோந்துப்படையணி மீதான தாக்குதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். முகாம் தாக்குதலில் எத்தனை இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை அறியப்படவில்லை. நாவலடிச்சந்தி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் வீதி ரோந்துக்குச் சென்ற வேளை, முகாமிற்கருகில் வைத்து விடுதலைப் புலிகளின் அதிரடிப்படையணியால் தாக்கப்பட்டனர். தாக்குதல் நடாத்தப்பட்ட அவ்விடத்திலேயே, இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர், காயமடைந்தவர்களைத் தூக்கிக் கொண்டு முகாமுக்குள் ஓடிப்பதுங்கிக் கொண்டனர். இத்தாக்குதலின் போது, சில ஆயுதங்களும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

அதேவேளை, நாவலடி இராணுவ முகாமும் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது. இத்தாக்குதலின் போது, விடுதலைப் புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர். 2ம் லெப்டினன்ட் கிரியாபாலன் (கைலாயபிள்ளை கிறிஸ்ணன், கொக்கட்டிச்சோலை), 2ம் லெப்டினன்ட் ராஜகோபன் (நாகலிங்கம் தீபநிதி, ஆயித்தியமலை - மட்டக்களப்பு), வீரவேங்கை தனுகீரன் (தங்கத்துரை சிவபாதம், பளுகாமம் - மட்டக்களப்பு) ஆகிய போராளிகளே வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

19-11-96 அன்று எதிர்பாராது ஏற்பட்ட வெடி விபத்தில் விழுப்புண் பெற்ற கப்டன் வீன்காந் (சின்னக்கண்டு ஜெயராசா, மன்னார்) என்ற போராளியும் 30-11-96 இல் வீரச்சாவடைந்துள்ளார்.

தாயகத்திலிருந்து எதிரிகளை விரட்டியடிக்கும் புனிதப்போரில், தம்மை முழுமையாக அர்ப்பணித்துவிட்ட இம்மாவீரர்களுக்கு எமது வீரவணக்கங்கள். ✷

# வன்னியில் சிறிலங்காவுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்

**30-11-96** அன்று வன்னியில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு இப் போராட்டத்தை நடாத்தியுள்ளனர். பேரணியாகச் சென்ற மக்கள், ஸ்கந்தபுரத்தில் இயங்கும் கிளிநொச்சிச் செயலகத்தில், சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிற்காக மனு ஒன்றைக் கையளித்தனர். இம்மனுவில், இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் சிறிலங்காப் படையினர் புரியும் மனித உரிமை மீறல்கள், மற்றும் தமிழ் மாணவர்களின் கல்விக்குத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் தடைகள், பெண்பிள்ளைகள் மீது மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறைகள், படுகொலைகள் மற்றும் பாடசாலைகளை இராணுவமும் பொலீசும் ஆக்கிரமித்துள்ளமை, பயணிகளைக் கட்டாயப்படுத்தித் தடுத்து வைப்பதற்காகப் பாடசாலைகளை மூடி, தடுப்பு முகாம்களாகப் பாவித்தல் போன்ற கண்டனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தமிழர் மண்ணில், தமிழ் மக்களுக்குத் தேவையில்லாத இராணுவம் ஏன் தரித்து நிற்கின்றது என, சந்திரிகாவிடம் கேள்வி எழுப்பியுள்ள மக்கள், தமிழ் மாணவ சமூகம், சிங்கள இராணுவத்தை ஒரு அந்நியப்படையாகவே பார்க்கின்றது என்பதையும் தமது மனுவில் தெளிவு படுத்தியுள்ளனர். ✷

# 825 தொன் வெடிப் பொருட்கள் கிளிநொச்சி மீது வீசப்பட்டது

சிறிலங்கா அரசு, தமிழ் மக்களைத் தமது குடிகளாகக் கருதுவதில்லை என்பதைத் தெட்டத் தெளிவாக உறுதி செய்யும் வகையில் 825 தொன் வெடிமருந்துகள் வானிலிருந்து சிறிலங்காப் பாதுகாப்புப் படைகளினால் கிளிநொச்சி மீது வீசப்பட்டுள்ளது. 'சமாதானத்திற்கான போர்' என்ற சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் ஒரு கட்டமான, 'சத்ஜய-3' இராணுவ

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

படிப்பகம்

www.padippakam.com



# தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் 10 மில்லியன் ரூபா மக்கள் நலத்திட்டம்

இடம்பெயர்ந்த தமிழீழ மக்களுக்கான பத்து மில்லியன் ரூபா செலவிலான மக்கள் நலத் திட்டம், தமிழர் புனர்வாழ்வு கழகத்தால் தொடக்கப்பட்டு, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழீழப் பகுதிகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள், சில அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக உள்ளது. இத் திட்டத்திற்குப் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் துணை செய்து வருகின்றன. இதனால், சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள சில தமிழீழப் பிரதேச மக்களுக்கும் இத் திட்டத்தினால் உதவி அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கிடையில், "இடம் பெயர்ந்தோரின் வாழ்வின் உயர்ச்சிக்கான சங்கம்" தற்பொழுது மாங்குளம் பிரதேசத்தை மையமாக கொண்டு தனது பணிகளை விரிவுபடுத்தி வருகிறது. முழங்காவிலில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் ஒரு தொழிற் பயிற்சி நிலையம் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தட்டச்சு பயிற்சி முதல், பொறியியல் பாடங்கள் வரை இங்கு பயிற்றுவிக்க வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ✷

# 825 தொன் வெடிப் பொருட்கள்...

நடவடிக்கையின் போதே இக்கொடூரம் நிகழ்ந்துள்ளது.

புக்காரா விமானங்கள் சுமார் 220 தடவைகள் வட்டமிட்டு 325 தொன் வெடிமருந்துகளைத் தீர்த்தன. 500 தொன் நிறையை அண்ணளவாகக் கொண்ட 50,000 'ஆட்டிலறி' எறிகணைகள் கிளிநொச்சி மீது வீசப்பட்டுள்ளன.

இவ்வாறு, தமிழ் மக்கள் மீது சர்வதேசச் சட்டங்களுக்கு விரோதமான முறையில் மக்களுக்கு எதிரான போர் மேற்கொள்ளப்பட்டே, சிறிலங்காப் படைகளினால் கிளிநொச்சி நகர் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ✷

# பதிவுகள்.....

சிறுகதை

அவன் முன் தோன்றி மீண்டும் நெஞ்சை உருக்கியது.

"அக்காவின் குடும்பத்தில் அனைவருமே அநியாயமாகக் கொலை செய்யப்பட்ட பின்னர், அவர்கள் இந்த உலகத்திலே வாழ்ந்ததற்கு என்ன அத்தாட்சிதான் உண்டு........?"

அவனது மனம் பல தடவைகள் வினாவிக் கொண்டபோது, "அடிமை விலங்கை உடைக்க வேண்டிய எமது மண்ணில் - அந்தப் பணியில் ஈடுபடுவது ஒன்றே எமது வாழ்வுக்குச் சாட்சியாக அர்த்தத்துடன் பதிவு செய்யும் என்பதை, பரமசிவம் ஆசிரியர் போன்றோர் ஏற்றுக்கொள்ள அதிக காலம் எடுக்காது""

– என்ற நம்பிக்கையுடன் அந்த இளம் காலைப் பொழுதை ரசித்தவாறு மிதி வண்டியை மிதித்துக் கொண்டிருந்தான் செழியன். ✷

# படையினரால் கைதாகும் தமிழர்கள் சடலங்களாக கடலில் மிதப்பு

மக்களின் வசிப்பிடங்களை முற்றுகையிட்டு தமிழ் மக்களைக் கைது செய்யும் சிறிலங்காப் படையினர், அவர்களில் பலரைத் தனது இராணுவப் பயங்கரவாதத்தினால் சாகடித்துத் தடயங்கள் வெளியே வராதபடி கடலில் வீசி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் சில இராணுவப் படுகொலைகள், தடயங்கள் மூலம் வெளிவந்து புற உலகுக்கு இராணுவ ஆட்சியின் இயல்புகளை வெளிப்படுத்தத் தொடங்கியதை அடுத்தே இப் புதிய தந்திரமான கடலில் சடலங்களை வீசுதல் ஆரம்பமாகி உள்ளதாகக் கூறப்படுகின்றது.

முல்லைத்தீவில் 15 சடலங்கள் சிதைந்த நிலையிலும், திருகோணமலை மாவட்டம் புல்மோட்டையில் மூன்று பெண்களின் சடலங்கள் சிதைந்த நிலையிலும் கடற்கரைகளில் ஒதுங்கியுள்ளது.

இவ்வாறாக, சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்புப் பகுதிகளில் வாழும் தமிழ்ப் பொதுமக்கள் ஓர் அவலம் நிறைந்த மரணபீதி வாழ்வு நிலையிலேயே உள்ளனர்.

# அலெக்சாண்டர் லெபட்....

குற்றஞ் சுமத்தும் குலிகோவ், செச்சினியாவில் மீண்டும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க விரும்புகிறார் என நம்பப்படுகிறது.

மேலும் லெபட்டுக்கும் செச்சினியரின் திட்டமிட்ட குற்றச் செயல்களுக்கும் தொடர்பிருக்கின்றது என்றும் குலிகோவ் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, லெபட் பதவி விலக்கப்பட்டமை பற்றி திருப்தி தெரிவிக்கும் சில கிரெம்ளின் அதிகாரிகள் கூட, செச்சினியா விடயத்தில் என்ன நடக்குமோ எனும் கவலையுடன் இருப்பதாக அறிய வருகிறது. "செச்சினியாவில் மீண்டும் சண்டை ஏற்படுவதைத் "தவிர்க்கும் அளவிற்குக் குலிகோவிற்கு அறிவிருக்கிறதா எனத் தனக்குத் தெரியவில்லை" என ஒரு கிரம்ளின் ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

தான் பதவி விலக்கப்பட்டதனை அடுத்து, ஒரு சில நாட்கள் ஓய்வு எடுக்கப் போவதாகக் கூறிய லெபட், அடுத்த தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான வழிவகைகள் பற்றிச் சிந்திக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். ஆனால், யெல்ட்சினை எவ்வாறு, எந்தக்கோணத்தில் ஓரங்கட்டலாமென லெபட் ஏற்கெனவே அறிந்து வைத்துள்ளார். அதாவது சீரழிந்து வரும் பொருளாதாரத்தையே தனக்குச் சாதகமாக்க எண்ணியுள்ளார்.

"அபரிமிதமான வளங்களைக் கொண்டிருக்கும் ரஷ்யாவானது, உலகிலேயே செல்வந்த நாடாக விளங்குகிறது. ஆனால் மக்களோ, மிகக் கேவலமான வாழ்க்கை நடத்துகின்றனர். எனவே எனது நாட்டு மக்களுக்கு முறையான வாழ்வு கொடுக்கத் திட்டமிட்டுள்ளேன்" என லெபட் கூறியுள்ளார்.

ரஷ்யாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய முதலாளித்துவத்தை மரணிக்கச் செய்யாமல், மிதமான மாற்றங்களைக் கொண்டுவர லெபட்டாலேயே முடியும் எனப் பல ரஷ்யர்கள் கருதுகின்றனர். லெபட் பதவி விலக்கப்பட்டாலும், அவர் ரஷ்யாவின் மிகப் பிரபல்யமான அரசியல் வாதியாக விளங்குவதை மறுக்க முடியாது.

செச்சினியாவில் மீண்டும் சண்டை ஆரம்பித்தால், லெபட்டிற்கான ஆதரவு பல மடங்கு பெருகும் என்பது 'வெள்ளிடைமலை'. அதேவேளை, பொருளாதார நெருக்கடி பற்றிய துரும்பினை முறையாகப் பாவிப்பாராயின், அடுத்த தேர்தலில் லெபட் சனாதிபதியாக வருவதற்குரிய சந்தர்ப்பங்கள் நிறையவே உள்ளன எனலாம். ✷

# டேவிட் . . . கடலில் கலந்த ...

என்ன மாதிரி?"

"பிரச்சினையில்லை, குதிரைக்குச் சாப்பாடு கொடுக்கினம்....."

கரிகாலனின் பதில் 'வோக்கி'யில் கேட்கிறது.

பின் ஒவ்வொரு 'இஞ்சினா'கச் சத்தமிட, படகு நகராமலே 'இஞ்சின்' சத்தம் அதிகரித்து குறைந்து, மிக அதிகரித்து, தணிவது கேட்கிறது.

படகு வழமைபோல் வலப்புறமாக வட்டமிட்டு, நிழலாய் நகர்கிறது. எப்போதும்போல், 'தேவையும் கடலும் தவிர' மற்ற எல்லாம் வழமைபோல்.

நீரைக்கிழித்து, வெண்நுரை கிளம்ப அலையில் எழும்பிப் பாய்ந்து......... படகு புறப்பட்டுவிட்டது. அதிகரித்த சத்தமும் கரையில் கூடிய கூட்டமும் சிறிது சிறிதாய் மறைய, கடல் தெரியாதவர்களின் திருப்திப் பெருமூச்சுடன், கடலைத் தெரிந்தவர்களின் கனத்த பெருமூச்சு கலந்தபோது, வண்டி வெளிக்கிட்டுவிட்டது.

'இஞ்சின்' சத்தம் கரைவதற்கு முன்னரே, கரையிலுள்ள 'வோக்கி', "அல்பா..... அல்பா......" என அழைத்தது.

"தண்ணியடிக்குதுதானே.......... 'வோக்கி'யை அதுதான் 'லொக்ரியூப்'பிலை வைத்திட்டினம்போல" எனக் கூறிவிட்டு, முயற்சியைக் கைவிடும்போதும்கூட, 'இஞ்சின்' சத்தம் கேட்டுக்கொண்டு தானிருக்கிறது.

நேரம் கரைய, முகாமுக்குத் திரும்ப நினைக்கும் வேளையில், தூரத்து முகாம் வோக்கியில் ஒரு அவசர அழைப்பு, " 'வோக்கி'யில் அல்பா தொடர்பெடுத்தது........."

"என்னவாம்........"

"கிளியரில்லை, சரியாக விளங்கேல்லை. பிறபோ...... பிறபோ....... என்று அவையள் கூப்பிட்டமாதிரி இருந்தது......"

"சொல்லு......."

"போட்' வெடிச்சிட்டுது; வண்டி அனுப்புங்கோ எண்ட மாதிரிக் கிடந்தது. அவையளின்ரை கிளியரில்லை. ஒண்டும் விளங்கேல்லை........."

"ஆர் கதைச்சது......."

"டேவிட் அண்ணை மாதிரித்தான் கிடந்தது. ஒண்டும் விளங்கேல்லை......."

அடுத்த படகினை ஆயத்தம் செய்தவேளை – 'இஞ்சின்' எடுக்க பிக்கப் விரைந்தவேளை – உறுதியற்ற 'வோக்கி'ச் செய்தியை நம்புவதா இல்லையா என்று யோசித்தவேளை – நேரம் நகர்ந்து கொண்டிருந்தது; அலை விரிந்து கொண்டிருந்தது.

சன்னதம் கொண்டு நின்றது கடல். தேடப்போகும் படகினைத் தேடப்போகவென, மற்றப் படகைத் தயாராக வைக்க வைக்கும் கடல்!

நேரம் செல்லச் செல்ல 'வோக்கி' செய்தி பிரமையோ என நினைக்க வைக்கும் வெறுமையுடன் காத்திருக்கும் வேளையில், தேடப் போன படகின் 'வோக்கி' அழைக்கிறது.

"அரியைக் கண்டிட்டம். தூரத்தில் இன்னுமொரு ஆள் தெரியுது........"

"என்னமாதிரி.........என்னமாதிரி......." என்ற 'வோக்கி'க்கு பதில் சொல்லாமல், தேடும் படகு கரை நோக்கி வர, படகில் அரியுடன் ரட்ணா.

"என்ன நடந்தது?"

"போட் பிரிஞ்சிட்டுது. நடுவாலை முறிஞ்சு அணியம் தனிய, கடயால் தனிய ரெண்டாப் போச்சுது"

"மற்றாக்கள் என்னமாதிரி? டேவிட் அண்ணை என்ன மாதிரி?"

"இருட்டுக்கை எல்லாரையும் கூப்பிட்டு டேவிட் அண்ணை ஒண்டாக்கினவர். எல்லாரையும் நீந்தச் சொல்லிப்போட்டு, அவர் கரிகாலனைக் கூப்பிட்டு தன்னட்டை எடுத்தவர்"

முழு விடயங்களையும் சொல்ல முடியாது அரியும் ரட்ணாவும் மயங்கிவிட்டார்கள்.

மீட்கப்பட்ட இருவரும் உப்பு நீரால் உதடுகள் வெடித்து, முகம் புண்ணாகி, 'கோலம் கெட்டுப்போய்' இருந்தார்கள்.

படகுகள் போயின, வந்தன. செய்தி கேள்விப்பட்ட சனமெல்லாம் கரைமுழுக்கக் கூடி நின்று தேடினர். படகுகளின் தேடுதலுக்கு மேலாக, டேவிட்டின் திறமையில் எல்லோரும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

"முதலும் இரண்டு நாள் கடலுக்கை கிடந்து, வந்து சேர்ந்தவன் தானே?"

"மன்னாரிலை ஒருக்கா இரண்டு பொம்பிளைப் பிள்ளையளைத் தனியக் கொண்டு வந்து சேர்த்தவனெல்லே"

டேவிட்டின் நீச்சல் திறமையில் எல்லோருக்கும் நம்பிக்கை இருந்தது.

"உந்த மட்டு மட்டு நீச்சல் பெடியள் வந்து சேந்திட்டாங்களாம். டேவிட் ஏன் வரமாட்டான்?"

எல்லோரும் நம்பிக்கையுடன் காத்திருந்த போதும், அரி வைத்தியசாலையில் கூறிக் கொண்டிருந்தான்: "எங்களை நீந்தச் சொல்லிப் போட்டு, அவர் கரிகாலனைத்தான் இழுத்துக் கொண்டு நிண்டவர்"

படகில் சென்றவர்களில் கடலுடன் கொஞ்சமும் பரிச்சயம் இல்லாத – நீச்சல் தெரியாதவன் – கரிகாலன் மட்டும்தான்.

எல்லோரும் நம்பிக்கையுடன் இருந்தபோதும், அரியையும் ரட்ணாவையும் தவிர வேறு எவரும் வரவில்லை ........

கரிகாலன் வரவில்லை ........

டேவிட்டும் வரவில்லை .........

- பொட்டு

படிப்பகம்

www.padippakam.com



## விடுதலைப் புலிகளும் சமாதானத் தீர்வும்

"நாம் சமாதானத்தின் விரோதிகள் அல்லர். அன்றி சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதிரானவர்களும் அல்லர். நாம் வேண்டுவது உண்மையான சமாதானத்தையே. எமது மக்கள் எமது மண்ணில் நிம்மதியாக சுதந்திரமாக அந்நியத் தலையீடு இன்றி அமைதியாக வாழ்ந்து தமது அரசியல் வாழ்வைத் தாமே தீர்மானிக்கக்கூடிய கௌரவமான நிரந்தரமான சமாதானத்தையே நாம் விரும்புகிறோம்"

தமிழீழத் தேச மக்களின் ஆன்ம குரலொலியாக, தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் தமிழீழத் தியாகிகள் நாளான, தேசிய மாவீரர் வீரவணக்க உரையில் மேற்கூறப்பட்ட பகுதிகள் – தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானத் தீர்வு குறித்த நிலைப்பாட்டைத் தெட்டத் தெளிவாக்குகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள், சமாதானத் தீர்வு மீதான தமது நம்பிக்கையை – அக்கறையை பலமுறை வெளிப்படுத்தியும், இலங்கைத் தீவில் தேசிய இனங்களுக்கிடையிலான போரொன்று தொடர்ந்து கொண்டிருப்பதன் காரணம் தான் எனன்?

இதற்கான பதிலையும் தலைவர் பிரபாகரன் உலகுக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். "எமது நியாயமான நிலைப்பாட்டை சந்திரிகா அரசு ஏற்றுக் கொள்ளும் என நாம் எதிர்பார்க்கவில்லை. சிங்கள – பௌத்த பேரினவாதமானது, காலங் காலமாக இராணுவ மேலாண்மையில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வருகிறது. இராணுவ பலத்தின் நிழலின் கீழேயே சந்திரிகாவின் ஆட்சியும் நடைபெறுகின்றது. எனவே இராணுவ பலத்தைக் கைவிட்டு, தார்மீக பலத்தின் அடிப்படையில் – நீதியின் அடிப்படையில் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க சந்திரிகா அரசு முன்வருமா என்பது சந்தேகத்திற்குரிய விடயமே".

அப்படியானால் சமாதானத் தீர்வுக்கு என்ன வழி? இதனையும் தலைவர் பிரபாகரன் தெளிவாக விளக்குகிறார்.

"சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் பாதுகாவலனாகவும் அரசியல் பிரதிநிதியாகவும் விளங்கும் சந்திரிகா அரசு, இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு தமிழ் மக்களுக்கு உண்மையான சமாதான வாழ்வை உருவாக்கிக் கொடுக்கும் என நாம் நம்பவில்லை. இந்த நம்பிக்கையீனத்தின் அடிப்படையிலேயே தான் நாம் மூன்றாம் தரப்பு நடுநிலையை நாடினோம். எதிர்காலத்தில் சமாதானப் பேச்சுக்கள் சாத்தியமாவதானால், அது சர்வதேச மத்தியத்தத்துடன் நடைபெற வேண்டுமென ஒரு வருடத்திற்கு முன்பே நாம் அறிவித்திருந்தோம். ஆனால் சந்திரிகா அரசு அப்பொழுது எமது யோசனையை கருத்தில் எடுக்கவில்லை. மாறாக, வடபுலத்தில் ஆக்கிரமிப்புப் போரை அகலப்படுத்தி இனநெருக்கடியை மோசமாக்கி சமாதானப் பேச்சுக்கான சூழலைக் கெடுத்துள்ளது".

இந்நிலையில் இனிச் சமாதானத் தீர்வு உருவாக என்ன வழி உண்டு? இதற்கான திட்டத்தையும் தலைவர் பிரபாகரன் விளக்கமாக முன்மொழிகின்றார்.

"தமிழர் மண்ணை ஆக்கிரமித்து – அந்த ஆக்கிரமிப்பை இராணுவ மேலாதிக்க நிலையாகக் கருதி, அதனைத் தனக்கு அனுகூலமான அழுத்தமாகப் பாவித்து பேச்சுவார்த்தைகளை நடாத்த சிங்கள அரசு எண்ணலாம். ஆனால் எம்மைப் பொறுத்தவரை இவ்விதமான பேச்சுவார்த்தை சுதந்திரமானதாக – சமத்துவமானதாக அமையாது. ஏனெனில், இராணுவ பலத்தை துருப்புச் சீட்டாக வைத்து எமது மக்களின் உரிமைகளுக்காகப் பேரம் பேச முயலும் ஒரு அரசிடம் நீதியை நாம் எதிர்பார்க்க முடியாது. அதனால்தான் இராணுவ ஆக்கிரமிப்பின் அழுத்தம் நீங்கிய சுமூகமான இயல்பு நிலையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதை நாம் விரும்புகிறோம். படைகள் விலகுதல், நெருக்கடியைத் தணித்தல், இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் ஆகியன அரசியற் பேச்சுவார்த்தைகளுக்கு முன் நிகழ்வாக அமைதல் அவசியம் என்பதே எமது நிலைப்பாடாகும். இப் பிரச்சினைகள் பற்றிப் பேசி ஓர் உடன்பாட்டைக் காணவும் நாம் தயாராக இருக்கிறோம்" என்கிறார் தலைவர் பிரபாகரன்

இந்த அரசியல் யதார்த்தத்தை இந்நேரத்திலாவது ஏற்று, சர்வதேச சமூகத்தைத் தலைவர் பிரபாகரனுக்கு பக்கத் துணையாக அணி திரள வைக்க வேண்டிய பொறுப்பைச் சுமந்தவர்களாக புலம் பெயர் தமிழீழ மக்களாகிய நாம் உள்ளோம். சிறிலங்கா அரசின் உண்மைக்கு மாறான பரப்புரைகளை சர்வதேச உலகுக்கு தெளிவுபடுத்தி, விடுதலைப் புலிகள் சமாதானத் தீர்வுக்கு எதிரானவர்கள் அல்லர் என்பதை உணர வைக்க வேண்டும்.

ஒரு தேச மக்களின் விடுதலை இயக்கமொன்றை பயங்கரவாத இயக்கமென பரப்புரை செய்து அத்தேச மக்களையே சிறிலங்கா அவமானப்படுத்துகிறது. அதனால் அத்தேச மக்கள் சிறிலங்காவைத் தமது அரசாகக் கொள்ளும் 'உளவியல் ஒப்பந்தம்' அற்றவர்களாகிவிட்டனர்.

சிறிலங்கா, தமிழீழத் தேச மக்கள் தமது மேலான அரசியல் பணிவை, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்திற்கே வழங்கத் தொடங்கிவிட்டதினால் – முழுத் தமிழீழ மக்களையும் தனது எதிரியாகக் கருதி – அப்பட்டமான இனக்கொலை, இனத் துன்புறுத்தல்கள், மக்கள் மேலான முற்றுகை, மனித நேயத்திற்கு எதிரான போர் என்பவற்றை, தமிழீழ மக்களுக்கு மேல் இராணுவப் பலம் கொண்டு ஆக்கிரமிப்பதினால் திணிக்கிறது.

இதுவே தமிழீழ மக்களின் இன்றைய மனித அவலங்களின் ஊற்றுக்களாக உள்ளன என்ற உண்மையை உணர்த்துவோம். தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழீழத் தேச மக்களின் விடுதலை இயக்கமாக அங்கீகரித்து தமிழீழ மக்களுக்கு மனித நேய உதவிகளை நேரடியாக வழங்கி சமாதானத் தீர்வு தோன்ற உழைக்குமாறு கேட்போமாக!

## திட்டமிட்ட சீரழிப்பு

யாழ். குடாநாட்டில், சமூகச் சீர்கேடுகள் தீவிரம் பெற்று வருவதாகவும், ஒரு மோசமான கலாச்சாரச் சீரழிவை நோக்கி மக்கள் இட்டுச் செல்லப்படுவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் புரிய வைக்கின்றன. இதற்கு, கட்டுப்பாடற்ற ரீதியில் விற்பனையாகும் மதுவகைகளும் விநியோகிக்கப்படும் வீடியோ படங்களும் கணிசமான பங்காற்றுபவையாகவும் உள்ளன.

யாழ். குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மதுபானச்சாலைகளும், வீடியோக் கடைகளும் புற்றீசல்கள் போல் முளைத்து வருகின்றன. பெட்டிக்கடைகள் யாவற்றிலும் மதுபானம் விற்பனை செய்வது சர்வசாதாரணமாகி விட்டது. தேநீர்க் கடைகளில் இனிப்பு வகைகளைப் போத்தல்களில் அடுக்கி வைப்பது போன்று, மதுபானங்கள் பெட்டிக் கடைகளில் வகை வகையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

இதே சமயம், கசிப்பு வியாபாரமும் கொடிகட்டிப் பறக்கின்றது. இராணுவக் காவலரணுக்கு அருகில் கூட, கசிப்பு வியாபாரம் சர்வசாதாரணமாக நடைபெற்று வருகின்றது. இதைப்பற்றி எவருமே கண்டு கொள்வது இல்லை. ஆனால், இராணுவத்தினருக்கு மட்டும் கசிப்பு விற்பனை செய்யக்கூடாது என, இராணுவ அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக ஒரு தகவல் குறிப்பிடுகின்றது.

இது ஒருபுறம் இருக்க, வீடியோக்கடைகளின் பெருக்கமானது தமிழர் கலாச்சாரத்தை முற்றாகச் சீர்குலைக்கும் வகையிலான படங்களை அறிமுகம் செய்து கொண்டிருக்கின்றன. இவ் வீடியோ படங்கள் கடைகளிலும், ஆங்காங்கு வீடுகளில் இருந்தும் கூட விநியோகிக்கப்படுகின்றன. இது அங்கு இளைஞர் சமுதாயத்திற்கு முக்கியமான பொழுதுபோக்கு அம்சமாக உள்ளது. வீட்டின் உரிமையாளர்கள் இல்லாத வீடுகள் சில, வீடியோ திரையரங்கமாகவும் மாற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள மதுபான விற்பனை நிலையங்கள், வீடியோ திரையரங்குகள் என்பன அருகிலுள்ள பாடசாலை, கோயில்கள் எது குறித்தும் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. பாடசாலைகளுக்கு அருகிலும், கோயில்களுக்கு அருகிலும் அவை திறக்கப்பட்டுள்ளதோடு, எவ்வேளையிலும் இச் 'சேவைகள்' தங்கு தடையின்றி இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறாகச் சீர்கேடு அடைந்து செல்லும் யாழ். சமுதாய நிலை குறித்து, கொழும்பு வாரஇதழ் ஒன்று, "விபச்சாரம் ஒன்றே பாக்கியாகவுள்ளது" எனக் குறிப்பிட்டது. அந்த அளவிற்கு நிலைமை மோசமடைந்து சென்று கொண்டிருக்கிறது. ஆனால், இவ்வாறு நிலைமை மோசமடைந்து செல்வதற்குத் தொழில் வாய்ப்பின்மை, விரக்தி என்பன மட்டும் காரணமல்ல. சிறிலங்கா அரசானது திட்டமிட்டு இளைஞர்களை ஊக்குவித்து வருவதே காரணமாகும். இல்லாது போனால் இதனைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும்.

ஆனால், அவற்றைச் செய்வதை சிறிலங்கா அரசாங்கம் விரும்பவில்லை. சிவில் நிர்வாகத்தையும், சட்ட ஒழுங்கையும் பேணப்போவதாகவும் சீரமைக்கப் போவதாகவும் கூறும் அரசாங்கம், இச் சமுதாய சீர்கேட்டினைத் திட்டமிட்டே ஊக்குவித்து வருகின்றது. இவ்வாறான ஊக்குவிப்புகள், பொதுவாகவே போராட்டங்கள் நடைபெறும் பிரதேசங்களில் போராட்டத்தை நசுக்க முனையும் ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளேதான்.

இதன் மூலம், இளைஞர்களின் சிந்தனைகளைத் திசை மாற்றிவிடுவதே அவர்களின் நோக்கமாகும். அதாவது, கலாச்சார சீர்கேடுகள் மூலம் ஒரு சீரழிந்த வாழ்க்கைக்கு இளைஞர் சமுதாயத்தை இட்டுச் செல்வதும், இவ் இளைஞர் சமுதாயத்தை ஏதோ ஒரு வகையில் ஒரு போதை நிலையிலேயே வைத்துக்கொள்வதுமே அவர்களின் நோக்கமாகும். இதன் மூலம், இவ் இளைஞர்களைப் போராடும் சிந்தனையில் இருந்து வெளிக்கொண்டு வருவதே, ஆட்சியாளரின் குறிக்கோள்.

அரசாங்கத்தின் இந்நிலையானது, போதைப் பொருள் பாவனை, முழு அளவினதான நீலப்படங்களின் அனுமதிவரை செல்லக்கூடியதாகவே இருக்கும். இந்த நிலையில் யாழ். சமுதாயம், அரசாங்கத்தின் திட்டமிட்ட இச் செயலை இன்றே அடையாளம் கண்டு கொண்டு விழிப்புப் பெறவேண்டும். அல்லாது போனால், எதிர்காலத்தில் பெரும் அவலங்களைச் சந்திக்க வேண்டிவரும். சிறிது காலம் தாமதிப்பினும் கூட, பின்னர் அது கைக்கு எட்டாத விடயமாகவே போய் விடும். ✷

## பெல்ஜியத்திலும்...

பிரசுரங்கள், ஆயிரக்கணக்கில் Brussel, Antnerpen ஆகிய முக்கிய நகரங்களில் இக் கவன ஈர்ப்பு வாரத்தில் விநியோகிக்கப்பட்டன. குறைந்தளவு தமிழர்களே இந் நாட்டில் வாழ்ந்தாலும் தாங்களாகவே முன்வந்து தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் நெதர்லாந்துக் கிளையினருடன் தொடர்பு கொண்டு, தங்களின் சொந்தச் செலவிலேயே ஆயிரக் கணக்கில் துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து விநியோகித்த அவர்களின் தமிழுணர்வை யாராலும் பாராட்டாமல் இருக்க முடியாது. தமிழனாகப் பிறந்தால் மட்டும் போதாது; அவர்கள் எங்கிருந்தாலும் தமிழுணர்வுடன் இருக்க வேண்டும் என்பதற்கு பெல்ஜியம் வாழ் ஈழத் தமிழர்களும் ஓர் எடுத்துக் காட்டாக விளங்கியுள்ளனர். ✷






படிப்பகம்

www.padippakam.com



# கிட்லரின் "பெல்சன்" வதை முகாமை ஞாபகமூட்டுகிறது யாழ்.குடாநாட்டு நிலை

*யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரின் அடாவடிகளையும், அட்டகாசங்களையும் குறிப்பிட்டு கொழும்பிலிருந்து வெளிவரும் 'சரிநிகர்' வார இதழில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு.*

யாழ்ப்பாணத்தில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. முன்னர் மருந்துகளை புலிகள் எடுத்து விடுகின்றார்கள் எனக்கூறி குறைந்தளவு மருந்துகளை அனுப்பி வந்தது அரசு. அதுவும் சில சமயம் மாதக் கணக்கில் மருந்து வராது, மக்கள் பல்வேறு கஸ்டங்களை அனுபவித்தனர். சில சமயம், நோயாளிகள் இறந்து முள்ளனர். அண்மையில் மருந்து இல்லாமல் நான்கு மாதக் குழந்தையொன்று இறந்துள்ளது.

இன்று யாழ்ப்பாணத்தில் நடப்பது தான் என்ன? யாழ். போதனா வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக ஒரு நோயாளி போகமுன் மூன்று நான்கு இடங்களில் படையினரால் சோதிக்கப்படுகின்றனர். வைத்தியசாலை யிலோ மருந்துகள் இல்லை என்று கூறப்படுகிறது. வைத்தியர்கள் எழுதும் மருந்துகளை வெளியில்தான், அதுவும் இரட்டிப்பு விலையில் வாங்க வேண்டும். 'செல்வாக்கு' இருந்தால் மட்டுமே வைத்திய சாலையில் மருந்து பெறலாம்.

எப்பொழுதாவது மருந்துகள் கப்பல்களில் வருகின்றபோதும் தனியார் மருந்துக் கடைகள் அவற்றைப் பதுக்கி விடுகின்றன. ஒரு கடையில் 'அம்பிசிலின்' மருந்து முடிந்தால் மற்றக் கடையில் அதற்கு இரட்டிப்பு விலை. 'வெஸ்கோ', 'இரட்ணம் பார்மசி' என்ற இரு மருந்துக் கடை களிலும் சகல மருந்துகளும் கிடைக்கும். ஆனால், அவைகள் இரட்டிப்பு விலை.

யாழ்ப்பாணத்தில் இப்போது தட்டுப் பாடில்லாத ஒன்று இருக்கின்றதென்றால் அது மக்களின் நீண்ட காத்து நிற்கும் வரிசைத் தொடர்தான். கொழும்பு மற்றும் தென் பகுதிகளுக்குப் போக கப்பல், விமானத்துக்குப் பதிவு செய்ய வரிசை, எரிபொருள் வாங்க வரிசை, நிவாரணப் பொருட்களுக்கு வரிசை, மருத்துவ மனையில் அனுமதி பெறுவதற்கும் கூட வரிசைதான்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து பல திக்குகளிலும் புறப்பட்ட இராணுவத்தினர் வழியில் தென்படுகின்ற பொதுமக்களின் அனைத்துச் சொத்துக்களையும் சேதப் படுத்திய வண்ணமே தங்கள் பயணங்களை மேற்கொள்கின்றனர். இதைத் தொடர்ந்து வரும் 'அழிப்புக் குழு' பொதுமக்களின் வீடுகளிலுள்ள பெறுமதி வாய்ந்த பொருட்களை அழிப்பதிலும், கொள்ளை யடிப்பதிலும் ஈடுபடுகின்றது. பொருளாதார, கல்வி, கலாசார பெறு மானங்களை, அடை யாளங்களை எல்லாம்

> *யாழ்ப்பாணத்தில் இப்போது தட்டுப்பாடில்லாத ஒன்று இருக்கின்றதென்றால் அது மக்களின் நீண்ட காத்து நிற்கும் வரிசைத் தொடர்தான்.*

அழிப்பதைத்தான் இவ் இராணுவ 'அழிப்புக்குழு' மேற்கொண்டு வருகின்றது. அனேகமான எல்லாப் படித்தவர்களினதும் வீடுகளிலிருந்த புத்தகங்கள் ஒன்றில் சேதப் படுத்தப்பட்டோ அல்லது அழிக்கப்பட்டோ வருகின்றன. இந்த அழிப்புகளுக்கு பின்னால் வெளித் தெரி யாத ஒரு சக்தி இருந்து அவர்களை இயக்குவது, அவர்களது நடவடிக்கைகளைப் பார்க்கும் போது தெரிகிறது. இக்கொள்ளையர்களின் கைகளால் எழுதப்பட்ட அவர்களது எழுத்துக்கள் இதை உறுதி செய்கின்றன.

இதைவிட, இன்னொரு மூன்றாவது குழுவும் இயங்குவது தெரிகிறது. இக் குழு, மரங்களை அழிப்பதில் ஈடுபடுகிறது. தென்னை, பனை மற்றும் பழ மரங்களெல்லாம் அழித்தொழிக்கப்பட்டு வளமிழக்கச் செய்யப்படுகின்றன. வீட்டின் கூரைகள், யன்னல்கள் எல்லாம் சூறை யாடப்பட்டு இராணுவக் காவலரண் களைப் பலப்படுத்தவும், வடிவமைக்கவும் பயன் படுத்தப்படுகின்றன. பயிர் நிலங்கள் அரண்கள் அமைப்பதற்காக கிண்டிக் கிளறப்படுகின்றன.

அது மாத்திரமல்ல ............ உள்ளூர் வாசிகள் சிலரும் இராணுவத்தினருடன் சேர்ந்து பெறுமதியான வீட்டுப் பொருட்களை யெல்லாம் எடுத்துச் செல்கின்றனர். இது தொடர்கின்ற ஒரு நிகழ்வாக உள்ளது.

இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் பெறு மதியான தளபாடப் பொருட்களில் ஒரு பகுதி 'விறகுக்காகவே பயன்படுத்தப்படுகிறது. இன்னும் சிலரோ இராணுவத்துடன் சேர்ந்து கூரைகளை அகற்றி வேறு ஆட்களுக்கு விற்கிறார்கள். இந்தக் களவு வியாபாரம் கண்டுகொள்ளப்படுவதில்லை. கள்வர்களைப் பிடிக்க பொலிசார் சென்றால்தானே அவர்கள் பயப்பட வேண்டும். அங்கு எல்லாம் வழமையற்ற நிகழ்வுகள் தான். உண்மையில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் ஒரு இராணுவ அரசின் ஆட்சியே நடைபெறுகின்றது. இது இங்கு மட்டுமல்லாமல் இன்னும் பல இடங்களுக்குப் பரவினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆயிரக்கணக்கான மக்கள் தெற்கு நோக்கிப் புறப்பட காத்து நிற்கிறார்கள். ஆனால், இந்தப் புறப்படும் நடவடிக்கையில் இராணுவத்தின் ஒத்துழைப்பு திருப்தியற்றதாகவே உள்ளது. சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி பணம் சம்பாதிக்கவே இராணுவத்தினர் முயல்கிறார்கள். 'சதொச' போன்ற நிறுவனங்களும் பண உழைப்பையே கருதிச் செயல்படுகின்றன. ஆனால் அரசோ, தாங்கள் தமிழ் மக்களுக்கு உதவிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறது.

அப்பாவிப் பொதுமக்களின் கண்மூடித் தனமான கைது, எந்த நேரமாயினும் – எந்த இடமாயினும் இடம்பெறும் சூழ் நிலையே காணப்படுகின்றது.

யாழ். பருத்தித்துறை, யாழ். சாவகச்சேரி பயணப் பாதைகளில் எண்ணற்ற தடை முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் எவருக்குமே விதி விலக்கில்லை. கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகளை ஏந்திய பெண்கள், வயோதிபர்கள், குழந்தைகள், சிறுவர்கள் எல்லோருமே கடும் வெய்யிலில் மணிக் கணக்காக காத்துக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள், உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், வியாபாரிகள், நோயாளிகள் எனப் பல தரப்பினரும் பாதிப்புக் குள்ளாகின்றனர்.

இத் தடை முகாம்களில் வைத்து சிறுவர்களது உடல் பரிசோதிக்கப்படுவ துடன் அவர்களது புத்தகங்களும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன.

அண்மையில் நள்ளிரவில் திடீரென வீட்டுக்குள் புகுந்த படையினரால் யாழ். ஆயர் இல்லத்தில் பாலர் பாடசாலையில் கற்பிக்கும் இளம் ஆசிரியை ஒருவர் பிடித்துச் செல்லப்பட்டார்.

கைதான ஜெ. ரஜனி என்ற இப்

> *இராணுவத்தின் அழிப்புக் குழு மக்களின் பெறுமதி வாய்ந்த பொருட்களை அழிப்பதிலும், கொள்ளையடிப்பதிலும் மக்களின் பொருளாதார, கல்வி, கலாசார பெறுமானங்களை, அடையாளங்களை எல்லாம் அழிப்பதையே சிரத்தையாகச் செய்து வருகின்றது.*

பெண்ணை விடுவிக்கக் கோரிய அவரது தாயார் படையினரால் காலால் உதைக்கப் பட்டு காயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ள்ளார்.

பாசையூரில் உடை தைத்துத் தர தாமதம் செய்துவிட்டார் என்ற காரணத்துக்காகக் தையல் கடைக்காரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குருநகர் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் கல்முனைக் கடற்பரப்பில் வைத்து பிடித்துச் செல்லப்பட்டார். யாழ். நகரப் பகுதியில் டேவிட் வீதியில் இரவு தொலைக்காட்சி பார்க்கச் சென்ற இரு அப்பாவி இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமைகள் கிட்லர் காலத்து பெல்சன் (Belsen) முகாம் நிகழ்வு களை ஒத்ததாக இருக்கின்றன. ஆனால் அரசு, இப்போது இவ்வாறான நிலைமை களுக்கு நேர்மாறாக பாலாறும், தேனாறும் ஓடும் ஒரு பிரதேசமாகவே யாழ்ப்பாணத்தைச் சர்வதேச சமூகத்திற்கு காட்டிக் கொண்டிருக்கிறது. ❑

---

## தமிழீழத்துக்கு எதிராக இருக்கின்றவர்கள்...

மாட்டைப் பாடிக் கறக்க வேண்டும்" என்று சொல்வது போல, சட்டமன்றத்திலே நான் இந்த முறை பேசுகிற பொழுது ஒன்றைச் சொன்னேன்.

"கடந்த கால ஜெயலலிதா ஆட்சி, தமிழகத்திலே உள்ள ஈழத் தமிழருடைய பிள்ளைகளை படிப்பதற்கு மறுத்துவிட்டது. கல்லூரிகளிலோ, பள்ளிகளிலோ ஈழத் தமிழருடைய பிள்ளைகளைச் சேர்க்கக் கூடாது என்று ஆணை பிறப்பித்திருந்தது. கலைஞர் அவர்களே, நீங்கள் உலகத் தமிழர்கள் மீதெல்லாம் நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள், உலகத் தமிழர்களெல்லாம் உங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, உங்களுடைய ஆட்சிக் காலத்தில் இப்படிப்பட்ட ஒரு கொடுமையான சட்டம் இருக்கலாமா? தாயுள்ளத்தோடு இதனை நீங்கள் நீக்க வேண்டும்; ஈழத் தமிழர்களுடைய பிள்ளைகள், பள்ளிகளிலும் – கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களிலும் சேர்வதற்கு வாய்ப்பை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும்' என்று சொல்லி சட்டமன்றத்திலே நான் கேட்டுக் கொண்டதன் விளைவாக, அடுத்த இரண்டாவது நாளிலேயே டாக்டர் கலைஞர் அவர்கள் ஈழத் தமிழர்களுடைய பிள்ளைகளை கல்வி நிலையங்களிலே சேர்ப்பதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள் என்பதனையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்."

எதற்காகச் சொல்லுகிறேன் என்று சொன்னால், நாம் எங்கிருந்தாலும் சரி, யார் எந்தச் சூழ்நிலையிலே இருந்தாலும் சரி, எந்த அரசியல் இயக்கத்திலே இருந்தாலும் சரி, அல்லது எந்த மதத்தைச் சார்ந்தவர்களாயிருந்தாலும் சரி, நாம் நம்முடைய பங்களிப்பை எந்த வகையில் வேண்டுமானாலும் அந்த ஈழத் தமிழர்களுக்காக – ஈழப் போராளிகளுக்காக கொடுத்துக் கொண்டிருக்கலாம் என்பதற்காகவே நான் இதனைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆக, பாட்டாளி மக்கள் கட்சியினராகிய நாம், என்றைக்கும் தமிழீழம் வளர்வதற்கு உதவுவோம். இந்தியாவிலேயுள்ள பல அரசியற் கட்சிகள் சில நேரத்திலே, "இராணுவத்தை அனுப்பு" என்று சொன்ன நேரத்திலே கூட, நாம் அதைத் தவறு என்றோம். அது இன்றைக்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நாம் கொடுக்க வேண்டியது இராணுவ உதவியல்ல, மனித நேய உதவிகள் எனக் கூறினோம்.

இன்றைக்கு இந்தியா போன்ற பெரிய நாடு, தமிழீழத்தை அங்கீகரித்தால், உலக நாடுகளெல்லாம் இன்றைக்கு ஓடோடி வந்து உதவுவார்கள். ஆனால், இன்றைக்கு என்ன நினைக்கிறார்கள்? பக்கத்திலே இருக்கக்கூடிய தமிழ் நாடோ அதைச் சார்ந்திருக்கிற இந்திய நாடோ இதைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளாமல், கவலைப்படாமல் இருக்கிற பொழுது நமக்கு மட்டும் என்ன வந்தது என்று சொல்லிக் கொண்டு ஏனையோர் இன்றைக்கு இருக்கிறார்கள்.

ஆகவேதான், இந்திய அரசையும் – தமிழ் நாட்டு அரசையும் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு – வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம், தமிழீழத்தை இந்திய அரசு அங்கீகரிப்பதற்கான அத்தனை முயற்சிகளையும் பாட்டாளி மக்கள் கட்சியானது, இன்றைக்குத் தொடர்ந்து செய்யும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு

வாழ்க தமிழீழம்!
வெல்க தமிழீழம்!!
"தமிழர்களுக்கென்று ஒரு நாடு அமைகின்ற நாளே, தமிழர்களுக்குத் திருநாள்" என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, வாய்ப்புக் கொடுத்தவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

நன்றி உலகத்தமிழர்

படிப்பகம்

www.padippakam.com



# தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை

விடுதலைப் புலிகள் தமிழீழ Liberation Tigers Of TAMIL EELAM

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்
27 - 11 - 1996.

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே,

**இன்றைய நாள் வணக்கத்திற்குரிய நாள்.**

ஆயிரம் ஆயிரம் சுதந்திரச் சுடர்களாக, எமது விடுதலைக் கோவிலை அலங்கரித்து நிற்கும் எமது மாவீரர்களுக்கு, இன்று நாம் வணக்கம் செலுத்திக் கௌரவிக்கும் புனித நாள்.

இன்றைய நாள், சாவுக்கு கலங்கி அழும் சோக நாள் அல்ல. அன்றி, துயரத்தில் உறைந்து போகும் துக்க நாளுமல்ல. இன்று தியாகிகளின் திருநாள்.

ஒரு சத்திய இலட்சியத்திற்காக, தம் இன்னுயிரை ஈகம் செய்த எம் இனிய வீரர்களை, இன்று நாம் எமது நெஞ்சப் பசுமையில் நினைவு கூர்ந்து கௌரவிப்போம். அவர்களது வீரத்திற்கும், அதியுயர்ந்த தியாகத்திற்கும் தலைகுனிந்து வணக்கம் தெரிவிப்போம்.



ஈடிணையற்ற ஈகங்கள் மூலம், விடுதலைக்கு நாம் கொடுத்த விலை அளப்பற்றது. எமது மக்கள் இறைமை பெற்று பெருமையுடன் வாழவேண்டும் என்ற இலட்சியத்திற்காக, எமது மாவீரர்கள் புரிந்த தியாகங்கள் உலக வரலாற்றில் ஒப்பற்றவை. எந்த ஒரு நாட்டிலும், எந்த ஒரு காலத்திலும், எந்த ஒரு போராட்டத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புக்கள் எமது மண்ணில், எமது காலத்தில், எமது போராட்டத்தில் நிகழ்ந்திருக்கிறது. மானிட வரலாறு கண்டிராத ஒரு வீரகாவியம், எமது மண்ணில் படைக்கப்பட்டிருக்கிறது.

நீண்டகாலமாகத் தமிழரின் விடுதலை எழுச்சி, நெருப்பாக எரிந்து கொண்டிருக்கிறது. இந்த விடுதலைத் தீயை அணைத்துவிட, எமது எதிரியோடு கைகோர்த்து நின்று எத்தனையோ சக்திகள், எத்தனையோ வகையில் அயராது முனைந்து வருகின்றன. இதனால், எமது சுதந்திர இயக்கம் காலத்திற்குக் காலம் பல சரிவுகளை, பல திருப்பங்களை, பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. எந்தவித உதவியுமின்றி, எந்தவித ஆதரவுமின்றி, எமது பலத்திற்கு மிஞ்சிய பாரிய சக்திகளுக்கு எதிராக நாம் தனித்து நின்று போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இதனால், விடுதலைக்கு நாம் கொடுக்கும் விலை மிகப் பெரிது. தமது உயிரையே விலையாகக் கொடுத்து, தமிழரின் தேச சுதந்திரத் தீயை அணையாது காத்துவருபவர்கள் மாவீரர்கள். எனவே, மாவீரர்களை எமது தாயக விடுதலையின் காவற் தெய்வங்களாக நாம் கௌரவிக்க வேண்டும்.

நீண்டதாகத் தொடரும் எமது விடுதலைப் பயணத்தில், நாம் பல நெருப்பு ஆறுகளை நீந்திக் கடந்துள்ளோம். இந்த அக்கினிப் பிரவேசத்தில் நாம் அழிந்து போகாமல் நிலைத்து நிற்பதற்கு, எமது இலட்சிய உறுதிதான் காரணம். அடக்குமுறைக்கு ஆளாகி, இன அழிவைச் சந்தித்து நிற்கும் எமது மக்களுக்கு, தன்னாட்சி கோரி நாம் வரித்துக்கொண்ட இலட்சியம் நேரானது, சரியானது, நியாயமானது. அன்றிலிருந்து இன்றுவரை நாம் எமது கொள்கையை உறுதியாகப் பற்றி நிற்கிறோம். எமது இலட்சியமே எமது மலையான பலம். அந்த மலையான பலத்தில் நாம் நிலையாக நிற்பதால்தான், எமது இயக்கத்திற்கு ஒரு தனித்துவமும், முக்கியத்துவமும், சிறப்பான சரித்திரமும் உண்டு. தமிழீழத்தில் அதிர்ந்த அரசியற் பூகம்பங்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல், எனைய தமிழ்க் குழுக்களின் இலட்சியக் கோட்டைகள் தகர்ந்து போயின. எமது உறுதியை மட்டும் எந்தவொரு சக்தியாலும் உடைத்துவிட முடியவில்லை.

தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந்தியப் படையெடுப்பு, அன்று எமது உறுதிக்குப் பெரும் சவாலாக எழுந்தது. அன்றைய அந்த வரலாற்றுச் சூழலில், ஒரு உலக வல்லரசின் இராணுவ வல்லாதிக்கம் எம்மைப் பலமாக நெருக்கிய பொழுதும், நாம் எமது இலட்சியத்தைத் தளரவிடாது நெஞ்சுறுதியுடன் போராடினோம். அந்த ஆபத்தான கட்டத்தில், உறுதிதான் எமது இறுதி ஆயுதமாக இருந்தது. அந்த ஆன்மீக பலத்துடன், உலகின் மிகப் பெரிய ஆயுத பலத்தை எம்மால் எதிர்கொள்ள முடிந்தது.

இன்று, நாம் ஒரு புதிய சவாலைச் சந்தித்து நிற்கிறோம். ஒரு புதிய ஆக்கிரமிப்புப் போரை எதிர் கொண்டு நிற்கிறோம்.

எமது வரலாற்றுப் பகைச் சக்தியான சிங்கள பௌத்த பேரினவாதம், சந்திரிகா அரசு என்ற நிறுவன வடிவம் கொண்டு, தமிழினத்திற்கு எதிராக இன அழிப்புப் போர் ஒன்றை நடத்தி வருகிறது. சிங்களத்தின் முழுப் படை பலத்தையும் ஒன்று திரட்டி, வடபுலத்தில் தமிழரின் வரலாற்று நிலங்களை ஆக்கிரமித்து நிற்கிறது.

பெரிய தொகையில் படையணிகளையும், பெரிய அளவில் வெடிப் பொருள் சக்தியையும் பயன்படுத்தி, புலிகளின் படை வலுவை அழிப்பதுதான், இந்த ஆக்கிரமிப்புப் போரின் முக்கிய இராணுவ மூலோபாயமாக அமைந்தது. ஆயினும், இந்தக் குறிக்கோளை அடைவதில் சிங்கள இராணுவம் படுதோல்வியையே சந்தித்திருக்கிறது.

நான்கு புறமும் கடல் சூழ்ந்த குடாநாட்டுப் பகுதியில் புவியியல் ரீதியாக, எமக்குப் பாதகமான நிலப் பரப்பில் பெரும் மரபுவழிச் சமர்களைத் தொடுத்து, எமது படைவலுவை அழிக்க இராணுவம் திட்டமிட்டது. இந்தச் சூழ்ச்சிகர திட்டத்தை நாம் நன்கறிவோம். ஆகவே, எதிரியின் இராணுவப் பொறிக்குள் சிக்கிவிடாது, மிகவும் சாதுரியமாகப் போரிட்டு, தந்திரோபாயமான படை நகர்வுகளை மேற்கொண்டு, எமது படை வலுவைச் சீர்குலையாது நாம் பாதுகாத்தோம். இதன் காரணமாக, யாழ்ப்பாணச் சமரில் இராணுவத்தின் முக்கிய மூலோபாயம் கைகூடவில்லை என உறுதியாகச் சொல்லலாம்.

கெரில்லாப் போர் முறையைக் கையாளும் ஒரு விடுதலை இயக்கம், பெரும் உயிர்ச் சேதத்தைத் தவிர்க்கும் நோக்கில், படையணிகளைப் பின் நகர்த்திவரும் சில நிலப்பகுதிகளில் கட்டுப்பாட்டை இழப்பதும் தோல்வியைக் குறிக்காது. இதனை, ஒரு தற்காலிகப் பின்னடைவாகவே கொள்ளலாம். படை வலுவையும் போராட்ட உறுதியையும் தக்கவைத்துக் கொண்டால், எமக்குச் சாதகமான புறநிலைச் சூழலில், நாம் தெரிவு செய்யும் நேரத்தில், தாக்குதல்களை நடத்தி எதிரியின் படைவலுவை எம்மால் அழிக்க முடியும். இதனால், இழந்த பிரதேசங்களையும் நாம் மீட்டெடுப்பது சாத்தியமாகும். முல்லைத்தீவில் நாம் ஈட்டிய மகத்தான இராணுவச் சாதனை, இதற்கு ஒரு சிறப்பான உதாரணமாகும். இத்தாக்குதலில் சிங்களப் படைகளுக்கு பாரிய உயிர்ச்சேதத்தை விளைவித்து, எதிரியின் படைவலுவைப் பலவீனப்படுத்தியதோடு, இழந்த பிரதேசத்தையும் நாம் மீட்டெடுக்க முடிந்தது. எமது படைவலுவை நாம் தக்கவைத்துக் கொண்டதால்த்தான், இந்த வெற்றியை எம்மால் ஈட்ட முடிந்தது. அத்தோடு, எமது படை வலுவையும் நாம் மேலும் பலப்படுத்த முடிந்தது.

"சமாதானத்திற்கான போர்" என்றும், "தமிழரை விடுதலை செய்யும் படையெடுப்பு" என்றும், பரப்புரை செய்து ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆக்கிரமிப்புப் போர், தமிழரின் அமைதியைக் குலைத்து, தமிழரை அகதிகளாக்கி, தமிழரை அடிமைகளாக்கி, தமிழரின் சமூக – பொருளாதார வாழ்வைச் சீரழித்து, தமிழருக்கு என்றுமில்லாத பெரும் அவலத்தைக் கொடுத்திருக்கிறது.

சமாதானத் தத்துவம் பேசி, உலகத்தை ஏமாற்றியபோதும், இது தமிழருக்கு எதிரான போர் என்பதை, சந்திரிகா அரசு நடைமுறையில் காட்டியுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாடு, ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு வலயங்களாக துண்டுபோடப்பட்டு, மண்மேட்டு அரண்களும், முட்கம்பி வேலிகளும், மூலைக்கு மூலை காவற் சாவடிகளுமாக காட்சிதரும் தமிழரின் இப் புகழ் மிக்க வரலாற்று மண்ணில், ஒரு இராணுவப் பயங்கரவாத ஆட்சி நடைபெறுகிறது. கைதுகளும், சிறைவைப்பும், சித்திரவதைகளும், பாலியல் வல்லுறவுகளும், கொலைகளும், காணாமல்போதலும், பின் மனித புதைகுழிகளுக்குள் கண்டெடுக்கப்படுவதுமாக நிகழ்ந்துவரும் கோரமான சம்பவங்கள், ஒரு உண்மையைப் புலப்படுத்திக் காட்டுகிறது. அதாவது, இராணுவ ஆட்சி நடைபெறும் தமிழ்ப்பகுதிகளில், மிகமோசமான ஒரு இனஅழிப்புக் கொள்கை மறைமுகமாகச் செயற்படுத்தப்படுகிறது என்பதையே இது காட்டுகிறது.

ஆக்கிரமித்த பகுதிகளில் நிகழும் அட்டூழியங்களும், மற்றும் பரவலாகத் தென்னிலங்கையில் நடைபெறும் தமிழர் விரோத நடவடிக்கைகளும் சந்திரிகா அரசின் உண்மையான இனவாத முகத்தை அம்பலப்படுத்திக் காட்டுகிறது. முந்திய இனவாத அரசுகளை விட சந்திரிகாவின் ஆட்சிப்பீடம், தமிழரின் தேசிய ஆன்மாவை ஆழமாகப் புண்படுத்தியிருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

சந்திரிகா அரசு, தமிழருக்கு நீதி வழங்கப் போவதில்லை என்பதையும், தமிழரின் தேசிய பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்போவதில்லை என்பதையும் நாம் ஆரம்பத்தில் இருந்தே உணர்ந்து கொண்டோம். சமாதானப் பேச்சுக்களின் போது சந்திரிகா அரசு கடைப்பிடித்த கடுமையான போக்கும், விட்டுக்கொடாத மனப்பாங்கும்

தொடர்ச்சி 6 ம் பக்கம்...

படிப்பகம்

www.padippakam.com



# தேசியத் தலைவரின்...

எமக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. தமிழரின் சாதாரண வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அற்ப சலுகைகளை மறுத்து, இராணுவத்தின் மேலாதிக்க நலன்களைப் பேண முனைந்ததால், அன்றைய பேச்சுக்கள் அர்த்தமற்றதாக முடிவுற்றது. இராணுவப் பலத்திலும், இராணுவ அணுகுமுறையிலும், இராணுவத்தீர்விலும் நம்பிக்கை கொண்டிருந்ததால் பேச்சுக்களுக்கு முக்கியத்துவம் கொடாது, பேச்சுக்கள் முறிவடைவதற்கான புறநிலைகளையும் சந்திரிகா அரசு உருவாக்கியது. தமிழர் தாயகத்தில் இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டி, ஆயுத அடக்குமுறையின் கீழ் தமிழர்களை ஆட்சி புரிய வேண்டும் என்பதே, அன்றும் இன்றும், இந்த அரசின் ஆழமான அபிலாசையாக இருந்து வருகிறது.

இராணுவவாதமும் இனவாதமும் மேலோங்கி நிற்கும் இந்த அணுகுமுறையானது, இனப்பிரச்சினையை என்றும் இல்லாதவாறு சிக்கலாக்கியுள்ளது. சமாதானத்தின் கதவுகளை இறுக மூடியுள்ளது. போரை விரிவுபடுத்தி தீவிரமாக்கியுள்ளது. சிங்களத்தின் பொருண்மியத்தை சீரழித்துள்ளது. ஒட்டுமொத்தத்தில், சந்திரிகாவின் அரசாங்கம் இன்று மீள முடியாத ஒரு நெருக்கடிக்குள் சிக்குப்பட்டு நிற்கிறது.

சந்திரிகாவின், "சமாதானத்திற்கான போர்" தமிழரின் தேசிய வாழ்வைச் சீரழித்து இருப்பதுடன், முழு இலங்கையையுமே பேரழிவிற்குள் தள்ளி வருகிறது என்பதை, சர்வதேச சமூகம் இன்று உணரத்தொடங்கியுள்ளது. விரிவடைந்து செல்லும் போருக்கும், இராணுவ கடும் போக்கிற்கும் எதிராக உலகத்தில் இருந்து எழும் அழுத்தத்தை திசை திருப்பும் நோக்கில், சந்திரிகா அரசு சமாதான சமிக்ஞைகளை விடத் தொங்கியுள்ளது.

மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் என்றும், புலிகளுடன் பேசத் தயார் என்றும் சமீபத்தில் அறிக்கைகளை விட்டுவரும் சந்திரிகா, புலிகள் இயக்கம் ஆயுதங்களைச் சரணடையச் செய்ய வேண்டும் என்ற கேலிக் கூத்தான நிபந்தனையையும் முன்வைக்கிறார். எந்த ஒரு தன்மானமுள்ள விடுதலை இயக்கமும் இத்தகைய அவமதிப்பூட்டும் நிபந்தனையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் 'பயங்கரவாதம்' என்றும், அந்தப் போராட்டத்தைத் தலைமைதாங்கி முன்னெடுக்கும் எமது விடுதலை இயக்கத்தை 'பயங்கரவாத அமைப்பு' என்றும் சர்வதேச உலகில் தீவிர பரப்புரை செய்து, உள்நாட்டிலும் வெளியுலகிலும் எமது இயக்கத்திற்குத் தடை விதிக்க, இந்த அரசு பகீரத முயற்சிகளைச் செய்து வருகிறது. அதே வேளை, "ஒரு ஆண்டிற்குள் புலிகளை ஒழித்து விடுவோம்" என அறைகூவல்களை விடுத்து, போரைத் தொடர்வதற்குப் படைகளைத் தயார் நிலைப்படுத்தியும் வருகிறது. இந்தச் சூழலில், சந்திரிகா சமாதானம் பற்றிப் பேசுவது எமக்குச் சந்தேகத்தை எழுப்புகிறது.

நாம் சமாதானத்தின் விரோதிகள் அல்லர். அன்றி, சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதிரானவர்களும் அல்லர். நாம் வேண்டுவது, உண்மையான சமாதானத்தையே. எமது மக்கள், எமது மண்ணில் நிம்மதியாக, சுதந்திரமாக, அந்நியத் தலையீடு இன்றி அமைதியாக வாழ்ந்து, தமது அரசியல் வாழ்வைத் தாமே தீர்மானிக்கக் கூடிய உண்மையான, கௌரவமான, நிரந்தரமான சமாதானத்தையே நாம் விரும்புகிறோம். இந்தச் சமாதான வாழ்வைத் தமிழருக்கு வழங்க, சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் இணங்குமா என்பது சந்தேகத்திற்கு உரியது.

இனவிரோதமும், ஆதிக்க வெறியும், இராணுவத் தீர்வில் நம்பிக்கையும் கொண்ட எந்த ஒரு சிங்கள அரசும், தமிழரின் தேசியப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காணப் போவதில்லை. தமிழீழ மக்கள் வரலாற்று ரீதியாகக் கண்டு கொண்ட உண்மை இது. சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் பாதுகாவலனாகவும், அரசியல் பிரதி நிதியாகவும் விளங்கும் சந்திரிகா அரசு, இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, தமிழ் மக்களுக்கு உண்மையான சமாதான வாழ்வை உருவாக்கிக் கொடுக்கும் என நாம் நம்பவில்லை. இந்த நம்பிக்கையீனத்தின் அடிப்படையில்தான், நாம் மூன்றாம் தரப்பு நடுநிலையை நாடினோம். எதிர் காலத்தில் சமாதானப் பேச்சுக்கள் சாத்தியமாவதானால், அது சர்வதேச மத்தியத்துவத்துடன் நடைபெறவேண்டுமென ஒரு வருடத்திற்கு முன்னரே நாம் அறிவித்திருந்தோம். ஆனால், சந்திரிகா அரசு அப்பொழுது எமது யோசனையைக் கருத்தில் எடுக்கவில்லை. மாறாக, வடபுலத்தில் ஆக்கிரமிப்புப் போரை விஸ்தரித்து, இனநெருக்கடியை மோசமாக்கி, சமாதானப் பேச்சுக்கான சூழ்நிலையைக் கெடுத்தது.

தமிழர் மண்ணை ஆக்கிரமித்து, அந்த ஆக்கிரமிப்பை இராணுவ மேலாதிக்க நிலையாகக் கருதி, அதனைத் தனக்கு அனுகூலமான அழுத்தமாகப் பாவித்து, பேச்சுக்களை நடத்த சிங்கள அரசு எண்ணலாம். ஆனால் எம்மைப் பொறுத்தவரை, இவ்விதமான பேச்சுவார்த்தை சுதந்திரமானதாக, சமத்துவமானதாக அமையாது. ஏனெனில் இராணுவப் பலத்தை, துருப்புச் சீட்டாக வைத்து எமது மக்களின் உரிமைகளுக்காகப் பேரம் பேச முயலும் ஒரு அரசிடம் நாம் நீதியை எதிர்பார்க்க முடியாது. அதனால் தான், இராணுவ ஆக்கிரமிப்பின் அழுத்தம் நீங்கிய சுமூகமான இயல்பு நிலையில், பேச்சுக்கள் நடைபெறுவதை நாம் விரும்புகின்றோம். படைகள் விலகுதல், நெருக்கடியைத் தணித்தல், இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் ஆகியன அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு முன் நிகழ்வாக அமைதல் அவசியம் என்பதே எமது நிலைப்பாடாகும். இப்பிரச்சினைகள் பற்றிப் பேசி, ஓர் உடன்பாட்டைக் காணவும் நாம் தயாராக இருக்கிறோம்.

எமது நியாயமான நிலைப்பாட்டை, சந்திரிகா அரசு ஏற்றுக்கொள்ளும் என நாம் எதிர்பார்க்கவில்லை. சிங்கள-பௌத்த பேரினவாதமானது, காலம் காலமாக, இராணுவ மேலாண்மையில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வருகிறது. இராணுவ பலத்தின் நிழலின் கீழேயே சந்திரிகாவினது ஆட்சியும் நடக்கிறது. எனவே, இராணுவ பலத்தைக் கைவிட்டு, தார்மீக பலத்தின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க, சந்திரிகா அரசு முன்வருமா என்பது சந்தேகத்திற்குரிய விடையமே.

சிங்கள ஆட்சியாளரிடம் கைநீட்டி நின்று, நாம் எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. நாமே எமது உரிமைகளைப் போராடி வென்றெடுக்க வேண்டும். போராடாது, இரத்தம் சிந்தாது, சாவையும் அழிவையும் சந்திக்காது, தியாகங்கள் புரியாது எந்தவொரு தேசமும் விடுதலை பெற்றுக் கொண்டதாக வரலாறு இல்லை.

ஆகவே, நாம் போராடுவோம். எமது இரத்தத்தை விலையாகக் கொடுத்தும் எமது இலட்சியத்திற்காகப் போராடுவோம். வெற்றிகளை ஊக்கமாக எடுத்து, பின்னடைவுகளைச் சவாலாக ஏற்று நாம் தொடர்ந்து போராடுவோம் எவ்வித இன்னல்கள் வந்தாலும், எவ்விதத் துன்பங்கள் நேர்ந்தாலும் நம்பிக்கை இழக்காது, நாம் தொடர்ந்து போராடுவோம். எமது மண்ணிலிருந்து சிங்களப் படைகளை விரட்டும் வரை, எமது தேசத்திற்கு விடுதலை கிட்டும் வரை, எமது மக்களுக்கு விடிவு ஏற்படும் வரை நாம் உறுதி தளராது துணிந்து போராடுவோம்.

ஆக்கிரமிப்பாளனின் அடக்குமுறைக்கு ஆளாகி, அவலக் குரல் எழுப்பி நிற்கும் எமது நேசத்திற்குரியவர்களின் துயரக் கண்ணீரைத் துடைப்போம் என உறுதியெடுத்து, மாவீரர்களுக்கு இன்று எமது வீரவணக்கத்தைச் செலுத்துவோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்""

வே. பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

# மாவீரரும் சமூக மாற்றமும்

**1996** ஆம் ஆண்டு மாவீரர் நாளை முன்னிட்டு, தமிழீழ விடுதலைக்காகத் தமது இனிய உயிர்களை ஈந்த மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வுகள் தமிழீழ மண்ணிலும், தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் உணர்வு பூர்வமாக இடம் பெற்றுள்ளன.

இம் மாவீரர்களை நினைவு கூரும் போது, தமிழீழ விடுதலைப் போராட்டம் எமது சமூகத்தில் ஏற்படுத்திமிருக்கும், ஏற்படுத்தி வரும் ஆரோக்கிய மான மாற்றங்கள் குறித்த நினைவுகள் நெஞ்சிலே எழு கின்றன.

எல்லாவற்றினையும் தம்மு டையதாக்கிக்கொள்ளும் மனப்பா ங்கில் வளர்ந்து வந்த தமிழர் சமுதாயத்தில், எமது எதிர்கால சந்ததியின் நல்வாழ்வுக்காகத் தமது நிகழ்கால வாழ்வினை அர்ப்பணித்திருக்கும் இம் மாவீரர்கள் வரலாறு, தமிழர் வரலாற்றில் புதிய அத்தியா யத்தினை எழுத ஆரம்பித்து ள்ளது. சுயநலம் என்ற தளத்தினை விட்டுப் பொது நலம் என்ற தளத்திலிருந்து பிரச்சினைகளைப் பார்க்கவும், ஆராயவும் தேவையான மனப்பக்குவத்தினை இம் மாவீரர்களின் அர்ப்பணிப்புக்கள் எமக்கு அளித்துள்ளன.

விடுதலைப் போராட்டத்தில் அளப்பரிய சாதனைகளைப் புரிந்த இம் மாவீரர்களின் செயற்பாடுகள், அம் மண்ணில் எத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளன. 300 ஆண்டு கால அடிமை வாழ்வில் ஊறிப்போய், கூனிக் குறுகி, அதிகாரத்திற்குத் தலைவணங்கி, பதவிக்காகத் துரோகம் புரிந்து வந்த



தாக்குதல் திட்டமிடலின் போது ஆண் போராளிகளுடன் சமமாகப் பெண் போராளிகள்...

தொடர்ச்சி 7 ம் பக்கம்...

www.padippakam.com



# மாவீரரும் சமூக ...


தமிழரின் அரசியல் வரலாற்றில், முதன் முதலில் பெரும் அழுத்தங்களையும் எதிர்த்து நின்று, சொந்தக் காலில் நின்று செயற்படும் ஒரு புதிய தலைமுறை இம் மாவீரர்களினூடாக உருவாகியுள்ளது. இது வாயினாலோ அல்லது எழுத்தினாலோ இலகுவில் வெளிப்படுத்தி விடுவதைப் போல், நடைமுறையில் இலகுவில் அடையக்கூடிய சாதனையல்ல. இது குறித்து தமிழீழப் பேராசிரியர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், **"போராட்டம் தோன்றி வளர்ந்தது என்பதனை விட, எமது சமூகத்திலிருந்து இப்படி ஒரு அர்ப்பணிப்பு மிக்க போராட்டம் தோன்றி வளர்ந்திருக்கின்றது என்பதே முக்கியமான விடயம்"** எனக் குறிப்பிட்டிருந்தது இங்கு நினைவு கூரத்தக்கது.

எமக்குள், எம்மை அறியாமலேயே அடிமைத்தனம் ஒளிந்திருக்கிறது. இது மிக நீண்ட கால அடிமை வாழ்வினால் ஏற்பட்ட உளவியல் தாக்கத்தின் விளைவாகும். மேலதிகாரங்களுக்குப் 'பந்தம்' பிடிப்பது, செல்வாக்குள்ளவர்களை நியாயமான காரணத்துக்காகவும் எதிர்க்கத் தயங்குவது, சொந்த நலன்களுக்காக பொதுநலன்களை மறப்பது போன்றவை, நீண்ட காலமாக எமது அடிமைத்தனத்தின் வெளிப்பாடாக எமக்குள் ஊறிப்போயுள்ளன.

இன்று புதிய தலைமுறை இவ்வடிமைத் தளையினை அறுத்தெறிந்து வளர்கின்றது. அச்சம் என்றால் என்ன என்று தெரியாதவர்களாய் இம் மாவீர்கள் புரிந்த சாதனைகள், எமக்கும் எமது அடிமைத்தனத்திலிருந்து விடுபட ஊக்கம் அளிக்கின்றது. இன்றைய புதிய தலைமுறை தொடர்பாக யாழ். பல்கலைக்கழகத்தின் உச்சப் பொறுப்பிலுள்ள பேராசிரியர் ஒருவரோடு கலந்துரையாடிய போது, அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

**"எங்களைப் போலவோ அல்லது உங்களைப் போலவோ அல்ல, உறுதி மிக்க ஒரு புதியத் லைமுறை அங்கு உருவாகிக் கொண்டிருக்கிறது."**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியினால் எம் மத்தியில் நிலவிய சமூக ஒடுக்குமுறையின் கொடூரம் குறைந்துள்ளது. சாதி ஒடுக்குமுறையினைப் பொறுத்தவரை, காலாதி காலமாக எமது சமூகத்தில் பெருமை பேசும் விடயமாக இருந்த சாதி அமைப்பு, இன்று



தமிழீழ விடுதலைப் போராட்டப் பயிற்சிக்களம் ஒன்றினைச் சித்தரிக்கும் மரத்தில் செதுக்கப்பட்ட ஓவியமொன்று

அவமானத்திற்குரியதாக மாறியிருக்கின்றது. இன்று சாதிப் பாகுபாடு பற்றி எவரும் வெளிப்படையாகப் பேசினால், அவர் பெரும் அவமதிப்புக்கு உள்ளாக்கப்படுவதனை அவதானிக்கிறோம். சாதி குறித்துப் பேசுவது குறைந்த பட்சம், 'நாகரீகக் குறைவானது' என்ற எண்ணம் பரவலாகச் சமூகத்தில் ஊடுருவியுள்ளது. சாதி குறித்துப் பேசிப் பெருமைப்பட்ட சமூகத்தில், சாதி என்ற பெயரால் ஒடுக்கு முறையினைப் புரிந்த ஒரு சமூகத்தில், இன்று சாதி குறித்துப் பேசுவது அவமானத்துக்குரியது என்ற சிந்தனைப் போக்கு மேலெழுந்து வந்தமைக்கு, இம் மாவீரர்களின் தியாகம் ஒரு அடிப்படைக் காரணமாகும்.

நூற்றாண்டுகளாக நிலவி வந்த சாதியமைப்பு, மிகக் குறுகிய காலத்தில் தன்னை அழித்துக் கொள்ளாது. படிப்படியாக, சிந்தனைப் போக்கிலும் பொருளாதார உறவுகளிலும் ஏற்படும் மாற்றமே, சாதி அரக்கனை எமது சமூகத்திலிருந்து துரத்தி அடிக்கும். இத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தும் பணியினை, தமிழீழ விடுதலைப் போராட்டம் செவ்வனே செய்து வருவதனை நடைமுறையில் உணர முடிகின்றது.

எமது சமூகத்தில் ஆணாதிக்க ஒடுக்கு முறைக்குட்பட்டிருந்த பெண்கள், இன்று புத்துணர்வுடன் வெளிப்படுவதனை அவதானிக்கும் போது, தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏற்படுத்தி வரும் ஆரோக்கியமான மாற்றம் துல்லியமாகத் தெரிய வருகின்றது. களத்திலே ஆண்களுக்கு நிகராகப் பெண் போராளிகள் புரிந்து வரும் சாதனைகள், அமைப்பு ரீதியில் ஒருங்கிணைந்து பெண்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகளுக்கு எதிராகச் செயற்பட்டு வருதல் போன்றவை, "சமூகத்தில் பெண்களுக்குத் தம்மால் ஏதும் செய்ய முடியாது" என்ற மனப்பாங்கிலிருந்து விடுபட்டு, தம்மாலும் சாதனைகள் புரிய முடியும் என்ற புதிய உத்வேகத்தினை அளித்துள்ளது. ஆண்கள் மத்தியிலும், பெண்கள் தொடர்பான 'குறைமதிப்பீடு' நீங்கி, பெண்களின் சக்தியினை வியப்போடு பார்க்கும் நிலையினை இன்று விடுதலைப் போராட்டம் ஏற்படுத்தியுள்ளது. இச் சூழலின் வளர்ச்சி எம் சமூகத்தில் ஓர் ஆரோக்கியமான **"சம உரிமைக் கோட்பாடு"** தோற்றம் பெறுவதற்கு இட்டுச் செல்லும்.

ஊழல், பொதுச் சொத்தினை விரயமாக்குதல், சுரண்டல் போன்ற சமூக விரோதச் செயற்பாடுகள் தொடர்பான சமூகத்தின் சிந்தனைப் போக்கு, முன்னையதனை விடக் கடுமையாகி இருப்பதனையும் காண முடிகின்றது. மேற் குறிப்பிட்ட நடவடிக்கைகளைப் புரிபவர்களுக்கு எதிராக வெளிவரும் கண்டனங்கள் மிக மிகக் காத்திரமானது. இது ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கான ஒரு நல்ல அறிகுறியாகும்.

மொழி, கலை, பண்பாடு தொடர்பாக சமூகம் மிக மிக விழிப்படைந்தமையினை இன்றைய நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன. மொழியினைத் தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன. அடிமைப்பட்டிருந்த ஒரு சமூகம் விடுதலையடைந்த பின், அடிமை வாழ்வினால் கலப்புற்றிருந்த தமது மொழியினைத் தூய்மைப்படுத்துவதனை உலகளாவிய வரலாற்றில் காண முடிகின்றது. உதாரணமாக நோர்வே, டென்மார்க்கின் ஆளுமைக்குட்பட்டிருந்த காலத்தில் மொழி ரீதியாகவும் டென்மார்க்கின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. அதன்பின் 1905 ஆண்டு சுவீடனிடமிருந்து நோர்வே தன்னை விடுவித்துக் கொண்ட பிறகு, நோர்வேஜிய மொழியினைத் தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின. இத் தூய்மையாக்கல் இன்று புதிய நோர்வேஜிய மொழியினை உருவாக்கியுள்ளது.

இதேபோல், இன்று விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே. 'தமிழீழம்' தமது மொழியினைத் தூய்மைப்படுத்த ஆரம்பித்துள்ளது. எமது தேசிய கலை வடிவங்கள் தொடர்பான புதிய சிந்தனைகளும், அவற்றிற்கான தேடல்களும் ஆரம்பித்தமை மட்டுமின்றி, அவற்றிற்கான அங்கீகாரமும் கிடைக்க ஆரம்பித்துள்ளன.

ஆய்வுத் துறைகளில் தீவிர அக்கறையும் ஈடுபாடும் எழுந்துள்ளன. எதிரியின் பொருளாதாரத் தடையிலிருந்து விடுபடுவது தொடர்பாகவும் எதிர்காலத்தில் ஒரு தன்னிறைவு பொருளாதாரத்தைக் கட்டி யெழுப்புவது தொடர்பாகவும் எழுந்த விழிப்புணர்வு, இன்று ஒரு ஆய்வு தொடர்பான அக்கறை கொண்ட சமூகம் ஒன்றினை உருவாக்கியுள்ளது.

எதிரியினை எமது பிரதேசத்திலிருந்து அகற்றுதல் என்பதோடு, எமது சமூகத்துக்குள்ளும் இலகுவில் சாதிக்கப்பட முடியாத பல மாற்றங்களை விடுதலைப் போராட்டம் ஏற்படுத்தி வருகின்றது. எதிரியின் கொடூரமான ஒடுக்குமுறைக்குள்ளும் இம் மாவீரர்களின் அர்ப்பணிப்பும் வீரமும் நிறைந்த செயற்பாடுகள் மூலம், ஒரு ஒளிமயமான எதிர்காலம் உள்ள ஒரு தேசம் எமக்காக உருவாகி வருகின்றது. சமத்துவம் மிக்க, ஊழல் அகன்ற, தேசப்பற்றுள்ள, விஞ்ஞான தொழில் நுட்ப - சமூக விஞ்ஞான ஆய்வு நோக்குக் கொண்ட, அடிமைப் புத்தியற்ற ஒரு சமூகத்தில் தமிழீழம் தலை நிமிர்வது நிச்சயம்.

**எதிரியினை எமது பிரதேசத்திலிருந்து அகற்றுதல் என்பதோடு, எமது சமூகத்துக்குள்ளும் இலகுவில் சாதிக்கப்பட முடியாத பல மாற்றங்களை விடுதலைப் போராட்டம் ஏற்படுத்தி வருகின்றது. எதிரியின் கொடூரமான ஒடுக்குமுறைக்குள்ளும் இம் மாவீரர்களின் அர்ப்பணிப்பும் வீரமும் நிறைந்த செயற்பாடுகள் மூலம், ஒரு ஒளிமயமான எதிர்காலம் உள்ள ஒரு தேசம் எமக்காக உருவாகி வருகின்றது. சமத்துவம் மிக்க, ஊழல் அகன்ற, தேசப்பற்றுள்ள, விஞ்ஞான தொழில் நுட்ப - சமூக விஞ்ஞான ஆய்வு நோக்குக் கொண்ட, அடிமைப் புத்தியற்ற ஒரு சமூகத்தில் தமிழீழம் தலை நிமிர்வது நிச்சயம்.**

மாவீரர்களின் அர்ப்பணிப்பினால் கட்டி வளர்க்கப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டம், எமது சமூகத்தில் ஏற்படுத்தி வரும் மாற்றங்கள் சமூக, மானுடவியல் கண்ணோட்டத்தில் விரிவான ஆய்வுக்குரிய விடயங்களாகும். இங்கு குறிப்பிட்டுள்ளவை மிக மேலெழுந்த வாரியான சில விடயங்கள் மட்டுமே.

எமது மாவீரர்களின் சாதனையை, ஒரு ஒழுங்கு முறைக்குட்பட்ட ஆய்வுக்குட்படுத்தி, அதனைச் சர்வதேசம் அங்கீகரிக்கக்கூடிய விதத்தில் வெளிப்படுத்தும் பணி, எமது சமூக விஞ்ஞானிகளிடம் உள்ளது. எமது சமூகத்தில், சமூக விஞ்ஞானிகள் என்று கூறக் கூடியளவுக்கு மிக மிகக் குறைந்த எண்ணிக்கையினை உடைய அறிவு ஜீவிகளுக்கு முன் இப்பணி காத்திருக்கிறது. ✳

படிப்பகம்

www.padippakam.com



செய்திக் கண்ணோட்டம்:

# கெடுகுடி சொற் கேளாது

"யுத்தத்தை வாழ்க்கையாகக் கொண்டுள்ள போராளிகளை விட, பொது மக்களாகிய உங்களுக்கு நிம்மதி தேவை. நிவாரணம் தேவை. மேலும் யுத்த சூழ்நிலையில் வாழ்வதற்கான விருப்பமின்மையையும், அதிருப்தியையும் சகல துறைகளிலும் தமிழ் மக்களாகிய நீங்கள் காட்டியுள்ளீர்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் திணித்த பல்வேறு கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்து வந்து சேர்ந்துள்ளீர்கள். ஒரு புதிய வாழ்க்கையையும், அவ் வாழ்க்கையை எதிர்பார்த்துமே அவ்வாறு செய்துள்ளீர்கள். நீங்கள் இழந்த ஊர்மனைகளையும் தோட்டம் துரவுகளையும், வாழ்க்கை வழிமுறைகளையும் மீண்டும் உங்களுக்குப் பெற்றுத்தர நாங்கள் அயராது உழைப்போம். நீங்கள் கட்டுப்பாடின்றி சுதந்திரமாக உலாவக்கூடிய ஒரு வட பிரதேசத்தை மீண்டும் உருவாக்குவதற்கு அரசு மனப்பூர்வமாகவும் நேர்மையாகவும் அரும்பாடுபட்டு வருகின்றது.
மிகக்கூடிய கெதியில் ஈவிரக்கமற்ற விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து, வடக்கு விடுவிக்கப்பட்டு அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். அத்துடன், கோர யுத்தமும் முடிவடைந்துவிடும். உங்களது வாழ்க்கை பற்றிய எதிர்பார்ப்புகளை மீண்டும் உயிரூட்டி உங்களை நிம்மதியாக வாழவைக்கும் சூழலை ஏற்படுத்த எம்மால் முடியும். போலி இராட்சகர்களாகச் செயற்பட்டுப் பொதுமக்களைப் படுபாதாளத்துக்கு இட்டுச் செல்லும் துரோக சக்திகளை முறியடிக்கும் ஆற்றல் அரசுக்கு இருக்கின்றது"

இந்த நீண்ட வாசகத்தின் சொந்தக்காரர் வேறு யாருமல்ல.

சாட்சாத் சிறிலங்காவின் மாட்சிமை தங்கிய சனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கா அவர்களே, இந்த முத்துக்களை உதிர்திருக்கின்றார். ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு.

**ஒரு ஈயைப் பார்த்து சிலந்தி சொல்லிற்றாம், " எனது விருந்தினர் அறைக்கு வா" (Come to my parlour) என்று. சனாதிபதி சந்திரிகா தமிழ் மக்களுக்கு விடுத்த அழைப்பிற்கும் சிலந்தி, ஈக்கு விடுத்த அழைப்பிற்கும் எந்தவித வித்தியாசமும் இருப்ப தாகத் தெரியவில்லை. மாறாக சந்திரிகாவிற்கும் சிலந்திக்கும் இடையில் நிறைய ஒற்றுமை இருக்கிறது.**

இந்த ஒற்றுமையைத் தமிழ் மக்கள் எதிர்பார்த்ததைவிட படு வேகமாகவும், படு கச்சிதமாகவும் சனாதிபதி சந்திரிகாவும் அவரது இனவெறியிடித்த சிங்கள இராணுவமும் நிரூபித்து வருகின்றது. பொது மக்களாகிய உங்களுக்கு நிம்மதி தேவை. நிவாரணம் தேவை... என்று சொல்லிய சனாதிபதி சந்திரிகாவும் அவரது ராணுவமும் தமிழ் மக்களுக்கு "நிரந்தர நிம்மதியை" இந்த உலகத்தில் இருந்தே நிரந்தர விடுதலையை" அளித்து வருகிறது.

தமிழ் மக்களின் நின்மதியைக் கெடுத்தவர்கள், தமிழ் மக்கள் மீது வரலாறு காணாத முழு அளவிலான ஆக்கிரமிப்பு யுத்தம் ஒன்றைத் திணித்தவர்கள், அவர்களது உயிரைக் குடித்தவர்கள், உடமையை நாசமாக்கியவர்கள், கற்பைக் கெடுத்தவர்கள், கண்ணீரும் கம்பலையுமாக அலைய விட்டவர்கள், அவர்கள் உலையில் மண்ணைப் போட்டவர்கள், இன்று நின்மதி பற்றியும் நிவாரணம் பற்றியும் இழந்த ஊர்மனைகள் பற்றியும் தோட்டந் துரவுகள் பற்றியும் பேசுவது, "சாத்தான் வேதம் ஓதிய கதை" யாக இருக்கிறது. அல்லது "ஆடுகள் நனைகிறது என்று அழுத ஓநாய்" இன் கதைபோல் இருக்கிறது.

யாழ்ப்பாண மக்களை விடுதலைப் புலிகளின் கோரப்பிடியில் இருந்து விடுவிக்கப் போவதாகச் சொன்ன சந்திரிகா இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டைத் திறந்தவெளிச் சிறைச் சாலையாகவும், சித்திரவதைக் கூடமாகவும், கொலைக் களமாகவும் மாற்றி அமைத்துள்ளார். இன்று சுற்றிவளைப்பு, கைது, சித்திரவதை, பாலியல்வன் முறை, சோதனை நாளும் பொழுதும் நடைபெறுகிறது. தாலி கட்டிய கணவன் முன் மனைவியின் துகிலுரிதல், பெற்ற தாயின் முன் மகளின் துகிலுரிதல் என்பவை சர்வ சாதாரண காட்சியாகி விட்டன.

இன்று சனாதிபதி சந்திரிகாவின் இராணுவத்துக்கு யாரைப் பார்த்தாலும், அவர்கள் பெண்ணாக இருந்தாலும் சரி, ஆணாக இருந்தாலும் சரி, விடுதலைப் புலியாகவே தென்படுகிறார்கள். அதிலும், வயதில் குறைந்த இளைஞர்களும், யுவதிகளும் அசல் புலிகளாகவே சிங்கள இராணுவத்துக்குத் தோற்றம் அளிக்கிறார்கள்.

எண்பதுகளின் முற்பகுதியில் சிங்கள இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் எப்படி நடந்து கொண்டதோ அதைவிட மோசமாக இன்று தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் நடந்து கொள்கிறது. சிங்கள இராணுவம், தமிழ் மக்களைத் தங்களது பரம எதிரிகளாகவே பாவிக்கிறது.

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ, மாணவிகள், விரிவுரையாளர்கள் வளவிற்குள்ளேயே சுற்றி வளைக்கப்பட்டு இராணுவ அதிகாரிகளினால் மிகவும் கேவலமாகவும் தரக்குறைவாகவும் விசாரணை என்ற போர்வையில் அவமானப்படுத்தப் பட்டனர். பலமணி நேர வெயிலில் நிறுத்தி வைத்து அவர்களது மனதை நோகடித்தனர்.

அப்படித் தாங்கள் கேவலமாகவும், தரக்குறைவாகவும் நடந்து கொள்வதற்குரிய காரணத்தை மேஜர் தரத்தைச் சார்ந்த இராணுவ அதிகாரி ஒளிவு மறைவின்றி விபரித்திருக்கிறார்.

"நாங்கள் உங்கள் நண்பர்களல்ல. நீங்கள் எங்கள் எதிரிகளின் (விடுதலைப் புலிகளின்) நண்பர்கள். அரசு (சனாதிபதி சந்திரிகா) கூறுவது போல் உங்களைக் காக்க நாங்கள் வரவில்லை. எங்கள் எதிரிகளை ஒழிக்கவே நாங்கள் வந்தோம். ஆதலால் உங்களையும் நாம் எதிரிகளின் நண்பர்களாகவே பார்க்கின்றோம். எங்கள் எதிரிகளின் நண்பர்கள், எங்கள் எதிரிகள்......"

இப்படி அந்த மேஜர் நீண்ட சொற்பொழிவு ஆற்றியிருக்கிறார். இதிலிருந்து தெரிவது என்னவென்றால் ஜே.ஆர், பிரேமதாசா ஆட்சிக்காலத்தில் எந்த மனப்பான்மையோடு இராணுவம் இருந்ததோ அதே மனப்பான்மையுடன் தான் இன்னும் இருக்கிறது என்பதே. இந்த மனப்பான்மையை சந்திரிகா அல்ல வேறு யார் வந்தாலும் மாற்ற முடியாது. இந்த உண்மையை நாலடியாரில் வரும் ஒரு பாடல் அருமையாக விளக்குகிறது:"உப்பொடு நெய்பால் தயிர், காயம் பெய்து அடினும் கைப்பு அறு பேய்ச்சுரைக்காயின் காய்" உப்பு, நெய், பால், தயிர், காயம் பெய்து சமைத்தாலும் பேய்ச்சுரைக்காயின் கைப்பு மாறாது.

*தமிழ் மக்களின் நின்மதியைக் கெடுத்தவர்கள், தமிழ் மக்கள் மீது வரலாறு காணாத முழு அளவிலான ஆக்கிரமிப்பு யுத்தம் ஒன்றைத் திணித்தவர்கள், அவர்களது உயிரைக் குடித்தவர்கள், உடமையை நாசமாக்கியவர்கள், கற்பைக் கெடுத்தவர்கள், கண்ணீரும் கம்பலையுமாக அலைய விட்டவர்கள், அவர்கள் உலையில் மண்ணைப் போட்டவர்கள், இன்று நின்மதி பற்றியும் நிவாரணம் பற்றியும் இழந்த ஊர்மனைகள் பற்றியும் தோட்டந் துரவுகள் பற்றியும் பேசுவது, "சாத்தான் வேதம் ஓதிய கதை" யாக இருக்கிறது. அல்லது "ஆடுகள் நனைகிறது என்று அழுத ஓநாய்" இன் கதைபோல் இருக்கிறது.*

அது போல, சிங்கள இராணுவம் தமிழ் மக்களை எதிரிபோல் பாவித்து நடப்பதை யாராலும் தடுக்கவோ கட்டுப்படுத்தவோ முடியாது. அதன் மிருகத் தன்மையையும் யாராலும் கட்டுப்படுத்த முடியாது. இழந்த ஊர் மனைகளையும் தோட்டம் துரவுகளையும் கட்டித்தருவோம்.... என்று சந்திரிகா சொல்கிறார்.

இராணுவமோ யாழ்ப்பாணத்தில் எஞ்சியுள்ள வீடுகளையும், புல்டோசர்களை உபயோகித்து தரைமட்டமாக்குகின்றது.

"நீங்கள் கட்டுப்பாடின்றி சுதந்திரமாக உலாவக்கூடிய ஒரு வரப்பிரசாதத்தை மீண்டும் உருவாக்கித் தருவதற்கு அரசு மனப்பூர்வமாகவும், நேர்மையாகவும் அரும்பாடுபட்டு வருகிறது" என்று சந்திரிகா சொல்கிறார்.

இராணுவமோ தமிழ் மக்களது சுதந்திரத்திற்குத் தடைவிதிக்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டையே சிறைச் சாலையாக்கி, மக்களைச் சித்திரவதை செய்து, இளம் பெண்களின் கற்பைச் சூறையாடி, கொலை செய்து கோர நர்த்தனம் செய்கிறது.

கைதடி கிருசாந்தி, கோண்டாவில் ரஞ்சனி, போல் அண்மையில் பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மொத்தம் 75 என்று, சந்திரிகா அரசை ஆதரிக்கும் நீலன் திருச்செல்வமே அறிக்கைவாயிலாகத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டை சிங்கள ஆக்கிரமிப்பிற்குள் கொண்டுவந்து, ஏழு மாதங்கள் ஆகிவிட்டன. இருந்தும் சந்திரிகாவினால் சிவில் நிர்வாகத்தை இதுவரை கொண்டுவர முடியவில்லை. யாழ்ப்பாணத்தைத் தனது ஆக்கிரமிப்பிற்குள் வைத்திருக்க சந்திரிகா சிங்கள இராணுவத்தையே நம்பியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தைப் பிடித்தபோது அங்கு சென்று கடைவரிக்க, கொழும்புத் தமிழ்க் குழுக்கள் அனுமதி கேட்டன.

"உங்களை யாழ்ப்பாண மக்கள் விரும்பவில்லை......" என்று காரணம் காட்டி அப்போது மறுத்த சனாதிபதி சந்திரிகா, இப்போது அவர்களை யாழ்ப்பாணம் செல்லுமாறு கெஞ்சுகிறார்.

ஆனால் அப்போது யாழ்ப்பாணம் செல்லத் துடித்த தமிழ்க்குழுக்கள், இப்போது போகமாட்டோம் என்று கையை விரிக்கிறார்கள். காரணம் சிங்கள இராணுவமே தங்களைக் கொன்று போட்டுவிட்டு, பழியை விடுதலைப் புலிகள் மீது சுமத்திவிடும் என்ற நியாயமான பயம் இந்தக் குழுக்களிடம் இருக்கிறது. "பல்வேறு விடுதலைப் புலிகள் இயக்கம் திணித்த பல்வேறு கட்டுப்பாடுகளையும் மீறி யாழ்ப்பாண த்துக்கு வந்து சேர்ந்தீர்கள்" என்று சனாதிபதி சந்திரிகா சொல்கிறார்.

ஒரு வாதத்திற்கு அதைச் சரியென்று வைத்துக் கொண்டாலும், கிளிநொச்சியை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து மாதம் மூன்றாகியும், அங்கு கட்டாக்காலி நாய்களைத் தவிர மனித சஞ்சாரம் இல்லாத நகராகக் கிளிநொச்சி காட்சி தருகிறது.

கிளிநொச்சி நகரை விட்டு 300,000 தமிழ் மக்கள் இடம் பெயர்ந்தார்கள். அவர்களில், எண்ணி மூன்று பேர் கூட கிளிநொச்சிக்கு இதுவரை திரும்பவில்லை.

யாழ்ப்பாணத்தையும், கிளிநொச்சியையும் விட்டுவிடுவோம். இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள பேசாலைப் பகுதியில் இருந்து இதுவரை மூவாயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து தமிழ் நாட்டுக்கு அகதிகளாக ஓடிப் போயிருக்கிறார்கள்.

அப்படி ஓடிப்போனவர்கள் தாங்கள் பிறந்த மண்ணில் இராணுவத்தினால் உயிருக்கு ஆபத்து, உண்ண உணவில்லை, தொழில் செய்ய வாய்ப்பில்லை என்று காரணம் சொல்லியிருக்கிறார்கள்.

சந்திரிகா பெரிய ஆரவாரத்தோடு அறிவிப்பு செய்தார். அதற்காக வெளிநாட்டு இராஜதந்திரிகளின் மாநாட்டை நடாத்தி, அவர்களிடம் நிதியுதவி கோரினார். அந்தக் கோரிக்கை, அவர்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில் புனர்நிர்மாணம் என்ற பேச்சையே இப்போது காணோம்.

ஆண்டொன்றுக்கு 5,000 கோடி பணம் போருக்குச் செலவழிக்கும் சிறிலங்கா அரசிற்கு, நிதியுதவி செய்ய எந்த நாடும் கடந்த ஒக்டோபர் மாதம் வரை முன் வராததில் எதுவித ஆச்சரியமும் இல்லை. பாரிஸில் கூடி, சிறிலங்காவிற்கு வழமையாக ஆண்டு தோறும் ஏப்ரல் மாதத்தில் 850 மில்லியன் அமெரிக்க டொலர்களை அள்ளிக் கொடுக்கும், உதவி வழங்கும் நாடுகளே 1996 ஆம் ஆண்டுக்குரிய நிதியைச் சில நிபந்தனை அடிப்படையில் கொடுப்பதற்கு 18-11-96 லேயே முடிவெடுத்தன.

சனாதிபதி சந்திரிகா பல கோடி பெறுமதியான ஆயுத தளபாடங்களை வாங்கிக் குவித்து, படைபலத்தைப் பெருக்கி விடுதலைப்புலிகளை முற்றாக அழித்து விட்டு வட-கிழக்கு மாகாணங்களில் சிங்கள-பௌத்த மேலாண்மை ஆட்சியை மீண்டும் நிலைநாட்டுவதையே இலக்காகக் கொண்டுள்ளார்.

இதனை, நூற்றுக்கு 98 விழுக்காடு சிங்களவர்களைக் கொண்ட இராணுவத்தினால் சாதித்து விடலாம் என்று சனாதிபதி சந்திரிகா பகல் கனவு காண்கிறார்.சிங்கள-பௌத்த மேலாண்மையைத் தமிழ் மக்கள் 1977 ஆம் ஆண்டே நிராகரித்து விட்டார்கள்.

*"தமிழீழம் என்பது கனவல்ல, அது ஒவ்வொரு தமிழனதும் இதயத்திலும் கோவிலாகக் குடிகொண்டு விட்டது"*

*"சுதந்திரப் பயிர் என்பது, தண்ணீரால் வளர்வது அல்ல. அது விடுதலைக்கு உயிர் கொடுக்கும் தியாகிகளின் செந்நீரால் வளர்வது.........அந்தப் பயிரை சனாதிபதி சந்திரிகாவினால் மட்டுமல்ல, அவரது இராணுவத்தினாலும். 'அழித்து விட முடியாது"*

"கெடுகுடி சொற்கேளாது" என்பார்கள். சனாதிபதி சந்திரிகா இந்தப் பழமொழிப்படியே நடந்து கொள்கிறார்.

-சேரமான்தேவி

படிப்பகம்

www.padippakam.com



# “தமிழீழத்துக்கு எதிராக இருக்கின்றவர்கள் நிச்சயமாக தமிழராக இருக்க முடியாது”

06-11-96 இதழின் தொடர்ச்சி...

**கடந்த ஆகஸ்ட் மாதம் 31ந் திகதி, ரொறன்ரோவில் நடைபெற்ற உலகத்தமிழர் இயக்கத்தின் 10 வது ஆண்டு நிறைவு விழாவின் போது கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ் நாடு பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரும், தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினருமான தீரன் அவர்கள் ஆற்றிய உரையின் தொடர்ச்சி இங்கு தரப்பட் டுள்ளது.**

## “ஒரு தமிழன் இன்னொரு தமிழனுக்கு குரல் கொடுப்பது தவறென்று சொன்னால் அதைத் தொடர்ந்து செய்துகொண்டே இருப்போம்”

-பேராசிரியர் தீரன், தலைவர், பாட்டாளி மக்கள் கட்சி



பாட்டாளி மக்கள் கட்சி என்று சொன்னாலும் கூட, அதற்கு முன்பிருந்தே 1983 களிலிருந்து அருமைத் தோழர் அவர்கள் முன்னர் குறிப்பிட்டுச் சொன்னதுபோல எங்கள் நடவடிக்கைகள், அனுகு முறைகள் அத்தனையும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக என்றென்றைக்கும் நாங்கள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நாங்கள் இந்த நேரத்திலே உறுதியாகக் தெளிவுபடுத்திக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, இன்றைக்குப் பாட்டாளி மக்கள் கட்சியானது, தமிழகத்திலே இருக்கக்கூடிய பல்வேறு அரசியல் கட்சிகளிலிருந்தாலும் நாங்களும் தேர்தலிலே போட்டியிடுகின்ற ஒரு அரசியல் கட்சியாக இருந்து கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையிலே, எங்களுடைய அந்த வாக்குகளைப் பொறுக்குகின்ற அந்தச் சூழ்நிலையிலே கூட, வெறும் வாக்குகளை மட்டும் பற்றிக் கவலைப்படாமல் மக்களுடைய வாழ்க்கையைப் பற்றியும் சிந்தனை செய்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலே 89 களிலிருந்து பல்வேறு மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், மறியல், உண்ணாவிரதப் போராட்டங்கள் என்றெல்லாம் பல்வேறு வகையான போராட்ட வகைகளை மேற்கொண்டு அதன்மூலமாக, தமிழர்களுக்காக மொழி, இனம், நாடு என்று சொல்லக்கூடிய அளவிற்கு எங்களுடைய குரலானது, தொடர்ந்து ஒலித்துக் கொண்டு வருகின்றது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

அது மட்டுமல்ல, உலகத்திலே நூற்றுக்கணக்கான நாடுகளிலே தமிழர்கள் வசிக்கிறார்கள். எந்த நாடுகளுக்கெல்லாம் தமிழர்கள் சென்றிருக்கிறார்களோ, அந்த நாடுகளை வளம் கொழிக்கும் பூமிகளாக மாற்றியிருக்கிறார்கள். பர்மாவினுடைய ஐராவதி நதி தீரத்திலே, இந்தத் தமிழர்கள் சென்ற பிறகுதான் அங்கே இறப்பர் மரங்களும், தேக்கு மரங்களுமாக மண்டி வளர்ந்து அந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை மேம்படுத்தக் கூடிய அளவிற்கு அந்தப் பர்மாவானது முன்னுக்கு வந்திருக்கிறது.

அதேபோல, பூர்வீக மக்களாக ஈழத்திலே தமிழர்கள் இருக்கிறார்கள். என்றாலும் கூட, சிங்களவர் வாழக்கூடிய பகுதியிலே தமிழகத்திலே இருந்து சென்ற தமிழர்கள் –இந்திய வம்சாவளித் தமிழர்கள், அவர்கள் அங்கே சென்றதற்குப் பின்னாலே தான் அந்த மண்ணானது வளம் கொழிக்க ஆரம்பித்தது என்று நாங்கள் படித்திருக்கிறோம். ஆக, உலக நாடுகளிலே தமிழர்கள், நூற்றுக்கணக்கான நாடுகளிலே சென்று வசிக்கிறார்கள். அந்த நாடுகளினுடைய முன்னேற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும் அவர்களுடைய பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்றைய வரையிலே ஒரு பெரிய ஏக்கப் பெருமூச்சு; உங்களுக்கும் அந்தப் பெருமூச்சு இருக்கும்; எங்களுக்கும் இருக்கிறது. ஏன் உலகத்திலுள்ள ஏறத்தாழ 8 கோடி தமிழருக்கு மேலே இருக்கிறார்களே, அவர்கள் அத்தனை பேருக்கும் ஒரு ஏக்கப் பெருமூச்சு உண்டு.

> “நாங்கள் தமிழர்கள், பக்கத்திலே 18 மைல் தொலைவிலே இருக்கக்கூடிய ஈழமண்ணிலே போராளிகள் தங்களுக்கென்று ஒரு நாடு கேட்டு போராடிக் கொண்டிருக்கிறார்கள். வம்சாவழியாகப் பார்க்கிறபோது, சிங்களப் பேரினவாதம், சிறுபான்மையாக இருக்கக்கூடிய தமிழ்த் தேசிய இனத்தை அடக்க - ஒடுக்க பல்வேறு முறைகளைக் கையாண்டு வருகிற சூழ்நிலையிலேயே தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்த நாங்கள், எங்கள் சகோதரர்களான ஈழத் தமிர்களுக்கு ஆதரவு கொடுப்பது தவறென்று சொன்னால், ஒரு தமிழன் இன்னொரு தமிழனுக்குக் குரல் கொடுப்பது தவறென்று சொன்னால், ஏழு ஆண்டுகள் என்ன - எழுபது ஆண்டுகள் என்றாலும் என்ன, எத்தனை ஆண்டுகள் என்றாலும் சிறை செல்லத் தயார். நாங்கள் இந்த நிலைப்பாட்டில் இருந்து எந்தக் ”

அதுதான் நம்முடைய வீரவரலாறுகளைப் புரட்டிப் பார்க்கிற நேரத்திலே கொடியோடு பிறந்த தமிழன், முடியோடு ஆண்ட தமிழன் – இன்றைக்குக் கொடியுமின்றி, முடியுமின்றி, தனக்கென்றொரு நாடுமின்றி, அகதிகளாக இருந்து கொண்டு, ஒரு கொடுமையான சூழ்நிலையிலேதான் வாழ்கிறார்கள். உலகத்திலே தமிழர்களுக்கென்று ஒரு நாடு உருவாகாதா என்ற ஏக்கப் பெருமூச்சிலே இருந்து கொண்டிருக்கின்ற எங்களுக்கு ஒரு நம்பிக்கை ஒளி – புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொல்வதுபோல –

“தென்திசைபார்க்கின்றேன் அடடா
எந்தன் சிந்தையெல்லாம்,
தோள்களெல்லாம் பூரிக்குதடா
என்சொல்வேன் ”

என்று புரட்சிக் கவிஞர் பாடுவாரே, அந்தத் தென்திசையை நாங்கள் தமிழகத்திலே இருந்துகொண்டு பார்க்கிற பொழுது – எங்களுக்கு ஒரு நம்பிக்கை ஒளியாக தமிழீழம் அமையப் போகிறது என்கின்ற அந்த நம்பிக்கை ஒளியானது – மகிழ்ச்சியை, ஒரு நிம்மதியை – எவ்வளவு விரைவிலே அது அமையப் போகிறதோ, அவ்வளவு விரைவிலே எங்களுக்கு ஏற்படுத்தப் போகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே நினைத்துப் பார்க்க விரும்புகிறேன்.

ஆக, தமிழகத்தைப் பொறுத்தளவிலே, நாங்கள் 1992 இலே தமிழர் வாழ்வுரிமை மாநாடு, உலகத் தமிழர்களுடைய இன்னல்கள் களையப்பட வேண்டும் என்பதற்காக நடாத்திய அந்த மாநாடு – தமிழ் நாட்டிலேயே தமிழர்களுக்கு வாழ்கின்ற உரிமை இல்லை; தமிழன் தான் பேசக் கூடிய அந்தத் தமிழ் மொழிக்கே சரியான வாய்ப்புக்கள் இல்லை; தமிழ் சரியான வாய்ப்புக்களைப் பெறுகின்ற போதுதான், தமிழன் சரியான மரியாதையையும் பெற முடியும். நீங்களெல்லாம் பெருமையாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்; தமிழனுக்கு தமிழ் நாடுதான் ஆக தமிழ் பிறந்த மண், தமிழ் நாடுதான் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றோம். தமிழ் நாடு மண் ஏதோ சிறப்பு வாய்ந்த பூமியென்று நீங்கள் கருதிக் கொண்டிருக்கலாம். ஆனால், அந்த மண்ணிலே நீங்கள் பார்க்கிற பொழுது – பிறக்கிற குழந்தையைப் பள்ளியிலே சேர்க்கிறதிலேயிருந்து– அந்தப் பள்ளிகளைப் பார்த்தால், ஆங்கில வழிப் பள்ளிகளாகவுள்ளன; வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்கிற பொழுது, சமஸ்கிருத ஆதிக்கம் – வடமொழி ஆதிக்கம்; இசைக் கச்சேரிகளுக்குச் செல்கிறபொழுது தெலுங்கு ஆதிக்கம்; மேல்நிலைப் பாடங்களிலே கல்லூரிகள், பல்கலைக் கழகங்களிலே பார்க்கிற பொழுது, ஆங்கில வழிப் பாடங்கள். இப்படி எங்கெல்லாம் பார்த்தாலும், தமிழானது தன்னுடைய தகுதியை – உரிமையை இன்று வரையிலே தாய்த் தமிழகத்திலேயே இன்னும் பெறமுடியாத ஒரு சூழ்நிலையிலேயே இருக்கிறது.

ஆனாலும் கூட, அங்கே எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று பேசப்படுகின்ற முழங்கங்கள் மிகச் சிறப்பாக எடுத்துப் பேசப்படுகின்றது. ஆனால், இன்று வரையிலே எங்கே தமிழ், எதிலே தமிழ் என்று சொல்லக்கூடிய அளவிற்குத்தான் அங்கே சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிற காரணத்தாலே எங்களுடைய நிறுவனர் டாக்டர் ராமதாஸ் ஐயா அவர்கள் பத்து இலட்சம் பேர்களைத் திரட்டி, 1992 இல் அந்தத் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டைச் சென்னையிலே சீரடி அரங்கத்திலே நடாத்திக் காட்டினார். அந்த மாநாட்டிலே நாங்கள் நிறைவேற்றிய மூன்று தீர்மானங்களில் ஒரு தீர்மானம் – தமிழீழத்தை, இந்திய மத்திய அரசும் மற்றும் எங்களுடைய தமிழக அரசும், அங்கீகரிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் – அங்கீகரிக்க வேண்டும் என்று சொல்லி நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்திற்காக – எங்கள் மீது தேசத் துரோகக் குற்றச்சாட்டு அன்றைக்குச் சுமத்தப்பட்டது. டாக்டர் ஐயா அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார். பதினாறு பேர்களின் மீது தேசத் துரோகக் குற்றச்சாட்டு. வெள்ளைக்காரன் இந்தியாவை ஆண்டு கொண்டு இருந்த நேரத்திலே, “சுதந்திரம் அடைவது எங்கள் பிறப்புரிமை” என்று கேட்ட திலகரின் மீது அன்று “தேசத் துரோகக் குற்றச்சாட்டு” 1924 களிலே சுமத்தினானே! அதே குற்றச்சாட்டை விடுதலை பெற்றோம் என்று எண்ணிக் கொண்டு இருக்கிற நாட்டிலே, எங்கள் மீது அன்றைக்கு ஆண்டு கொண்டிருந்த ஜெயலலிதா அரசு தேசத் துரோக குற்றம் சாட்டி சிறையில் அடைத்தது.

> “தமிழீழத்தை, இந்திய மத்திய அரசும் மற்றும் எங்களுடைய தமிழக அரசும், அங்கீகரிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் - அங்கீகரிக்க வேண்டும்”

எங்களுடைய இயக்கம் தடை செய்யப்படும் என்று சொல்லி பூச்சாண்டிகள் எல்லாம் கூடக் காட்டினார்கள். ஆனால், அன்றைக்கு நீதிமன்றத்திலே எங்களுடைய நிறுவனர் தெளிவாகச் சொல்கின்ற பொழுது சொன்னார். "நாங்கள் கொண்டிருக்கின்ற கொள்கைகளிலே எந்தக் காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் பின்வாங்கமாட்டோம். இதிலே எந்தக் காலத்திலும் வேறுபாடு கிடையாது. நாம் சொன்னது – இந்தியாவிலே இருக்கக்கூடிய தமிழ்த் தேசிய இன மக்களாகிய நாங்கள், தமிழர்களுக்கென்று மட்டுமே தன்னுரிமை கேட்டிருந்தால் அது பிரிவினை என்று கூட நீங்கள் வாதிடலாம். ஆனால், இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் தன்னுரிமை வேண்டும் என்று கேட்டோம். இது தவறா? – நாங்கள் தமிழர்கள், பக்கத்திலே 18 மைல் தொலைவிலே இருக்கக்கூடிய ஈழமண்ணிலே போராளிகள் தங்களுக்கென்று ஒரு நாடு கேட்டு போராடிக் கொண்டிருக்கிறார்கள். வம்சாவழியாகப் பார்க்கிறபோது, சிங்களப் பேரினவாதம், சிறுபான்மையாக இருக்கக்கூடிய தமிழ்த் தேசிய இனத்தை அடக்க – ஒடுக்க பல்வேறு முறைகளைக் கையாண்டு வருகிற சூழ்நிலையிலேயே தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்த நாங்கள், எங்கள் சகோதரர்களான ஈழத் தமிர்களுக்கு ஆதரவு கொடுப்பது தவறென்று

தொடர்ச்சி 18 ம் பக்கம்...

படிப்பகம்

www.padippakam.com

# அனைத்துலக கவன ஈர்ப்பு வாரமும்

## இத்தாலியில்
## அடையாள உண்ணாவிரதமும் ஆர்ப்பாட்ட ஊர்வலமும்

தமிழர்கள் வாழும் பல நாடுகளில் நடாத்தப்பட்ட 'கவன ஈர்ப்பு வாரம்' இத்தாலி நாட்டிலும், இத்தாலி வாழ் மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழ் மக்களால் பல பாகங்களிலும் திறம்பட நடாத்தப்பட்டது.

இவ்வாரத்தின் முதல் நாளான 30-10-96 காலை 9 மணி முதல் மாலை 5.30 மணி வரை குழந்தைகள், பெண்கள் உட்பட 150க்கும் மேற்பட்ட தமிழீழ மக்கள் சிசிலித் தீவில் அமைந்துள்ள இத்தாலி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சகத்திற்கு முன்னால், ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

31-10-96 மாலை 5 மணிக்கு பலெர்மோவின் பிரசித்தி பெற்ற தெருவான VIA. LIBERTA வழியாக 1,500 பேர் வரையிலான



தமிழ் மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினை நடாத்தியிருந்தனர். (இத் தினம் இத்தாலியர்களுக்கு முக்கிய நாளாகும். இந் நாளில் இம் மக்கள் இறந்தவர்களை நினைவு கூருவதும் அவர்கள் நினைவாக விளையாட்டுப் பொருட்களை வாங்குவதும் வழக்கமாகும்.) இம் மக்கள் நிறைந்திருந்த இத் தெருவிலேயே ஊர்வலம் சென்று, இறுதியாக பலெர்மோ உள்ளூராட்சி மன்றத்திற்கு முன்பாக முடிவுற்றது. இதில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் பிரதிநிதியும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. இறுதியில் பலெர்மோ மாநகர முதல்வரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. இவ் ஊர்வலத்தில் தென் சிசிலிப்

தொடர்ச்சி 14 ம் பக்கம்...

## சுவிசில்
## கவன ஈர்ப்பு வாரம் ஓர் கண்ணோட்டம்



கடந்த ஆண்டு 30.10.1995 அன்று மனித வரலாற்றிலேயே உலகம் கண்டிராத அவலம் நிறைந்ததாகக் கருதப்படும் மக்கள் இடப்பெயர்வு தமிழீழ மண்ணில் நடைபெற்றது. இவ் அவலத்தை, மீண்டும் ஒரு முறை சர்வதேசத்தின் கவனத்திற்குக் கொண்டுவர அனைத்துலக கவன ஈர்ப்பு வாரமாக 30-10-1996 முதல் 05-11-1996 வரை பிரகடனப்படுத்தி உலகத் தமிழ் மக்களிற்கு சர்வதேச தமிழர் சம்மேளனம் விடுத்த அழைப்பை ஏற்று, இக்காலப் பகுதியில் உலகில் வாழும் தமிழீழ மக்கள் அனைவரும் பல்வேறுபட்ட பிரச்சார வேலை திட்டங்களில் ஈடுபட்டனர்.

இக் கவன ஈர்ப்பு வாரத்தையொட்டி சுவிசிலும் கடந்த 30-11-1996 அன்று ஜெனிவா நகரில் அமைந்திருக்கும் ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் சுவிஸ் வாழ் தமிழ் மக்கள் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தனர். இதன்போது சிறிலங்கா அரசின் தமிழின அழிப்பு, மக்களின் அவலங்களைச் சித்தரிக்கும் புகைப்படங்கள் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு இருந்தன. வீதியால் சென்ற வெளிநாட்டவர்களின் கவனத்தை இப் புகைப்படங்கள் ஈர்த்திருந்தன. கவன ஈர்ப்பு வாரத்தினைப் பற்றி சுவிஸ் வாழ் மக்கள் அறிய வேண்டும் என்பதற்காக, சுவிசில் உள்ள அனைத்து தமிழர் வர்த்தக நிலையங்களும் பிற்பகல் ஒரு மணி வரை மூடப்பட்டு இருந்தன. தாயக மக்களின் துயர நிகழ்வுகளை நினைந்து உண்ணாவிரதத்தில் பங்கேற்ற மக்களுக்கு, நற்செய்தியாக, போலிக் குற்றச்சாட்டுகளுடன் சுவிஸ் அரசால் கைது செய்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. நடராஜா முரளிதரன் பிற்பகல் 3.05 மணிக்கு விடுவிக்கப்பட்டு, மாலை 6.30 மணிக்கு ஐ.நா. சபை முன்றலில் அடையாள உண்ணாவிரதத்தில் கூடியிருந்த மக்கள் முன்னிலையில் சிறப்புரை ஆற்றியதும், அங்கு கூடியிருந்த மக்கள் அவரைக் கட்டித் தழுவியும், கை குலுக்கியும் ஆரவாரப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ச்சி 14 ம் பக்கம்...

## லண்டனில்
## சர்வதேச செய்தியாளர் மாநாட்டுடன், விழிப்புப் போராட்டமும் இரத்த தானமும்

லண்டனில் அனைத்துலக கவன ஈர்ப்பு வாரச் செயற்பாடுகள் உண்ணாவிரதம், வர்த்தக நிலையங்களைப் பூட்டுதல், செய்தியாளர் மாநாடு, விழிப்புப் போராட்டங்கள், இரத்ததானம் போன்ற பல்வேறு நிகழ்வுகளால் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்வுகளால், சிறிலங்கா அரசால் எம் மக்களுக்கு ஏற்படுத்தப்படும் அவலங்கள் பிரித்தானிய அரசிற்கும், ஆங்கிலேய மக்களுக்கும் விளக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துரைக்கப்பட்டது.



கவன ஈர்ப்பு வாரத்தின் ஒரு அங்கமாக இரத்ததானம் வழங்குகையில்...

இவ் வகையில், 30-10-96 அன்று தமிழர் வர்த்தக நிலையங்கள் பகல் 1.00 மணி வரை பூட்டப்பட்டு அதற்கான காரணங்களும் அறிவிக்கப்பட்டன. அதேவேளை, இந்து ஆலயங்களில் உண்ணாவிரதமும் மேற்கொள்ளப்பட்டன. 01-11-96 அன்று ஈழம் இல்லத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்று நடைபெற்றது. இதில் பி.பி.சி., ரொய்ட்டர், ஏ.எப்.பி., ஏ.பி., போன்ற பிரபலமான சர்வதேசச் செய்தி நிறுவனங்களின்

தொடர்ச்சி 14 ம் பக்கம்...

## அமெரிக்காவில் 15 மாநிலங்களில் கவன ஈர்ப்பு வாரச் செயற்பாடுகள்

சர்வதேச தமிழர் சம்மேளனத்தினால் அறிவிக் கப்பட்ட சர்வதேச கவன ஈர்ப்பு வாரம், அமெரிக்காவில் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினாலும் ஏனைய 15 தமிழ் அமைப்புக்களினாலும் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அமெரிக்காவின் 14 மாநிலங்களில் அங்கு வாழும் தமிழ் மக்களால் கவன ஈர்ப்பு வாரச் செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டன.

நியூயோர்க் நகரில் ஐ.நா. சபை முன்பாகவும் வாசிங்டன் நகரில் வெள்ளை மாளிகை, அமெரிக்க இராஜாங்க அமைச்சு முன்பாகவும் ஏனைய மாநிலங்களில் அங்குள்ள மாநகர முதல்வர் அலுவலகங்களுக்கு முன்பாகவும் 25,000க்கும் மேற்பட்ட பிரசுரங்கள் தமிழ் மக்களால் அமெரிக்க மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

அத்துடன் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு, சர்வதேச தமிழர் சம்மேளனத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் அடங்கிய 5,000க்கும் மேற்பட்ட அஞ்சல் அட்டைகள் அமெரிக்க ஜனாதிபதி மற்றும் ஐக்கிய நாடுகள் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.✳

## கனடாவில்
## கவன ஈர்ப்பு வார பிரச்சாரப் போர்

அனைத்துலக கவன ஈர்ப்பு வாரத்தை முன்னிட்டு, கனடாவில் பல முக்கிய நகரங்களில் பிரச்சாரப் போர் இடம் பெற்றுள்ளது. கனடா வாழ் தமிழ் மக்களினால் எம் தாயக மக்களின் அவல நிலைகள் குறித்து கனடாவின் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச–அரச சார்பற்ற அமைப்புக்கள், அரசியல் தலைவர்கள், தொண்டர் நிறுவனங்களிற்குக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

அத்துடன், வழிபாட்டுத் தலங்களில் தொடர்ச்சியான விசேட வழிபாடுகளும் நடாத்தப்பட்டுள்ளன.

இறுதி நாளான 5-11-1996 அன்று, ஒட்டாவா பாராளுமன்ற முன்றலில், மக்கள் பேரணி நடாத்தப்பட்டுள்ளது. கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இப் பேரணியில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, ஒட்டாவாவில் உள்ள பிரான்ஸ் தூதரகத்தின்

தொடர்ச்சி 14 ம் பக்கம்...

www.padippakam.com

# புலம் பெயர் வாழ் மக்களும்

## பிரான்சில்

### சிறிலங்காவின் படுகொலைகள் மத்தியிலும் மாபெரும் விழிப்புப் போராட்டம்




சர்வதேச தமிழர் சம்மேளனத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டு உலகெங்கும் நடைபெற்ற அனைத்துலக கவன ஈர்ப்பு வாரம், பிரான்ஸ் வாழ் தமிழ் மக்களாலும் பல்வேறு இடங்களிலும் நடாத்தப்பட்டது.

கடந்தாண்டு இடம்பெற்ற மாபெரும் இடப்பெயர்வு நிகழ்வின் போது ஏற்பட்ட பல்வேறு துயர நிகழ்வை மனதில் சுமந்து பல நூற்றுக்கணக்கான மக்கள் பல்வேறு இடங்களிலும் கூடி, சிறிலங்கா அரசால் எம் மக்கள் மீது நடாத்தப்படும் பயங்கர வாதத்தைப் பிரான்ஸ் மக்களுக்கு வெளிப்படுத்தி நின்றனர்.

கவன ஈர்ப்பு வாரத்தின் தொடக்க நாளான 30-11-1996 அன்று பிரான்ஸ் மக்களுக்கு இவ் வாரத்தின் நோக்கினை வெளிப்படுத்தும் முகமாக, பாரிஸ் நகரிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் உள்ள சகல தமிழ் வர்த்தக நிலையங்களும் பிற்பகல் ஒரு மணி வரை மூடப்பட்டிருந்தன.



மற்றும் தொடர்ச்சியாக தமிழ் மக்களின் சுய நிர்ணயப் போராட்டம் பற்றிய விளக்கப் **துண்டுப் பிரசுரங்கள்** பிரெஞ்ச் மொழியில் வெளியிடப்பட்டு பிரான்ஸ் வாழ் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. பிரான்ஸ் வாழ் தமிழ் மாணவர் அமைப்பு முன்னின்று நடாத்திய துண்டுப் பிரசுர பிரச்சாரப் போரில் சுமார் 3000க்கும் அதிகமான பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

தொடர்ச்சி 14 ம் பக்கம்...

## நெதர்லாந்தில்

### உண்ணாவிரதப் போராட்டத்துடன் துண்டுப்பிரசுரங்களும் விநியோகம்

**நெ**தர்லாந்தில் கவன ஈர்ப்பு வாரத்தின் முதல் நாள் 30-10-1996 அன்று, டென்காக்கில் **அடையாள உண்ணாவிரதப் போராட்டம்** நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன், நெதர்லாந்தின் பல நகரங்களிலும் அந் நாட்டு மொழியில் தயாரிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான **துண்டுப்பிரசுரங்கள்** நெதர்லாந்து மக்களுக்கு விநியோ கிக்கப்பட்டன. அத்துடன் ஐ.நா. சபை செயலாளருக்கான **அஞ்சல் அட்டைகளும்** விநியோகிக்கப்பட்டன.

## பெல்ஜியத்திலும்

### கவன ஈர்ப்பு வாரம்

முதன் முறையாக பெல்ஜியம் நாட்டிலும் அங்குள்ள ஈழத்தமிழர்கள், எம் மண்ணில் சந்திரிகா இனவாத அரசானது தமிழ் மக்கள் மேல் கட்டவிழ்த்துவிட்டுள்ள கொடூரங்களைச் சித்தரிக்கும் **துண்டுப் பிரசுரங்களை** அந்நாட்டு மக்களுக்கு விநியோகித்து தமது இனமான உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். பெல்ஜியம் நாட்டின் மொழிகளில் ஒன்றான 'டச்' மொழியில் வெளியிடப்பட்ட அத்துண்டுப்

தொடர்ச்சி 3 ம் பக்கம்...

## நோர்வேயில்

### வீதிநாடகமும் தீப்பந்த ஊர்வலமும்

**நோ**ர்வேயின் பேர்கன் நகரில் கவன ஈர்ப்பு வாரத் தொடக்க நாளன்று அடையாள **உண்ணாவிரதப் போராட்டம்** நடைபெற்றது. பேர்கன் பல்கலைக்கழக வளாகத்தில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்ற இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் பல தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். பேர்கன் நகரில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் அனைத்திலும் இப் போராட்டச் செய்திகள் வெளியிடப்பட்டன. இதே நேரத்தில், ஐ.நா சபை செயலாளருக்கு அனுப்புவதற்கான **அஞ்சல் அட்டைகள்** பல நோர்வே நாட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. சுமார் 200 வரையிலான அஞ்சல் அட்டைகள் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தினமே 31-10-1996 அன்று நோர்வே பிரதம மந்திரியின் அலுவலகத்தின் முன்




தொடர்ச்சி 14 ம் பக்கம்...

## அவுஸ்திரேலியாவில்

### கவன ஈர்ப்புப் பொதுக்கூட்டமும் புகைப்படக் கண்காட்சியும்

சர்வதேச தமிழர் சம்மேளனத்தினால் அறிவிக்கப்பட்ட அனைத்துலக கவன ஈர்ப்பு வாரத்தையொட்டி, 1-11-1996 அன்று அவுஸ்திரேலியா மெல்பேர்ண் மற்றும் பல நகரங்களிலும் **தேவாலயங்கள், ஆலயங்களில் விசேட வழிபாடுகள்** நடைபெற்றன.

2-11-1996 அன்று மெல்பேர்ணில் நடைபெற்ற **பொதுக் கூட்டம்** நடைபெற்றது. இதன்போது **புகைப்படக் கண்காட்சியும்** இடம்பெற்றது.

இவ் நிகழ்வுகளில் பல நூற்றுக்கணக்கான மக்கள் பங்கெடுத்துள்ளனர். இங்கும் சர்வதேச தமிழர் சம்மேளனத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்ட **துண்டுப் பிரசுரங்கள்** அவுஸ்திரேலிய மக்களுக்கு வழங்கப்பட்டன. அத்துடன், ஐக்கிய நாடுகள் செயலாளருக்கு மனிதாபிமான உதவி கோரி அனுப்புவதற்கான **அஞ்சல் அட்டைகளும்** விநியோகிக்கப்பட்டன. ✷

## யேர்மனியில்

### 50 நகரங்களுக்கு மேல் துண்டுப் பிரசுர பிரச்சாரம்

**யே**ர்மனி நாட்டின் பல பாகங்களிலும் அனைத்துலக கவன ஈர்ப்பு வாரம், தமிழ் மக்களால் நடாத்தப்பட்டது. யேர்மன் நாட்டு மக்களுக்கு எம் தாயக மக்களின் அவலங்களை விளக்கும் முகமாக, அங்குள்ள ஐந்து முக்கிய நகரங்களில் **ஊர்வலங்கள்** நடாத்தப்பட்டுள்ளன.



அதேவேளை, மிகப் பிரமாண்டமான முறையில் 50க்கும் அதிகமான நகரங்களில் யேர்மன் மொழியில் தயாரிக்கப்பட்ட **60,000 க்கும் மேற்பட்ட துண்டுப் பிரசுரங்கள்** விநியோகிக்கப்பட்டுள்ளன.

www.padippakam.com



# தாயகம் நோக்கிய பயணம்




## முதலாம் பாகம்

### அத்தியாயம் ஒன்பது

(தொடர்ச்சி)

அத்தோடு, இப்படியான விடயங்களை வெற்றிகரமாகச் செய்து முடிக்கக் கூடியர்கள் அரியோடு வேலை செய்கிறார்கள் என்றும் அவனுக்குத் தெரியும்.

"நான் இதற்குச் சம்மதிக்கிறேன்" மார்க் சொன்னான்.

"நல்லது. நீ இத்திட்டத்தின் வெற்றி தோல்விகளைப் புரிந்துகொள்வாய் என்று நான் நினைத்தேன்" என்ற அரி, கிற்றிக்காகத் திரும்பி, "திருமதி பிறமென்ற் ஒரு வாரத்திற்கு முன் பிள்ளைகளின் முகாம்களில் வேலை செய்ய உங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதைப்பற்றி என்ன முடிவு செய்திருக்கிறீர்கள்?"

"நான் அதை ஏற்றுக்கொள்வதில்லை என்று முடிவுசெய்திருக்கிறேன்".

"தயவு செய்து அந்த முடிவை மீள்பரிசோதனை செய்யமுடியுமா?..... பார்க்கருக்கு உதவுவதற்காக....... என்று சொல்வோமா?" அரி கேட்டான்.

"கிற்றி என்ன செய்யவேண்டுமென எதிர்பார்க்கிறாய்?" மார்க் கேட்டான்.

"வெளியிலிருந்து வரும் ஆசிரியர்கள், தாதிகள், நலன்புரித் தொண்டர்கள் யாவரும் யூதர்களாதலினால் அவர்கள் பிரிட்டிசாரின் சந்தேகத்துக்குட்பட்டவர்கள் என்று அனுமானம் செய்ய வேண்டியிருக்கிறது." அரி சொன்னான்.

"எதைப்பற்றிச் சந்தேகிப்பார்கள்?" மார்க் வினவினான்.

"மொசாட்டோடு சேர்ந்தியங்குவதை. நீ ஒரு வேதக்காரி. திருமதி பிறமென்ற் உங்களைப்போன்ற பின்னணியும், மதமும் உடையவர்கள் சிறிது சுதந்திரமாக உலாவலாம் என்று நினைக்கிறோம்." அரி சொல்ல,

"வேறு வார்த்தைகளில் சொல்லப்பொனால் கிற்றியை ஒரு செய்தி சுமந்து செல்பவளாக (Courier) பாவிக்கப் பார்க்கிறாய்" என்றான் மார்க்.

**லியோன் யூறிஸ்**

"கிட்டத்தட்ட அப்படித்தான். வெளியே தேவைப்படும் ஆவணங்கள் பலவற்றை நாங்கள் உள்ளே தயாரிக்கிறோம்." அரி விளக்கமளித்தான்.

"நான் உனக்கு ஒன்று சொல்ல வேண்டும். பிரிட்டிசாருடன் எனக்கு அவ்வளவு திருப்தியில்லை. நான் இறங்கிய அதே நேரம் சுதர்லாண்டின் உதவியாளன் என்னைத் தேடி வந்துவிட்டான். அது என்னைப் பாதிக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் கிற்றி கராஓலொஸ்சுக்கு வேலைக்குப் போனால், அவள் எனக்காக வேலை செய்வதாக அவர்கள் சந்தேகிக்கலாம்" என்றான் மார்க்.

"மாறாக நீயாக அவளை அங்கு அனுப்பமாட்டாய் என்று நிச்சய மாக நம்புவார்கள்."

"நீ சொல்வது சரியாகவு மிருக்கும்"

"நான் சரியாகத்தான் சொல்லுகிறேன்" என்ற அரி மேலும் சொன்னான். "ஆக மிஞ்சிப்போனால் என்ன நடக்கும்? தற்செயலாக கிற்றி ஒரு போலியாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்களோடு பிடிபடுகிறாள் என்று வைப்போம். திருமதி பிறமென்ருக்கு எதுவும் நடக்காது. சிறிது சங்கடம் ஏற்படலாம். கர்வலோடு போகவேண்டிவரும். சைப்பிரசிலிருந்து வெளியே போக ஒரு இலவச விமானச்சீட்டுக் கிடைக்கலாம்."

"கொஞ்சம் பொறுங்கள். நீங்கள் இருவரும் என்னைப் பங்குபோட்டுக் கொண்டதை இதுவரை கேட்டுக் கொண்டிருந்தேன். இன்றிரவு இங்கு நடைபெற்ற கதைகளை நான் கேட்க நேரிட்டதையிட்டு வருந்துகிறேன். நான் கராஓலொஸ்சுக்குப்போய் வேலை செய்யப்போவதில்லை, திரு. பென்கானான். உங்களுடைய இத் திட்டத்திலும் பங்கேற்கப் போவதில்லை." கிற்றி சொன்னாள். அரி, பார்க்கரை கிற்றியை சம்மதிக்கப்பண்ண உதவிபோல் பார்த்தான்.

தோளைக் குறுக்கியபடி "அவள் ஒரு முதிர்ந்த பெண்"

"நான் நினைத்தேன் நீங்கள் பார்க்கரின் நண்பியென்று."

"நான் நண்பிதான். அவனுடைய ஈடுபாடுகள் எனக்குப் புரியும்." கிற்றி சொன்னாள்.

"புரிந்துணர்வின் பற்றாக்குறைதான் எனக்கு விளங்கவில்லை திருமதி பிறமென்ற். இது 1946ன் பிற்பகுதி. இன்னும் சில மாதங்களில் ஐரோப்பாவில் போர்முடிந்து இருவருடங்களாகிவிடும். ஆட்களை நாம் முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் மிகச் சகிக்க முடியாத நிலைமைகளிலும் வைத்திருக்கிறோம். கராஓலொஸ்சில் முட்கம்பி வேலிகளுக்கப்பால் உலகமொன்றிருப்பதை அறியாத ஏராளமான சிறுவர்கள் இருக்கிறார்கள். இப்போதைய பிரிட்டிஸ் கொள்கையை இப்போ நாம் உடைக்காவிட்டால், தங்களின் மிகுதிச் சீவிய காலம் முழுவதையும் அவர்கள் முட்கம்பி வேலிகட்குப் பின்னால்தான் செலவழிக்க வேண்டிவரும்."

"அதுதான் முக்கியமான பிரச்சினை. கராஓலொஸ் சம்பந்தமான எதுவும் கழுத்துவரை அரசியலில் புகைத் திருக்கிறது. பிரிட்சாருக்கும் இதுபற்றி அபிப்பிராயம் இருக்கலாம். நான் ஒரு பக்.கமும் சாரவிரும்பவில்லை." கிற்றி ஆவேசமாகச் சொன்னாள்.

"திருமதி பிறமென்ற், நான் பிரிட்டிஸ் இராணுவத்தில் ஒரு கப்டனாக இருந்தேன். துணிச்சலுக்கான இராணுவ சிலுவை விருதும் (Military Cross For Valour) எனக்கு வழங்கப்பட்டுள்ளது. பழைய பாணி வசனமொன்றில் சொல்ல வெண்டுமானால், உண்மை, எனது நல்ல நண்பர்களில் சிலர் பிரிட்டிஸ்காரர்கள்தான். உண்மை என்னவென்றால், பலஸ்தீனத்தில் நடப்பதைச் சகித்துக் கொள்ள முடியாத பல பிரிட்டிஸ் அதிகாரிகளும், போர்வீரர்களும் எங்களோடு இருபத்திநாலு மணிநேரமும் வேலை செய்கிறார்கள். இது ஒரு அரசியல் நிகழ்வல்ல. ஒரு மனிதாபிமானச் செயல்."

"அப்படியானால் நான் உங்கள் நோக்கில் நேர்மையைச் சந்தேகிக்கின்றேன். நீங்கள் ஏன் முந்நூறு பிள்ளைகளையும் ஆபத்துக்குள்ளாக்க வேண்டும்"என்றாள் கிற்றி.

"எல்லா மனிதப் பிறவிகளுக்கும் வாழ்வதற்கு ஒரு இலக்குத் தேவை. கராஓலொஸ்சில் ஒரு இலக்குமில்லை. உங்கள் சுதந்திரத்துக்காகப் போராடுவது ஒரு புனிதமான இலக்காகும். ஐரோப்பாவில், பலஸ்தீனத்துக்குள் போகவிரும்பும் கால் கோடி மக்கள் இருக்கிறார்கள். இதில் எந்த ஒருவரும், வாய்ப்புக் கொடுக்கப்பட்டால், கைரேனியாவில் கப்பலில் ஏறுவார்கள்."

"நீ ஒரு கெட்டித்தனமான மனிதன் திரு. பென்கானான். உங்களோடு என்னால் வாதிட முடியாது. உங்களைப்போல் தயாரித்து வைக்கப்பட்டிருக்கும் பதில் பட்டியல்கள் என்னிடம் இல்லை."

"நான் நினைத்தேன் நீங்கள் ஒரு தாதியென்று." அவன் சிறிது கேலி தொனிக்கச் சொன்னான்.

"உலகம் முழுவதும் துயரப்படுபவர்களால் நிறைந்திருக்கிறது. கராஓலொஸ் போலவே எனது சேவைகள் தேவைப்படும் ஆயிரக்கணக்கான இடங்களில் எவ்வித பிரச்சினைகளுமின்றி வழங்கமுடியும்."

"நீங்கள் கராஓலொஸ்சுக்கு ஒருமுறை போனபின் ஏன் இதைக்கூறக் கூடாது?"

"நீங்கள் என்னை ஏமாற்றவோ அல்லது சவால்களை விடுக்கவோ முடியாது. 'குக்' மாகாண ஆஸ்பத்திரியொன்றில் நான் இரவுகளில் வேலை செய்து உடல்களை முன் அறையிலிருந்தே அகற்றியிருக்கின்றேன். நான் ஏற்கனவே காணாததைதையும் கராஓலொஸ்சில் உன்னால் காட்ட முடியாது."

அறை நிசப்தமானது. அரி பென்கானான் நீண்ட பெருமூச்சொன்றை விட்டபடி தோல்விக்கறிகுறியாகக் கைகளை உயர வீசியபடி, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். சில நாட்களில் உன்னுடன் மீண்டும் தொடர்புகொள்கின்றேன் மார்க் பார்க்கர்." சொல்லிவிட்டுக் கதவுக்காகத் திரும்பி நடந்தான்.

"திரு. பென்கானான்" பின்னாலிருந்து கூப்பிட்ட கிற்றி "இந்த விடயங்களை நான் போய் எமது பரஸ்பர நண்பர்களுக்குச் சொல்லமாட்டேன் என்பது உங்களுக்கு எப்படி நிச்சயம் தெரியும்?"

அரி திரும்பிவந்து அவள் கண்களுக்குள் நேராக உற்று நோக்கினான். அந்தக் கணத்தில் பிழையாகத் தான் ஏதோ சொல்லிவிட்டதைக் கிற்றி உணர்ந்தாள். ஒரு கொடூரமான சிறிய சிரிப்பு அவன் முகத்தில் இழையோடியது. நீ மற்றப் பெண்களைப்போலவே, கடைசி ஆணை உனதாக இருக்க வேண்டும் என்று முயற்சிக்கிறாய். நான் ஆட்களை அடிக்கடி பிழையாக மதிப்பிடுவதில்லை. என்னால் அப்படிச் செய்ய முடியாது. நான் அமெரிக்கர்களை விரும்புகின்றேன். அவர்களுக்கு மனட்சாட்சி உண்டு. உன்னுடைய மனச்சாட்சி உன்னை வெல்லும்போது மண்ட்றியாவின் வீட்டில் என்னைத் தொடர்புகொள்ளலாம். கராஓலொஸ்சை நானே உனக்குச் சுற்றிக் காட்டுவதில் மகிழ்ச்சியடைவேன்."

"உன்னைப்பற்றி நீ நிறையவே நம்பிக்கை வைத்திருக்கிறாய் அல்லவா?"

"இப்படிச் சொல்லலாம். இந்த வினாடியில் என்னைப் பற்றி நீ எவ்வளவு நிச்சயமாக இருக்கிறாயோ அதைவிடக் கூடுதலாக நான் இருக்கிறேன்" சொல்லிவிட்டு அரி அறையைவிட்டு வெளியே நடந்தான். அரியின் வரவால் அறையில் ஏற்ட்ட தாக்கம் தளர, அரி சென்றபின் நீண்ட நேரம் எடுத்தது.

கிற்றி சப்பாத்துக்களை காலிலிருந்து வீசியெறிந்து விட்டுக் கட்டிலில் உட்கார்ந்து சொன்னாள், "நாம் இன்றைக்கு ஒரு சுவாரஸ்சியமான மாலை வேளையைச் சந்திக்கப்போகிறோம் என்று நீ சொன்னாய் தானே?"

"இதில் பங்கெடுப்பதில்லை என்று நீ செய்த முடிவு புத்திசாலித்தனமானது." மார்க் கூறினான்.

"அப்ப நீ?"

"இது எனக்கு வழக்கமான வேலை. எனக்கு ஏதாவது பெரிய விடயமே கிடைக்கலாம்."

தொடரும்...

**கடந்த நூற்றாண்டில் குறிப்பாக ரஷ்யா, போலந்து போன்ற நாடுகளில் யூதப்படுகொலைகள் அதிகரித்து இடம் பெற்றன. அதையடுத்து தாய்நாடு திரும்பும் உத்வேகம் நாடுகடந்த யூதர்களிடையே ஏற்பட்டது. 2-ம் உலக மகா யுத்தத்தின் போது ஹிட்லரின் நாஸி ஜெர்மனியில் 60 லட்சம் யூதர்கள் கொல்லப்பட்டனர். இதையடுத்து "தாயகம் நோக்கிய பயணம்" யூதர்களின் தாரக மந்திரம் ஆகியது.**

www.padippakam.com



## சிறுகதை




ாசி மாதத்துப் பனிக்குளிரைக் கூடப் பாருட்படுத்தாமல் – இனிய காலைப் பாழுதின் அழகை ரசித்தவாறே திவண்டியில் அந்தத் தெருவினூடாக ந்து கொண்டிருந்தான் செழியன்.

ளத்தில் விழுப்புண் அடைந்ததால் ருத்துவ சிகிச்சைக்காக அனும ிக்கப்பட்டிருந்த அவன் ஓரளவு லமடைந்திருந்தான். அதனால், மீண்டும் ளத்திற்குச் செல்ல முன் – தான் நேசித்து உறவாடிய அந்த மக்களை ஒரு தரம் பார்த்துவிட வேண்டும் என்ற வாஞ்சையுடன் வந்து கொண்டிருந்தான்.

வீதியில் எதிர்ப்பட்டவர்கள் அவனைக் கண்டதும் ஆச்சரியத்துடன் விழிகளை அகல விரித்தவாறு, "செழியன்" என்று ச்சரித்து மகிழ்ந்தனர். பதிலுக்கு அவர்களைக் குசலம் விசாரித்துவிட்டு அப்பால் சென்று கொண்டிருந்த அவனைக் கண்ட குழந்தைகள் "செழியன் மாமா, செழியன் மாமா" என்று செல்லமாக அழைத்தனர்.

அவர்களுக்குத் தன் கரங்களை அசைத்தவாறே புன்னகையை உதிர்த்துச் சென்ற அவனது முகத்தில் சில கணப் பொழுதில் அந்தப் புன்னகை மறைந்து வேதனையின் கோடுகள் பரவத் தொடங்கின.

சில மாதங்களுக்கு முன்பு செழிப்புடன் விளங்கிய அந்தக் கிராமம் – இன்று இடிந்த கட்டிடங்களையும் முறிந்த மரங்களையும் கொண்டு விளங்கிய கோலம் – இராணுவ அட்டூழியங்களை எண்ணி அவன் மனதைக் கோபப்பட வைக்க வேதனையின் சாயல் முகத்தில் பரவிற்று.

✧ ✧ ✧ ✧ ✧

தன் சகபோராளி கபிலனின் வீட்டை அடைந்த செழியனை உரக்கக் கூவி வரவேற்றார் ஆசிரியர் பரமசிவம்.

அவரது மனைவி, பிள்ளைகள் அனைவரும் ஓடிவந்து அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

மறுபிறவி எடுத்து வந்த ஒருவனைக் கண்ட ஆனந்தம் அவர்கள் கண்களில் தெரிந்தது.

வார்த்தைகள் எவையுமே எழாமையால் தம் விழிகளினால் பல தடவைகள் அவனை அளந்தனர்.

சிரித்தவாறே அனைவரையும் பாசத்துடன் பார்த்தான் செழியன்.

தொடர்ந்து அங்கு நிலவிய நிசப்தத்தைக் கலைத்தார் பரமசிவம்.

"என்ன தம்பி........ காயம் வடிவா மாறீட்டுதோ......!"

"காயம் ஒண்டும் பெரிசில்லை ஐயா........ சும்மா காலிலை........ ஒரு சின்னக் காயம்........ 'பீஸ்' கிடந்து எடுத்தாச்சு........ புண் மாறினாச் சரி......"

சாதாரணமாகப் பதிலளித்தான் அவன். "என்ன தம்பி........ சின்னக் காயம் எண்டிறியள்........ கன தூரத்துக்குக் கட்டுப் போட்டிருக்கு........"

கமலத்தின் குரலில் தாய்மைக்குரிய பரிவு தெரிந்தது.

"என்னம்மா........ இதைவிடப் பெரிய பெரிய காயங்களோடை எல்லாம்....... அங்க பெடியள் சண்டையில நிக்கிறாங்கள்........ எனக்கென்ன காயம். நான் உங்கள் எல்லாரையும் பாத்திட்டுப் போகவெல்லோ வந்தனான்........" என்றவாறு சிரித்த செழியன், சம்பாசனையை வேறு பக்கம் திருப்பினான்.

"அப்ப....... கமலியும், மோகனும் பள்ளிக்கூடம் என்ன மாதிரி......"

"போறனாங்கள் செழியண்ணா"

கமலியைத் தொடர்ந்தான் மோகன். "இவ்வளவு நாளும் அங்க இடம்பெயர்ந்த ஆக்கள் இருந்தவை......... இப்ப........ இயக்க அண்ணாக்கள் அவைக்கு வேற வீடுகள் போடத் தடி தண்டுகள் எல்லாம் குடுத்து வீடு போட்டாப் பிறகு பள்ளிக்கூடம் தொடங்கி இருக்கு"

"பிள்ளையளும் எவ்வளவை எண்டுதான் கவனிக்கிறது......"

தனக்குள் கூறியவாறே உள்ளே சென்ற கமலம், காலைத் தேநீரை எடுத்து வந்து அனைவருக்கும் பரிமாறினாள்.

தேநீரைப் பருகியவாறே, "மெய்ய........ தம்பி......." என்றவாறு செழியனை நெருங்கி வந்தார் பரமசிவம்.

கமலியும் மோகனும் அவ்விடத்தை விட்டு அகல – இருவரின் உரையாடலும் தனிமையில் தொடர்ந்தது.

"இப்ப ஏழெட்டு வருசமா இயக்கத்தில இருக்கிறியள் தம்பி...... கேக்கிறன் எண்டு குறை நினையாதேங்கோ......

எத்தினையோ சண்டைக்குப் போய் காயப்பட்டும் இருக்கிறியள்........ இனியெண்டாலும் விலத்தி வந்து ஒரு கலியாணத்தைக் கட்டிக் கொண்டு......."

செழியன் வாய் விட்டுச் சிரித்தான். "என்னய்யா....... நாடு பத்தி எரியேக்கை பிடில் வாசிச்சுக் கொண்டிருந்த அரசன்ர கதையல்லே சொல்லுறியள்........ எங்கட மண்ணை எப்பிடி இந்த 'ஆமி'யிட்டை இருந்து மீட்கிறது எண்டதுதான் இப்ப என்ர முழு நோக்கமும்......"

> "என்னய்யா..... நாடு பத்தி எரியேக்கை பிடில் வாசிச்சுக் கொண்டிருந்த அரசன்ர கதையல்லே சொல்லுறியள்...... எங்கட மண்ணை எப்பிடி இந்த "ஆமி"யிட்டை இருந்து மீட்கிறது எண்டதுதான் இப்ப என்ர முழு நோக்கமும்......"

இடைமறித்தார் பரமசிவம். "இல்லைத் தம்பி, ஒரு கலியாணத்தைக் காலா காலத்தில கட்டி, பிள்ளையளைப் பெத்தால்தான் நாங்களும் இந்த உலகத்தில வாழ்ந்ததுக்கு அர்த்தம் இருக்கும்......... இல்லாட்டி........ நாங்கள் செத்தாப் பிறகு இந்த........ உலகத்தில நாங்களும் வாழ்ந்தம் எண்டதுக்கு.........




என்ன அத்தாட்சி......?"

பரமசிவத்தார் சொல்லுவது செழியனுக்குப் சரிபோலப் படவில்லை. ஆனாலும், அவரது உலகியல் ஞானம் அவரை அவ்வாறு பேச வைப்பதாக நினைத்துக் கொண்டான்.

"என்னய்யா சொல்லுறியள்? கலியாணம் அது......... இது எண்டு இல்லாமலே எங்கட மண்ணில அர்த்தத்தோடை எத்தினையோ பேர் வாழ்ந்ததுக்கு......... அத்தாட்சிகள் இருக்கு......"

செழியன் இவ்வாறு கூறியபோது, மாவீரர்களான அவனது சக தோழர்கள் அவனது மனத் திரையில் தோன்றி நின்றனர்.

"என்னவோ தம்பி......... நல்லா யோசிச்சுச் செய்யும்........" தனது கோரிக்கைக்கு முற்றுப் புள்ளி வைத்தார் பரமசிவம்.

செழியனைப் போன்றே சிரித்த முகத்துடன், ஆதவனும் வானில் வந்து கொண்டிருந்தான்.

"செழியண்ணா........ போட்டு வாறம்......" என்று கூறி கமலியும் மோகனும் விடைபெற்றுக் கொண்டு நடந்தனர்.

கமலத்திடமும், பரமசிவத்திடமும் விடைபெற்ற செழியன், தெருவரைக்கும் மிதிவண்டியை உருட்டியபடி நடக்கத் தொடங்கினான்.

விழுப்புண் அடைந்திருந்த தனது காலை மெதுவாக இழுத்திழுத்து அவன் நடந்து செல்வதைக் கலங்கிய விழிகளுடன் பார்த்து நின்றாள் கமலம்.

தெருவுக்கு வந்து மிதிவண்டியில் ஏறிக்கொண்ட செழியனது மனம் – சில நிமிடங்களுக்கு முன் ஆசிரியர் பரமசிவத்துடனான தனது உரையாடலை ஒரு தரம் மீட்டுக் கொண்டபோது, அவனது சிந்தனை பல ஆண்டுகளைக் கடந்து பின்நோக்கிச் சென்றது.

திருகோணமலை மண்ணிலே பிறந்து வளர்ந்த அவனது அக்காவும், கணவன் – பிள்ளைகளும் இராணுவக் கும்பலினால் கொலை செய்யப்பட்ட கோரமான சம்பவம்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

படிப்பகம்

www.padippakam.com



# நடுப் பக்கத் தொடர்ச்சி

## இத்தாலியில் ...

பகுதியில் உள்ள கத்தானியாவிலிருந்தும் பல தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். பலெர்மோவில் உள்ள தேவாலயமொன்றில் **தமிழில் திருப்பலிப் பூசைகள்** தமிழீழ மக்களின் அமைதி வேண்டி நடைபெற்றது.

**01-11-1996** அன்று இத்தாலியின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து பொலோனியா எனும் இடத்தில் **ஆர்ப்பாட்ட ஊர்வலம்** ஒன்றை நடாத்தியிருந்தனர். 'எமிலியா றொமானியா' தமிழ்ச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் ஊர்வல முடிவில் மாநகர முதல்வருக்கு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது. சர்வதேச தமிழர் சம்மேளத்தினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் இத்தாலிய மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டு ஆயிரக்கணக்கான **துண்டுப் பிரசுரங்கள்** அந்நாட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

இந் நிகழ்வுகளை இத்தாலியில் உள்ள குறிப்பிடத்தக்க சில பத்திரிகைகள், தொலைக்காட்சி நிறுவனங்கள் முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்டிருந்தன. ✷

## கனடாவில் ...

முன்னாலும் **விழிப்புப் போராட்டம்** நடாத்தப்பட்டது. விடுதலைப் புலிகளின் அனைத்துலக நிதிப் பொறுப்பாளர் லெப்.கேணல் நாதன், ஈழமுரசு ஆசிரியர் கஜன் ஆகியோரைப் படுகொலை செய்த சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் எனவும், சிறிலங்கா அரசின் நாசகார நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டும் எனவும் கோரி மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. ◆

## லண்டனில் ...

செய்தியாளர்கள் மற்றும் இலண்டனில் வெளிவரும் சில பத்திரிகைகளின் நிருபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். சிங்களப் பேரினவாத அரசால் தமிழ் மக்கள் மீது மேற் கொள்ளப்படும் பயங்கரவாதத்தின் அவலங்களை, ஒளிநாடா மற்றும் புகைப்பட கண்காட்சியூடாகச் செய்தியாளர்கள் அறிந்து கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

**02-11-96** அன்று ஈழம் இல்லத்தில், சதக்-பேர்மென்சே தொகுதியைச் சேர்ந்த **பிரித்தானியா பாராளுமன்ற உறுப்பினர் சைமன் கியூஸ்** அவர்களுடன் நடாத்தப்பட்ட **ஒன்று கூடலின்** போது, தாயகத்தில் எமது மக்கள் மீது மேற்கொள்ளப்படும் சிறிலங்காவின் அரச பயங்கரவாதம் பற்றி விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. தென்னாபிரிக்கப் போராட்டத்துக்கு ஆதரவாகக் குரல்கொடுத்தது போன்று, இனிமேல் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகச் செயற்படப்போவதாக, திரு. சைமன் கியூஸ் அவர்கள் ஒன்றுகூடலில் கலந்து கொண்ட மக்களிடம் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**04-11-1996** அன்று, லண்டனில் அமைந்துள்ள பி.பி.சி தொலைக் காட்சி நிறுவனம், றொய்ட்டர் செய்தித் தாபனம் மற்றும் ரைம்ஸ் பத்திரிகைக் காரியாலயம் முன்பாக **அடையாள கவன ஈர்ப்பு ஒன்று கூடல்கள்** இடம்பெற்றன.

கவன ஈர்ப்பு வாரத்தின் இறுதி நாளான **05-11-1996** அன்று, சிறிலங்காவிற்கு அமெரிக்க அரசு வழங்கும் இராணுவ உதவிகளை நிறுத்தக் கோரி, லண்டனில் உள்ள அமெரிக்கத் தூதராலயத்திற்கு முன், கவன ஈர்ப்பு ஒன்று கூடல் இடம் பெற்றது.

இதே தினத்தில், குறிப்பிடக்கூடிய அம்சமாக, லண்டனில் முதல் முறையாக ஒரே நேரத்தில் பல தமிழ் மக்கள் **இரத்த தானம்** செய்துள்ளனர். ✷

## நோர்வேயில்...

ஒன்றுகூடல் நடாத்தப்பட்டது. இவ் ஒன்றுகூடலின் இறுதியில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. மகஜரைப் பிரதம மந்திரியின் சர்வதேச ஆலோசகர் பெற்றுக் கொண்டார்.

சிறிலங்கா அரசின் ஒடுக்கு முறைகளால் தமிழ் மக்கள் படும் துயரங்களை, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு நோர்வே கிளைப் பிரதிநிதிகள் எடுத்துரைத்ததைச் செவிமடுத்த அவர், மனித உரிமைகள் விடயத்தில் தாம் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் சென்றடையும் விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்துவதாகவும் உறுதியளித்தார்.

பேர்கன் நகரிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் 2-11-1996 அன்று **வீதி நாடகம்** நடாத்தப்பட்டது. சிறிலங்கா அரசினால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் பயங்கரவாத நடவடிக்கைகளை விளக்கும் வகையில், நோர்வேஜிய மொழியில் இந் நாடகம் அமைக்கப்பட்டிருந்தது.

கவன ஈர்ப்பு வாரத்தின் இறுதி நாளான 5-11-1996 அன்று பேர்கனில் **பொதுக்கூட்டமும், தீப்பந்த ஊர்வலமும்** இடம்பெற்றன. பொதுக் கூட்டத்தில், நோர்வே பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான கட்சிகள் கலந்து கொண்டு சிறிலங்கா அரசின் இனவிரோதக் கொள்கையைக் கண்டித்ததுடன், தமிழ் மக்களுக்கு நீதியுடனான சமாதானம் கிடைக்க வேண்டும் என வலியுறுத்தின.

தீப்பந்த ஊர்வலத்தின் இறுதியில் பாராளுமன்ற உபசபாநாயகரிடம் **மகஜர்** ஒன்றும் கையளிக்கப்பட்டது. சீரற்ற காலநிலையையும் பொருட்படுத்தாது பெருமளவு மக்கள் தீப்பந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இத் தீப்பந்த ஊர்வலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, நோர்வே தொலைக் காட்சி நிறுவனம் அன்றைய தனது செய்தியறிக்கையில் இதனை ஒளிபரப்பியுள்ளது.

இதேவேளை, 5-11-96 அன்று காலை நடைபெற்ற **நோர்வேயின் சிறிலங்காவிற்கான அபிவிருத்தி உதவி சம்பந்தமான கருத்தரங்கில்,** மனித உரிமை மீறல்கள் நடைபெறும் சிறிலங்காவிற்கு உதவி வழங்குவது பலத்த விமர்சனத்திற்கு உள்ளானது. நோர்வே நாட்டின் முக்கிய அறிஞர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். ✷

## சுவிசில்...

கவன ஈர்ப்பு வாரத்தின் 3வது நாளான **01-11-1996** அன்று சுவிசில் உள்ள ஆலயங்கள், தேவாலயங்கள் பலவற்றில் தாயகத்தில் அல்லலுறும் மக்களின் நலன் வேண்டியும், நிரந்தரத் தீர்வு வேண்டியும் **விசேட பூசைகள்** நடைபெற்றது. மறுதினம் சிறிலங்கா அரசின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உள்ளாகும் எம் மக்களின் அவலங்களைச் சுவிசில் உள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிற்கும் பொதுமக்களிற்கும் தெரியப்படுத்துவற்கும் அவர்களது உதவி கோரியும் சுவிஸ் நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் காலை முதல் மாலை வரை **துண்டுப் பிரசுரங்கள்** விநியோகிக்கப்பட்டன.

**03-11-1996** அன்று நள்ளிரவு 11.59 மணி முதல் **04-11-1996** திங்கட்கிழமை நள்ளிரவு 11.59 மணி வரை பேர்ண் (Bern) மாநிலத்தின் Tauben Str-4இல் அமைந்துள்ள தேவாலயத்தின் ஒரு பகுதியில் **விழிப்புப் போராட்டமும், உண்ணா விரதமும்** இடம்பெற்றன.

உண்ணா விரதத்தை திரு. நடராசா முரளிதரன் மங்கள விளக்கேற்றி தொடங்கி வைத்தார். உண்ணாவிரதத்தின் இடையில் 8.59 மணிக்கு விசேட பூசையும் 2 மணிக்கு பத்திரிகையாளர் மாநாடும், பிற்பகல் 4.30 மணியளவில் பல நூற்றுக்கணக்கான மக்கள் ஊர்வலமாக பாராளுமன்றத்தை நோக்கிச் சென்றனர். சர்வதேச தமிழர் சம்மேளனத்தினால் மகஜர் கையளிக்கப்பட்டது. தாயக மக்களின் அவலங்களைச் சித்தரித்து திரு.ரி.எஸ். போஸ் அவர்களால் வரையப்பட்ட ஓவியமும், சுதந்திரம் எனும் ஒளியின்றி இருட்டினில் அவலப்படும் எம் மக்களிற்கு உங்கள் கரங்களால் ஒளியேற்ற முன் வாருங்கள் எனக் கோரியும் பெரியதோர் மெழுகுவர்த்தியும் பாராளுமன்ற பிரதிநிதியிடம் கொடுக்கப்பட்டதோடு, ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள், கைகளில் மெழுகு வர்த்திகள் ஏற்றி ஏந்திய வண்ணம் மீண்டும் தேவாலயத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

மாலை 5.59 மணிக்கு தேவாலயத்தினுள் சென்று தாயகத்தில் வாழும் எம் மக்களின் சுபீட்சத்தை வேண்டி பிரார்த்தனைகள் செய்யப்பட்டன. பிரார்த்தனைகள் தமிழிலும், யேர்மன் மொழியிலும் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

உண்ணாவிரதத்தை முடிவிற்குக் கொண்டுவரும் நிலையில், அந் நிகழ்வில் கலந்து கொண்ட சுவிஸ் கட்டிட, தொழிற்சாலைச் தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர் மக்கள் முன் சிறு உரையாற்றுகையில், தமிழ் மக்களது விழிப்புப் போராட்டங்களுக்கு ஆதரவு நல்குவதோடு, சிறிலங்கா அரசைக் கண்டித்தும் தமிழ் மக்களின் போராட்டத்தை அங்கீகரித்தும் தமிழர்கள் தாயகத்தில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தை வெளியேறக் கோரியும் மனிதாபிமான அடிப்படையில் சுவிஸ் அரசை ஈழத் தமிழர்களிற்கு உதவி செய்யக் கோரியதோடு, தற்போதைய சூழ்நிலையில் தமிழர்களைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என சுவிஸ் அரசைத் தாம் கேட்டிருப்பதாகவும் தெரிவித்தார். இவை பற்றிய அறிக்கை ஒன்றையும், சர்வதேச தமிழர் சம்மேளனம் சுவிஸ் கிளையிடம் கையளித்தார்.

தொடர்ந்து, 11.59 மணிக்கு திரு. நடராசா முரளிதரன் அவர்கள் உண்ணாவிரதத்தை முடித்து வைத்து சிறப்புரை ஆற்றியதைத் தொடர்ந்து பேர்ண் மாநில தமிழ் மக்களால் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்ட மக்களிற்குப் போசனம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு அன்றைய கவன ஈர்ப்பு வார நாள் நிறைவடைந்தது. கவன ஈர்ப்பு வாரத்தின் இறுதி நாளான 5-11-1996 அன்று சர்வதேச சமூகத்தின் ஆதரவு கோரி ஐரோப்பிய மொழிகளில் அச்சடிக்கப்பட்ட **சுவரொட்டிகள்** எல்லா மாநில நகர, சிறு நகரங்களிலும் பெருமளவில் ஒட்டப்பட்டிருந்தது. ✷

## பிரான்சில்...

அத்துடன் ஐ.நா. பொதுச் செயலாளருக்கும், தமிழ் மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை நேரடியாகச் செய்யுமாறு கோரி, தமிழ் மக்கள் மற்றும் பிரெஞ்ச் மக்கள் மூலமாகவும் 15,000க்கும் மேற்பட்ட அஞ்சல் அட்டைகள் அனுப்பப்பட்டன.

இரண்டாம் நாளான 2-11-1996 அன்று மாலை 6 மணி தொடக்கம் மெழுகுவர்த்தி ஏந்தி மாபெரும் விழிப்புப் போராட்டம் நடாத்தப்பட்டது. பாரிஸ் நகரில் Place de la Bastille என்னும் இடத்தில் நடைபெற்ற இப் போராட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் உணர்வுபூர்வமாக கலந்து கொண்டார்கள். அன்றைய தினம் லண்டனில் இருந்து வருகை தந்திருந்த சிறிலங்கா அரச பயங்கரவாதத்திற்கு எதிரான அமைப்பின் பிரதிநிதி செல்வி டியற்றி மக்.கொணல் (Ms. Deirdre McConnell) கலந்து கொண்டு உரையாற்றினார்.

பாரிசில் படுகொலை செய்யப்பட்ட எங்கள் கஜனையும், நாதனையும் நினைவுகூர்ந்து பேசிய அவர், அந் நிகழ்வை வன்மையாக கண்டித்ததுடன், சிறிலங்கா அரசே இச் சம்பவத்தின் சூத்திரதாரி எனவும் குற்றம் சாட்டினார். தனது கைக்கூலிகளால் எமது இரு பிரதிநிதிகளைப் பாரிசில் கொலை செய்த சந்திரிகா அரசு, வெகு விரைவில் மேற்குலகில் நிதி உதவி கேட்டு இங்கு பாரிசிற்கு வர இருக்கின்றது என்பதையும் அவர் நினைவுபடுத்தினார்.

மறு நாள் 03-11-1996 அன்று பாரிஸ் Trocadero என்னும் இடத்தில் நடைபெற்ற ஒன்று கூடலிலும் 1000க்கும் மேற் பட்ட மக்கள் கலந்து கொண்டு பிரெஞ்ச் மக்களுக்கு தாயக மக்களின் அவலங்களை வெளிப்படுத்தினர். இவ் ஒன்று கூடலில் விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் லோறன்ஸ் திலகர் உரை நிகழ்த்தினார்.

தற்போதைய யாழ். குடாநாட்டின் நிலைகளை விளங்கப்படுத்திய அவர், பாரிசில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களான கஜன் – நாதன் ஆகியோரின் கொலையின் பின்னணியில் சிறிலங்கா அரசுதான் செயற்பட்டிருக்கிறது என்பதையும் மக்களுக்குத் தெளிவுபடுத்தினார்.

இதேவேளை, பாரிசின் புறநகர்ப் பகுதிகளிலும் மெழுகுவர்த்தி விழிப்புப் போராட்டங்கள் நடைபெற்றன.

லா கோரனேவ் ஒபே வில்லியர், சேர்சி பொந்துவால், எவ்றி, செவ்ரோன் போன்ற இடங்களில் நூற்றுக்கணக்கான மக்கள் அங்குள்ள தேவாலயங்களிலும், நகர மையங்களுக்கு முன்னாலும் ஒன்றுகூடி ஒளிதீபம் ஏற்றி தமது உணர்வுகளை வெளிப்படுத்தியுடன், பிரெஞ்ச் மக்களுக்கு துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து இதன் நோக்கங்களையும் வெளிப்படுத்தினர். தாயகத்தில் இடம்பெற்ற மாபெரும் இடப்பெயர்வின் முதலாண்டு நினைவாக சர்வதேச ரீதியாக நடைபெற்ற இக் கவன ஈர்ப்பு வாரத்தில், பிரான்சில் நடைபெற்ற பல நிகழ்வுகள் ஏராளமான பிரெஞ்ச் மக்களுக்கு, தமிழ் மக்களின் போராட்டம் பற்றிய ஒரு தெளிவையும் விளக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளதில் வெற்றி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

படிப்பகம்

www.padippakam.com





# போராளியின் குருதிச்சுவடுகள்

# டேவிட் . . . கடலில் கலந்த கவிதை



லெப். கேணல் டேவிட்
(கிறிஸ்தோபர் அன்ரனி மரியதாஸ்)
பலாவிக் குடியேற்றம், பொலிகண்டி,
யாழ்ப்பாணம்
பிறப்பு: 29.01.1966 வீரச்சாவு: 09.06.1991

தமிழீழத்தின் திசைகளில் மோதும் காற்றில் கலந்துவிட்ட தென்றல்.

விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு பரிமாணங்களையும் தன் காலத்திலேயே நேரடியாகக் கண்ட மிகச் சில போராளிகளில் ஒருவன்.

தமிழீழத்தின் விடுதலைப் போராட்டம், எல்லாக் காலங்களிலும் கடற் பிரயாணங்களை முதன்மைப்படுத்துவதாகவே அமைந்தது. எத்திசையும் கடலால் சூழப்பட்ட எம் தாயகத்தின், தாக்கமுள்ள நகர்வுகள் கடல் மூலமே மேற்கொள்ளப்பட்டன. எமது விடுதலைப் போராட்டத்தில் கடற்பயணங்கள் பிடித்திருந்த அதே அளவு இடத்தை, எமது கடல் சரித்திரத்தில் டேவிட் பிடித்திருந்தான். அவனது இளமையிலேயே கடல் அவனை அழைத்தது. அவனது குடும்ப நிலை அவனைக் கடலுக்கு அனுப்பியது.

"இயக்கம் கடலிலும் பிரயாணம் செய்ய வேண்டிவரும்" என்ற காலம் போய், "இயக்கத்தின் பிரயாணம் கடலில்தான்" என்று வந்துவிட்ட 1983இல், இயக்கத்திற்காய் கடலில் இறங்கினான்.

தமிழீழத்தின் ஒவ்வொரு கரையிலும் கால் பதித்தான். நீண்ட பெரும் கடற்பரப்பு; கடற்பரப்பில் புள்ளியாய் நகரும் படகு, படகினைப்போல் பல மடங்கு விரிந்து, எழுந்து, விழுங்க வரும் அலைகள். சமுத்திர ராட்சதனின் அலைவாய் மூடமுதல், விரைந்து தத்திப்பாய்ந்து வெளியேறித் திரும்பிப் பார்க்கும் லாவகம்; திரும்பிய பார்வை நேரே நோக்க அடுத்த பெரும் அலை.

படகினை பல்மடங்கு வேகத்துடன் துரத்தி, தீ உமிழும் பீரங்கி வாய்கள். அவற்றின் பல்முக நகர்வுகளிலும் தப்பி, தத்திச் செல்லும் வேகம். பின்னால் வரும் எதிரியின் கை அதிகமாய் நெருங்கின், நின்று – நிதானித்து இயந்திரத் துப்பாக்கியை இயக்க ஆணையிடும் உறுதி, அந்தக் கணத்தில் எதிரி அடையும் அதிர்ச்சி – டேவிட்டைப் பல தடவைகள் கரை சேர்த்துள்ளன.

அவனது கடற்பயணங்கள் மெய் சிலிர்க்கும் பல அனுபவங்களைக் கொண்டன. அவனது ஆசான்களும், நல்ல நண்பர்களும் கடலிலேயே கலந்துவிட்டனர். அப்போதெல்லாம் கூட, அவன் கடலில் நிலைத்து நின்றான். அவனது தப்பியோடும் லாவகமும், தேவையின்போது எதிர்த்து நின்று எதிர்கொள்ளும் நெஞ்சுறுதியுமே அவனை நிற்க வைத்தன.

இன்று இயக்கத்தின் வசமுள்ள பெருமளவு ஆயுதங்களுக்கு டேவிட்டைத் தெரியும்.

ஆம்! அவை எமது கைகளுக்குக் கிடைப்பதற்கிடையில் டேவிட் இறந்திருப்பான்.

அநேகமாக எப்போதுமே நாம் கரையில் காணும் டேவிட்டை கடலில் சந்திக்க முடியாது. ஒருங்கிணைந்த சிந்தையுடன் தன்னை நம்பி படகில் ஏறிய, "நீந்தத் தெரியாத சுமைகளுக்கு" உத்தரவிடும் டேவிட், கடுமையான வசைகளால் ஓட்டிமாரைக் கட்டுப்படுத்தும் மாலுமி. கடலில் டேவிட்டை டேவிட்டாகப் பார்ப்பது கடினம்.

எப்போதாவது மிக அபூர்வமாக சீரான, 'நேவி'யில்லாத ஒதுக்குப்புறக் கடலில், நல்ல நிலவும் சேர்ந்தால் அவனது படகு நிற்கும். இயந்திரச் சத்தத்தை மேவி அவன் குரல் ஒலிக்கும். "கடல் மேல் பிறக்க வைத்தான் ........" அவனது குரல் இனிய சங்கீதம் இல்லைத்தான்; ஆனாலும் அவன் பாடினால், நின்று நிதானித்துக் கேட்க வைக்கும் வசீகரம். அந்த வசீகரம் அவனது குரலுக்கா அல்லது அவன் பாடும் பாடல்களுக்கா?

அவனது குரலில் பாடல் கம்பீரம் பெறுவது தெரியும். அந்தக் குரலுக்கு, அவன் தெரிவு செய்யும் பாடல்களைவிட, வேறு பாடல் எடுபடாதென்பதும் புரியும்.

அவனைத் தெரிந்த – அவனுடன் பழகாத எல்லோராலும் கூறப்படும், எண்ணப்படும், எண்ண வடிவங்களுக்கு அப்பாற்பட்ட போராளி. அநேக போராளிகளைப் போல் அவனுக்கும் 'பழஞ்சோறு குழைத்துக் கையிலே கொடுக்கும் அம்மா'; 'ஆமியின் வெடி கேட்டும் சிறுபற்றை சரசரக்காமல் தேத்தண்ணிச் செம்புடன்' அண்ணனை – அண்ணனின் தோழர்களைத் தேடும் தங்கைகள்'. வீட்டின் நிலையை எண்ணுவதா? நாடா? என்ற கேள்விக்கு எப்போதுமே குழப்பமில்லாத பதிலைத் தன்வசம் வைத்திருந்த போராளி. மிக நெருக்கமான நண்பர்களிடம் மட்டும், "தங்கச்சியவை......." என்று கூறிக் கண்கலங்கும் அண்ணன்.

எப்படிப்பட்ட வேலையாக இருந்தாலும், அவ் வேலையின் முக்கியத்துவம் விளங்க வைக்கப்பட்டால், அந்த வேலையைச் செய்து முடிக்கும் வரை அவன் ஓய்வது அபூர்வம். அவனது நினைவுகள் மீட்டப்படும்போது, திரும்பத் திரும்ப அவனது அக் குண நலனே எவருக்கும் முன்நிற்கும்.

தமிழீழத்தின் கடற்பரப்பில் மட்டுமல்ல, தமிழீழத்தின் தரைப்போர் வாழ்க்கையிலும் அவன் சாதித்தவை அதிகம். அதிலும் வடமராட்சியில் நடைபெற்ற அநேகமான சண்டைகளில் அவனது சுவடுகள் பதிந்திருந்தன.

இந்திய இராணுவத்திற்கு முந்திய போர் வாழ்வில், 'லிபரேசன் ஒப்பரேசனு'க்கு முன்பும் பின்பும் வடமராட்சியில் அவன் பங்கு அதிகம். 'லிபரேசன் ஒப்பரேசனு'க்கென இராணுவம் புறப்பட்டதிலிருந்து, நெல்லியடி முகாமுக்குள் மில்லர் புகுந்ததுவரை அவன் ஓயவில்லை.

இந்திய இராணுவம் போர் ஆரம்பித்த காலத்தில் தமிழ்நாட்டில் தங்கியிருந்தவன், போர் ஆரம்பித்து கொழுந்துவிட்ட நேரத்தில், தள்ளியிருக்க முடியாமல் ஒரு கட்டுமரத்தில் வந்து சேர்ந்தான். இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் வடமராட்சியில் இயக்கத்தை உயிர்த் துடிப்புடன் வைத்திருந்ததில், அவன் பங்கு மிகப் பெரியது.

அநேகமாக இயக்கத்தின் எல்லாத் துறைகளிலும் தனது முத்திரையைப் பதித்தவன். அரசியல் .........? அவன் அரசியல் வித்தகன் இல்லைத்தான். எனினும், தான் ஏந்திய துப்பாக்கி எதற்காக என்பதில் குழப்பம் இல்லாதவன்; மக்களுடன் பழகும் போதினில் அந்த மக்களில் ஒருவனாக நின்று சிந்திக்கத் தெரிந்தவன். எல்லாத் தலைமறைவுக் கால வாழ்க்கையிலும், மக்களால் பாதுகாக்கப்பட்டவன். டேவிட் நின்றால் இராணுவத்தைப் பார்த்துச் சொல்வதற்கென, ஒரு முதியோர் படையே திரளும்.

அவன் உலவும் ஊர்களில் சிறு குழந்தைக்கும் அறிமுகமாகிவிடும் முகராசி. சிறுவர்களை ஒரு தட்வை சந்தித்தால், மறுதடவை சந்திக்கும்போது அவர்களைப் பெயர் சொல்லி அழைக்கும் நட்புணர்வு; அல்லது அவர்கள் வெட்கத்தில் முகம் சிவக்க இவன் ஒரு பெயர் வைத்திருப்பான். சிறுவர்கள் என்றல்ல எவருடனுமே நட்பைப்



லெப் . கரிகாலன்
(சிதம்பரப்பிள்ளை சுரேஸ்)
வரணி வடக்கு, யாழ்.
பிறப்பு: 09-10-1971 வீரச்சாவு: 09-06-1991

பேணுவதில் தனித்துவமானவன். பழைய நண்பர்களை மீண்டும் சந்திப்பதில் தனியான ஆர்வமுள்ளவன்.

எப்போதோ ஒருமுறை 'வண்டி விட்ட கரையில்' லாம்பு வெளிச்சத்தில் சாப்பாடு கொடுத்தவரை யாழ்ப்பாணத்தில் கண்டு "என்னைத் தெரியேல்லையே, களுவன் கேணியில றால் கறியோடை புட்டுச் சாப்பிட்டனாங்கள் எல்லே" என்று கேட்டு அசத்துவான்.

பழைய நண்பர்கள் ஒன்றாகச் சேர்ந்தால், மறந்துவிட்ட – திரும்பக் கிடைக்காத – நினைவுகளை மீட்டுவது டேவிட்தான். இவனது நட்பைப் பேணும் பண்பால் பலராலும் விரும்பப்பட்டவன். சிலவேளைகளில் வேலை நேரங்களிலும் 'நட்பைப் பேணப்போய்' வாங்கிக்கட்டிக்கொண்டு தலையைச் சொறிவான்.

இயக்கம் மிக அரிதாகச் சந்தித்த 'எல்லா வேலைகளிலும் வல்லுனர்களாக விளங்கக் கூடிய' சிலரில் டேவிட் ஒருவன். ஆனால், கடல் என்பது 'பெரிய கடலாக' இருந்தது. அதில் இயக்கத்தின் கடற்பிரிவு மிகச்சிறியதாக இருந்ததால், அவனால் கடலை விட்டுவிட்டு வரமுடியவில்லை. அவனது குறைந்த பாடசாலைக் 'கல்வியின் போதும்கூட பெரிய திட்டமிடல் திறன் இருந்தது. அது புரிந்தவர்கள் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது.

அவனது எதிர்பார்ப்புகளுக்கெல்லாம் அவனுக்குக் களம் கிடைக்கவில்லை; கடல் அவனை மறித்து வைத்திருந்தது.

ஒரு மிக முக்கிய கடற்பயணம். தேவை பெரியது. டேவிட் தேவையான ஒழுங்குகளை வழமைபோல் பார்க்கிறான். கடல் தெரிந்தவர்கள் கடலில் ஓடத் தயங்கும் காலநிலை. ஆனாலும் பிரயாணம் அவசியமானதாகவும், ஒத்திவைக்க முடியாததாகவும் இருந்தது.

கடலைத் தவிர எல்லாமே வழமை போலத்தான். வழமையான தடல்புடல், வேகமான 'பிக்கப்'........ பெரிய நம்பிக்கை விதையை நெஞ்சில் விதைத்துவிட்டு டேவிட் ஆயத்தமாகிறான். வழமையாக ஓடித்திரியும் 'நேவி'யையும் காணவில்லை. எல்லாமே நம்பிக்கையுடன் இருக்கிறது. வண்டி புறப்படும் – அதுவும் டேவிட் நேரில் புறப்படும் – காரணம் சொல்லப்படாவிட்டாலும், வழமைபோலவே ஊகித்துக் கொண்டு வழி அனுப்புகிறார்கள். டேவிட்டை அன்புடன் வளர்த்துப் பாதுகாத்த மக்கள் – அவனுடன் மிக அன்பாகப் பழகியவர்களில், நல்லாய்க் கடல் தெரிந்தவர்கள் அன்று கரைக்கு வரவில்லை.

படகு நீரில் இறங்குகிறது. 'குழந்தைப் பிள்ளையைக் கையிலே பிடித்துக் கூட்டிச் செல்லும் வாஞ்சையுடன்' இரு கரையிலும் ஆட்கள் வரிசையாய் நின்று, படகினைக் கடலுள் இழுத்துச் செல்கிறார்கள். இடுப்பளவு தண்ணீரில் இறங்கிய பின்னர், அணியத்தில் நின்ற அரி, தடியால் ஊன்ற – படகு தள்ளாடி நகர – அண்ணார்ந்து நின்ற இஞ்சின் வால்கள் தண்ணீரில் குளிக்க, எல்லாம் வழமைபோலவே.

"நல்லாச் 'சேவிஸ்'போட்ட இஞ்சின். ஒரு இழுவையில் 'ஸ்ராட்' வர" இருட்டில் நின்ற தோழர்களும், மக்களும் வண்டியில் நிற்பவர்களுக்கு 'தெரியாது என்று தெரிந்தும்' கையை உயர்த்தி மெல்ல அசைக்கிறார்கள். வண்டியில் நின்றவர்களும் கையசைத்திருப்பார்கள்.........?

ஒரு 'இஞ்சினில்' கொஞ்சத்தூரம் ஓடிப்போய் நின்று தயாராகையில், துணியில் பொத்தி 'ரோச்லைட்' அடிப்பது தெரிகிறது.

"அல்பா, அல்பா......"

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

படிப்பகம்

www.padippakam.com



# பிரபாகரன் படைக்கும் புதுமைப்பெண்கள்

பழ. நெடுமாறன்

சங்க காலத்தில் தமிழர் சமுதாயத்தில் பெண்களுக்குரிய இடம் எதுவாகஇருந்தது என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். சகல காலங்களுக்கும் பொருத்தமான திருக்குறளை இயற்றிய வள்ளுவப் பெருந்தகை கூட, **"பெண்ணிற் பெருந்தக்க யாவுள"** என்று பெருமைபடக் கூறினாலும், அதே குறளில் இன்னொன்றையும் சொன்னார். அதாவது, இல்வாழ்க்கையில் கற்பெனும் திண்மை இருக்கப் பெற்றாற்தான், பெண் பெருமையுடையவள் ஆகிறாள்

பொற்கோட்டு இமயத்தில் புலி பொறித்து ஆண்ட பூம்புகார் சோழனாக இருந்தாலும், ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனாக இருந்தாலும் கற்பின் செல்வி கண்ணகி சிலை அமைக்க இமயம் வரை சென்று கனகவிசயர் தலையிலே கல்லைச் சுமக்க வைத்துக் கொண்டு வந்த சேரன் செங்குட்டுவனாக இருந்தாலும் சரி, பிற்காலத்தில் இராசராசன் - இராசேந்திரன் போன்ற மாபெரும் மன்னர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் காலத்திலே படைகளிலே பெண்களும் இருந்தார்கள் - ஆயுதம் தாங்கிப் போரிட்டார்கள் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் கிடையாது.

என்று கூறினார்.

**"பெண்ணிற்க பெருந்தக்க யாவுள, கற்பெனும்**
**திண்மையுண்டாகப் பெறின்"**

பெண்ணை விடப் பெருமைக்குரியவர் யாருமில்லை என்று ப்ராட்டிய அவர், அதற்கொரு நிபந்தனையும் விதிக்கிறார். இது தான் அந்நாளைய தமிழர்களின் மனப்போக்காக இருந்தது என்பதில் சந்தேகமில்லை. **சங்கப்பாடல்கள்** பலவும் இத்தகைய போக்கையே பிரதிபலிக்கின்றன. **பூதப்பாண்டியனின்** மனைவியான **'பெருங்கோப்பெண்டு'** எனும் அரசி அவன் மறைந்தபோது, அவளும் உடன் கட்டை ஏறுவதற்குத் தயாரானாள். அப்போது, புலவர் பலர் கூடி அவளை அவ்வாறு செய்யாமல் தடுப்பதற்கு முயன்றபோது அவள், **"பல்சான்றீரே! பல்சான்றீரே!"** என்று அழைத்து, **"எனக்கு என்னுடைய கணவன் இறந்துபட்ட அவனுடைய சிதையிலே பற்றி எரிகின்ற தீ தாமரைக்குளத்து நீர்போல் இன்பம் தருவதாகும். ஆகவே என்னை யாரும் தடுக்காதீர்கள். நான் விதவை வாழ்வு வாழ விரும்பவில்லை"** என அந்த அரசியே பாடுகின்றாள். அப்படியொரு பாடல் புறநானூற்றில் இடம் பெற்றிருக்கின்றது. அந்தப் பாடலிலே அவள்,

**"பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்**
**நுமக்கு அரிது ஆகுக தில்ல, எமக்கு எம்**
**பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்புஅற**
**வள் இதழ் அவிழ்த்த தாமரை**
**நள் இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே"**

(புறநானூறு பெருங்கோப்பெண்டு பாடல் 246)

என்று சொல்கின்ற மனப்போக்கு, நாம் எதிர்பார்க்கின்ற புதுமைப் பெண்ணின் மனப்போக்காக அமைந்திருக்கவில்லை. ஆனால், சங்க காலத்தில் அத்தகைய மனப்போக்கை அரசிகள் முதல் சாதாரண பெண்கள் வரை கொண்டு இருந்தார்கள். அதைப்போலவே, சிலப்பதிகாரத்தில் ஆரியப்படை கடந்த **பாண்டியன் நெடுஞ்செழியனின்** அவையிலேயே கற்பின் செல்வி **கண்ணகி** தோன்றி நீதி கேட்டு குரல் கொடுத்த போது: **"நான் நீதி தவறிவிட்டேன்"** என்ற உணர்வு அவனைக் குடைய அவன் அரியணை மீது இறந்து வீழ்ந்தான். அவன் அருகிலே வீற்றிருந்த அவனுடைய இல்லாள், அரசி கோப்பெருந்தேவி துடிதுடித்து மாண்டாள் என இளங்கோவடிகள் பாடுகின்றார். ஆக ஒருவன் இறப்பானாயின், அவன் இறந்த உடனேயே கற்புடைய மகளாக இருந்தால், அவனுடைய மனைவியும் உடனடியாக உயிரைத்துறக்க வேண்டும் அல்லது உடன் கட்டை ஏறியாவது தன்னை மாய்த்துக் கொள்ள வேண்டும், என்கிற ஒரு மனப்போக்கு அன்றைக்கு நடைமுறையில் இருந்தது என்பதைத்தான் இந்த நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன. இதை இளங்கோவடிகள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகின்றது. ஆகவே தான் அவர் ஒரு இலட்சியப் பெண்ணாகத் தன்னுடைய காவியத்தலைவியான கண்ணகியைப் படைத்து இருக்கின்றார். **கோவலன்** கொலையுண்ட செய்தி கேட்டபோது துடிதுடித்துப் போன கண்ணகி, அவன் கொலையுண்ட இடத்துக்குச் சென்றாள். அவனுடைய உடலைக் கட்டித் தழுவி அரற்றினாள். புலம்பினாள். அந்த இடத்திலேயே தானும் உயிரை விட்டு விடவில்லை. அல்லது அவனது உடலைச் சிதையிலே அடுக்கி எரியவிட்டு, தானும் அத்தீயிலேயே விழுந்து தன்னுயிரைப் போக்கிக் கொள்ளவில்லை. மாறாகக் கொதித்தெழுகிறாள் கண்ணகி. மதுரை மாநகரத்தின் வீதியிலே வலம் வருகிறாள். தனது கணவனுக்கு இழைக்கப்பட்ட அநீதியை உலகறியக் கூவுகிறாள். தனது கணவன் கள்வன் அல்லன் என்பதை நிலை நிறுத்த வேண்டும் என்ற வெறி அவள் உள்ளத்திலே எழுகின்றது. அரசவைக்குச் செல்கின்றாள். அரசனுக்கு முன்னாலே அவள் நீதி கேட்கிறாள். **"தேறா மன்னா!"** என்று மன்னனை அழைக்கக் கூடிய துணிவு அவளுக்கு இருந்திருக்கிறது.

அவள் நீதியை நிலைநிறுத்தியதால்தான், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் தனது உயிரையே மாய்த்துக் கொண்டான். நீதி தவறிற்று என்பதை உணர்ந்த மறுகணமே, அவனது உயிர் போயிற்று. நீதியை நிலை நிறுத்திய கண்ணகி அதற்குப் பின்னால் மேற்குத் திசை நோக்கிச் சென்று மலையுச்சியில் மறைகின்றாள் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. சிலப்பதிகாரத்துக்கு முன்னும் பின்னுமாக எழுந்துள்ள எந்த நூலிலும் கண்ணகி போன்ற பாத்திரப்படைப்பு உருவாக்கப்பட்டதே இல்லை என்று சொல்ல வேண்டும். கண்ணகி ஒரு வித்தியாசமான பாத்திரப்படைப்பு. அந்நாளைய பெண்கள் எப்படி இருக்க வேண்டுமென்று சமுதாயம் கருதிற்றோ, அதற்கு மாறான ஒரு பெண்ணை கண்ணகியின் வடிவிலே இங்கோவடிகள் படைத்திருக்கிறார் என்று சொல்ல வேண்டும்.

பண்டைய தமிழ் இலக்கியங்களில் ஒரு பெண் வீரம் நிறைந்தவள் என்பதற்கான இலக்கணமென்பது வித்தியாசமானது. ஒரு பெண் வீரம் நிறைந்தவள் என்பதைப் பற்றி சங்ககால பெண்பால் புலவரான **'காவற்பெண்டு'** என்பவர் புறநானூற்றில் பின்வருமாறு பாடியிருக்கின்றாள்.

"என் மகன் எங்கே என்று கேட்கிறாய் என் மகன் எங்கே உளான் என்பதை நானறியேன். ஆனால், புலி வாழ்ந்த குகை போல அவனைப் பெற்றெடுத்த வயிறு இதோ இருக்கின்றது, குகையில் இருந்து வெளியேறிய என் மகன் போர்க்களத்தில் தான் இருப்பான், அங்கே போய்ப் பார்"

**சிற்றில் நற்றூண் பற்றி "நின்மகன்**
**யாண்டுள னோ? என வினவுதி என் மகன்**
**யாண்டு உளன் ஆயினும் அறியேன் ஓரும்**
**புலி சேர்ந்து போகிய கல் அளை போல,**
**ஈன்ற வயிறோ இதுவே**
**தோன்றுவன் மாதோ, போர்க்களத்தானே!"**

(புறநானூறு - காவற்பெண்டு பாடல் 86)

என்று கூறுகிறார். "என் மகன் எங்கே என்று கேட்கிறாய் என் மகன் எங்கே உளான் என்பதை நானறியேன். ஆனால், புலி வாழ்ந்த குகை போல அவனைப் பெற்றெடுத்த வயிறு இதோ இருக்கின்றது, குகையில் இருந்து வெளியேறிய என் மகன் போர்க்களத்தில் தான் இருப்பான், அங்கே போய்ப் பார்" என்று பெருமிதத்துடன் அத் தாய் கூறுவதாகக் காவற்பெண்டு பாடுகிறாள். அதாவது, ஒரு பெண் வீரமகனைப் பெற்றெடுத்தாள் என்பதுதான் அவளுக்குப் பெருமை, அவள் தான் வீரத்தாயாகக் கருதப்பட்டாள்.



ஒக்கூர் மாசாத்தியார் என்னும் புலவர், அதே புறநானூற்றில் இன்னொரு வீரத் தாயை நம் கண் முன்னே அழகாகச் சித்தரிக்கிறார்:

**"கெடுக சிந்தை் கடிது இவள் துணிவே**
**மூதின் மகளிர் ஆதல் தகுமே!**
**மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை**
**யானை எறிந்து, களத்து ஒழிந் தனனே**
**நெருநெல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்**
**பெருநிரை விலக்கி, ஆண்டுப் பட்டனனே்**
**இன்னும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி**
**வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து கூட் இப்**
**பாறு மயிர்க் குடமி எண்ணெய் நீவி**
**ஒரு மகன் அல்லது இல்லோள்**
**'செருமுக நோக்கிச் செல்க' என விடுமே"**

(புறநானூறு -ஒக்கூர் மாசாத்தியார் பாடல் 279)

என்று பாடுகிறார். முதல் நாள் போரில் தன் தந்தையை இழந்த இவள், அடுத்த நாள் போரிலே தன்னுடைய கணவனைப் பறிகொடுத்த இவள், மீண்டும் மறுநாள் போர்ப்பறை முழங்குவதைக் கேட்டு, உடனே தரித்து, கையிலே வேல் கொடுத்து, அவனைப் போர்க்களத்துக்கு இன்முகத்துடன் அனுப்பி வைத்தாள். இவள் அன்றோ வீரத்தாய் என்று அவர் வியந்து கூறுகின்றார். இன்றைய சங்ககாலப் புலவர்கள் அவர்கள் ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும் இவ்வாறுதான் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். ஒரு பெண்ணின் வீரம் என்பது அவளுடைய தந்தை, சகோதரன், கணவன், பிள்ளைகள் ஆகியோரைப் போர்க்களத்துக்கு மனமுவந்து அனுப்பி வைப்பது. இதுதான், அவளுக்கு வீரத்தாய் என்ற பட்டத்தைப் பெற்றுத்தரும். பெண்களில் வீரம் என்பது, வீட்டின் எல்லைக்குள்ளே முடங்கி விட்டது. பெண்கள் ஆயுதம் எடுத்துப் போராடினார்கள். அவர்கள் போர்க்களத்துக்குப் போனார்கள் என்பதை நம்முடைய சமுதாயம் ஏற்றுக் கொள்ளவில்லை. நம்முடைய இலக்கிய மரபும் அதைக்கூறவில்லை. பொற்கோட்டு இமயத்தில் புலி பொறித்து ஆண்ட பூம்புகார் சோழனாக இருந்தாலும், ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனாக இருந்தாலும் கற்பின் செல்வி கண்ணகி சிலை அமைக்க இமயம் வரை சென்று கனகவிசயர் தலையிலே கல்லைச் சுமக்க வைத்துக் கொண்டு வந்த சேரன் செங்குட்டுவனாக இருந்தாலும் சரி, பிற்காலத்தில் இராசராசன் – இராசேந்திரன் போன்ற மாபெரும் மன்னர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் காலத்திலே படைகளிலே பெண்களும் இருந்தார்கள் – ஆயுதம் தாங்கிப் போரிட்டார்கள் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் கிடையாது.

சங்க காலத்திலிருந்து பாரதி காலம் வரை இதுதான் நம்முடைய மரபாக இருந்து வந்திருக்கின்றது.

தொடரும்...

படிப்பகம்

www.padippakam.com






## ரஷ்யா:

# அலெக்சாண்டர் லெபட் ஆட்சியைக் கைப்பற்றுவாரா?

ரஷ்யாவின் 50,000 துருப்பினரைக் கொண்ட படைப்பிரிவு ஒன்றுடனும், செச்சினியப் போராளிகளின் உதவியுடனும், சனாதிபதி பொறிஸ் யெல்ட்சினின் ஆட்சியைக் கைப்பற்றி சனாதிபதியாக முயல்கிறார் என ரஷ்யாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் **அலெக்சாண்டர் லெபட்டின்** மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டினையடுத்து கிரம்ளின்



அவரது பதவியைப் பறித்துக்கொண்டது.

அலெக்சாண்டர் லெபட்டின் பரம வைரியான உள்நாட்டு அமைச்சர் **அனட்டொலி குலிகோவ்** கொடுத்த தகவல்களை அடுத்தே, **யெல்ட்சின்** ஒக்டோபர் மாதம் 17ம் திகதியன்று தேசிய தொலைக்காட்சியில் பகிரங்கமாக இப் பதவி விலக்கல் செய்தியை அறிவித்தார்.

கடந்த ஒரு சில மாதங்களாக அலெக்சாண்டர் லெபட், தன்னைப் பதவி விலக்கும் படியாக வேண்டுமென்றே பல நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்றும், இதன் மூலம் மக்களின் அனுதாப அலையைப் பெற்றுக்கொள்வதே அவரின் நோக்கம் என்றும், இருதய சத்திர சிகிச்சைக்காகத் தன்னைத் தயார்படுத்திவந்த 65 வயதுடைய பொறிஸ் யெல்ட்சின் தற்போது உருவாகி வரும் நிலைமையைத் தன்னால் இனிமேலும் பொறுத்துக்கொள்ள முடியாது என்றும் ஜெனரல் லெபட்டை அவரது பொறுப்பிலிருந்தும் விடுவிக்க வேண்டியுள்ளது என்றும் கூறியிருந்தார். தொலைக்காட்சியில் அவர் மேலும் உரையாற்றுகையில், **"லெபட் கிரம்பிளினில் உள்ள குழுவை இரண்டாகப்**

சாள்ஸ் தேவசகாயம்

**பிரிக்கின்றார். மேலும் சனாதிபதியுடன் இணங்காத விதத்தில் தன்னிச்சைப்படி பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறார்"** என்றும் குற்றம் சாட்டியுள்ளார். ஜெல்ட்சின், குலிகோவின் குற்றச்சாட்டுக்கள் பற்றி கருத்துப் கூறவில்லையெனினும், லெபட் தான் சனாதிபதியாக வேண்டும் எனப் பகிரங்கப்படுத்தி வரும் செயற்பாடுகள் மீது ஆத்திரத்துடன் விமர்சனம் செய்துள்ளார்.

ரஷ்யாவின் மிகப் பிரபல்யமான பாராத் துருப்பினனான லெபட் கடந்த சனாதிபதித் தேர்தலில் முதற்கட்ட வாக்களிப்பின்போது 11 மில்லியன் வாக்குகளைப்பெற்று, யெல்ட்சினுக்கு அடுத்த தானத்தைப்பிடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது இவ் வாக்குப்பலத்தைச் சாதகமாக்கித் தன்னைப் பலப்படுத்துவதற்காகவே யெல்ட்சின், பாதுகாப்புக் கவுண்சில் பதவியை லெபட்டுக்கு அளித்திருந்தார்.

சோவியத் யூனியன் காலத்தில் எதிர்த்தரப்பினர் வாயை அடக்குவதற்காக முக்கிய பதவிகளை வழங்குவது வழமையாக இருந்தது. ஆனால், யெல்ட்சின் இந்த யுக்தியைப் பாவித்தபோது, லெபட் கிரம்ளினையே இரண்டாகப் பிரித்து ஆள நினைத்தார்.

லெபட்டும், குலிகோவும் சேற்றை அள்ளித் தெளித்து, அவர்களின் பாதுகாப்புப் படையினரும் வீதிகளில் கைகலப்பில் ஈடுபடத் தொடங்கியதை அடுத்து, உணர்வலைகள் உச்சநிலையை அடைந்தன. செச்சனியாவில் 10,000 ரஷ்யத் துருப்பினர் உயிரிழந்தமைக்கு குலிகோவின் செயற்திறனின்மையே காரணம் என லெபட் குற்றம் சாட்டினார். மேலும், தனது சமாதானத் திட்டத்தை, குலிகோவ் எதிர்த்தமையால் அவரைப் பதவியில் இருந்து அகற்றிவிட வேண்டும் என லெபட் திட்டம் தீட்டினார்.

> லெபட்டைப் பதவி விலக்கியது, செச்சினியா சமாதானத்திட்டத்தின் பலாபலன்கள் பற்றி பல கேள்விகளை எழுப்பி உள்ளது. ரஷ்ய அரசின் ஏனைய பகுதிகள் இயங்க முடியாது இருந்த நிலையில் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் லெபட் தன்னந்தனியனாக, செச்சினியப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து பலரை ஆச்சரியப்பட வைத்தார்.

இதேவேளை, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பத் தவறிவிட்டார் என, பிரதமர் **விக்டர் செர்னோமிட்றினை** விமர்சித்ததால் அவரது வெறுப்பையும் சம்பாதித்துக்கொண்டார்.

மேலும், யெல்ட்சினின் பிரதம அதிகாரியான விரைவாகப் பிரபல்யமாகிவரும் **அனட்டலி சூபைசினின்** ஆதரவைப் பெறவும் லெபட் தவறிவிட்டார். யெல்ட்சினின் நீண்டநாள் நண்பரான **அலெக்சாண்டர் கொர்ஷகோவை** வெளியேற்றுவதில் சூபைஸ் லெபட்டுடன் சேர்ந்தியங்கிவர் என்பதும், ஆரம்பகாலத்தில் லெபட்டின் செயல்களை மெச்சியவர் என்பதும் கவனிக்கத் தக்கது.

ஆனால், தேர்தலில் போட்டியிடும் கொர்ஷகோவை ஆதரிப்பதன் மூலம் லெபட் பலரை வியப்பிலாழ்த்தியுள்ளார்.

ரஷ்யப் பாராளுமன்றமான டுமாவிலிருந்து லெபட் விலகி, யெல்ட்சின் நிர்வாகத்துடன் சேர்ந்த போது ஏற்பட்ட பதவி வெற்றிடத்திற்கே கொர்ஷகோவ் போட்டியிடுகின்றார். இவர்கள் இருவரது நெருக்கம் ஆபத்துக்கு அறிகுறி என கிரம்ளினில் உணரப்பட்டது.

ஊழலுக்கு எதிராகப் போராடுபவர் என்ற நன்மதிப்பினடிப்படையிலேயே, லெபட் அதிகாரப் படிகளில் ஏறிவந்தார். தான் பலம் வாய்ந்தவர் எனும் பிரதிமையை ஏற்படுத்தி வந்திருந்தாலும், சனநாயக முறையிலான தேல்தலுக்குப் புறம்பாக அதிகாரத்தையடைய முனையமாட்டேன் என்றும் லெபட் கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதே வேளை, தனது நண்பர்களுக்கும் எதிரிகளுக்கும் பலவிதமான தோற்றங்களை அளித்து, லெபட் அவர்களை குழப்பத்திலாழ்த்தி வந்துள்ளார். உதாரணமாக, முன்னாள் சோவியத் குடியரசான மொல்டேவாவின் முரண்பாடுகளை அதிகாரத்துடன் அடக்க உதவிய லெபட், செச்சினியா விடயத்தில் இராணுவத் தீர்வு காண்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

இதே போன்று, செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்குமாக இடைவெளி வளர்ந்து வருகிறது எனக் குரல் எழுப்பிய லெபட், கம்யூனிசத்திற்கெதிராகப் பிரச்சாரம் செய்ததுடன், பழைய அரசு ரீதியான பொருளாதாரத்தையும் எதிர்த்து வந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

மேலும், நேட்டோ நாடுகளின் விரிவாக்கத்தைத் தடுக்கப்போவதாக வீராவேசம் பேசிய லெபட், பிற்பாடு மேற்கு நாடுகள் கூட்டமைப்பின் தலைமைப் பணிமனைகளுக்கு விசயம் செய்து, தன்னுடன் உறவு வைத்துக் கொள்ளும்படி உணர்த்தியுள்ளார்.

எதிர் வரும் மாதங்களில் ரஷ்யாவில் நிலைமை எவ்வாறு மாறப்போகின்றது என்பதை, கிரம்ளினில் இருப்போர் பலர் அக்கறையுடன் அவதானித்து வருகின்றனர். யெல்ட்சினின் உடல்நிலை பற்றி நிச்சயமற்ற நிலை நிலவுகின்றது. அதேவேளை, அரச சம்பளம் வழங்குவதில் பல மாதம் காலதாமதம் ஏற்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நிலை தொடருமாயின், இவ் வருட இறுதியில் பாரிய கலகம் ஏற்படும் என்றும் இத் தருணத்தைப் பாவித்து லெபட் அதிகாரத்தைக் கைப்பற்ற முயல்வாரென்றும் கிரம்ளினில் உள்ள 'ச்சூபைய்ஸ்' போன்றோர் கருதினர். இன்னும் சில மாதங்கள் லெபட் கிரம்ளினில் இருந்தால், குற்றவியல் செயல்களைத் தடுப்பதற்காகத் தனக்குக் கீழ் உருவாக்கப்பட்ட 50,000 துருப்பினரைப் பாவித்து, தனக்கு ஒரு தளம் அமைத்திருப்பார் என்பதே, அவர்களது கணிப்பாக இருந்தது.

இந்தப் பின்னணியிலேயே, ஆட்சிக் கவிழ்ப்புச் சம்பந்தமாகக் குலிகோப் தான் வைத்திருந்த அத்தாட்சிப் பத்திரங்களை முன்வைத்தார். இதனையடுத்து, பிரதமர் செர்னோமிர்டின், ஒரு அவசரக் கூட்டமொன்றைக் கூட்டி பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார். குலிகோவின் குற்றச் சாட்டுக்கள் வெளிவந்து 24 மணி நேரத்தில் லெபட் வெளியேற்றப்பட்டார்.

இதேவேளை, பல்வேறு அரசியற் குழுக்களிடையே நிலவும் முரண்பாடுகளுக்குள் ரஷ்யாவின் பாதுகாப்புப் படைகள் தலையிடக்கூடாது என பிரதமர் செர்னோமிர்டின் எச்சரிக்கை விடுத்தார். சனாதிபதி யெல்ட்சினுக்கு விசுவாசமான இவர், "சனாதிபதி சுகயீனமாக இருக்கும் இக்காலகட்டத்தில் நாம் ஸ்திரத்தன்மையைப் பேண முயலவேண்டும்" எனவும் அரசியல்வாதிகளுக்கு அறிவுறுத்தினார்.

இருதய சத்திர சிகிச்சைக்காக யெல்ட்சின். வைத்தியசாலை செல்லும்போது, அவரது அதிகாரங்கள் பிரதமருக்குக் கையளிக்கப்பட்டபோது, தனக்கு சனாதிபதியாகும் ஆசை இல்லையென பிரதமர் ஏற்கெனவே அறிவித்துவிட்டார். யெல்ட்சின் இல்லாதபோது, பிரதமர் உட்பட நான்கு பேர் கொண்ட கவுன்சில், கிரமமாகக்கூடி நிலைமைகளை ஆராய வழி செய்யப்பட்டுள்ளது. கிரம்ளினில் உயரதிகாரிகளிடையே நிலவும் கருத்து வேறுபாடுகள், சண்டைகளை இக் கவுன்சில் கவனித்துக்கொள்ளும் என்றும்,



அதனால் ஸ்திரத்தன்மை பேணப்படும் என்றும் யெல்ட்சின் கருதுகிறார்.

ரஷ்யாவின் நிதி நெருக்கடி தொடரும் இவ் வேளையில், தான் வேலை புரிவோரின் பக்கம் நிற்பதாகவும், யெல்ட்சின் காட்ட முனைகிறார். **"துரதிர்ஷ்டவசமாகச் சம்பளப்பிரச்சினை நிலவுவதைச் சில உயரதிகாரிகள் உணர மறுக்கிறார்கள். அவர்கள் தமக்குள்ளே விமர்சனம் செய்வதிலேயே மிகவும் கவனம் செலுத்தி வருகிறார்கள். இவர்கள் தமது சண்டைகளைத் தொடர்வார்களேயானால், ஈவிரக்கம் இல்லாமல் இன்னும் பல உயரதிகாரிகளைப் பதவி விலக்குவேன்"** என எச்சரித்துள்ளார்.

லெபட்டைப் பதவி விலக்கியது, செச்சினியா சமாதானத்திட்டத்தின் பலாபலன்கள் பற்றி பல கேள்விகளை எழுப்பி உள்ளது. ரஷ்ய அரசின் ஏனைய பகுதிகள் இயங்க முடியாது இருந்த நிலையில் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் லெபட் தன்னந்தனியனாக, செச்சினியப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து பலரை ஆச்சரியப்பட வைத்தார்.

இச் சமாதான ஒப்பந்தத்தின்படி, இன்னும் ஐந்து வருடங்களில் செச்சன் மக்கள் சர்வசன வாக்கெடுப்பு மூலம், தாம் பிரிந்து செல்வதா இல்லையா என முடிவெடுக்க வசதி செய்யப்பட்டுள்ளது. லெபட்டின் இச்சமாதானத் திட்டம் நீண்ட கால தாமதத்தின் பின்பே யெல்ட்சினால் அங்கீகரிக்கப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது.

இச்சமாதான உடன்படிக்கை, பிரிவினைக்குக் காலாக அமையும் எனக்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

படிப்பகம்

www.padippakam.com



# தமிழீழத்துக்கு எதிராக இருக்கின்றவர்கள்...

சொன்னால், ஒரு தமிழன் இன்னொரு தமிழனுக்குக் குரல் கொடுப்பது தவறென்று சொன்னால், ஏழு ஆண்டுகள் என்ன - எழுபது ஆண்டுகள் என்றாலும் என்ன, எத்தனை ஆண்டுகள் என்றாலும் சிறை செல்லத் தயார். நாங்கள் இந்த நிலைப்பாட்டில் இருந்து எந்தக் காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் பின்வாங்கப் போவதில்லை என நிறுவனர் டாக்டர் ராமதாஸ் ஐயா அவர்கள் உறுதிபட எடுத்துச் சொன்னார்.

அந்த உறுதியினுடைய விளைவாகத்தான், அவர்கள் சொன்ன சொல்லில் இருந்து பின்வாங்கவில்லை. ஆகவே அவர்களை வெளியே விடுவதானால் எந்தப் பிரச்சினையும் ஏற்படப் போவதில்லை. அவர்களை வழக்கு மன்றத்திலே வைத்துக் கொண்டு எந்தத் தண்டனை வழங்கலாம் என்று சொல்லி அன்றைக்கு எங்களை விடுதலை செய்தார்கள். ஆக, 1992 களிலே பேரணியை, மாநாட்டை நடாத்தி யதன் விளைவாக, தமிழகத்திலே ஒரு மாபெரும் எழுச்சியும் உணர்ச்சியும் ஏற்பட வழி கோலப்பட்டது. அந்த மாநாட்டிலே இங்கு அமர்ந்திருக்கின்ற பழ. நெடுமாறன் உள்ளிட்ட தமிழகத்திலே இருக்கக்கூடிய பல்வேறு அறிஞர்களும் அந்த மாநாட்டிலே கலந்து கொண்டு உரையாற்றினார்கள். பாட்டாளி மக்கள் கட்சி, தனது நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் உலகத் தமிழர் களுக்காக, அதிலும்குறிப்பாக, ஈழத் தமிழர்களுக்காக, அவர்கள் படுகின்ற இன்னல்கள் களையப் பட வேண்டும் என்பதற்காக நாங்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற இந்திய மண்ணையும் - தமிழக அரசையும் பல்வேறு சூழ்நிலைகளிலும் வற்புறுத்திக் கொண்டு இருக்கிறோம். எங்களுக்கு நீங்கள் உதவுவது, உங்கள் தார்மீகக் கடமை என்பதை அடிக்கடி எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறோம்.

அண்மையிலே கூட தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலிலே, இதுவரையிலே மக்கள் மன்றத்திலே பேசிக் கொண்டிருந்த எங்களை, நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலெ வெற்றி பெறச் செய்து, தமிழ்நாடு சட்டசபையிலே எங்களை அமரச் செய்திருக்கிறார்கள். அந்தத் தமிழ்நாடு சட்ட மன்றத்திலே கூட, எங்களுடைய குரல்கள் யாருக்காக ஒலித்துக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். எங்களைப் பொறுத்தவரையிலே, தமிழ் நாட்டிலே எங்கள் கட்சியைப் பற்றி, அறிமுகப்படுத்துவதனால் எங்களை வன்முறைக் கட்சி என்று சொல்லு வார்கள். இல்லையென்றால், விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்ற கட்சி என்று சொல்லுவார்கள். ஆக, வாக்குகளைப் பற்றி மற்றைய கட்சிகள் கவலைப்பட்டுக் கொண்டிருக்க - நாங்கள் வெளிப்படையாக எங்கள் ஆதரவை தமிழ் மக்களுக்காக - குறிப்பாக ஈழத் தமிழ் மக்களுக்காக, தமிழீழம் மலர வேண்டும் என்பதற்காக எல்லாவகையிலும் இயன்ற வரையிலும் நாங்கள் உறுதியாக ஒத்துழைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பெருமையாகவும் - சிறப்பாகவும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய அரசைப் பொறுத்தவரையிலே, தமிழக அரசின் மூலமாக, ஏனென்றால் இன்றைக்குத் தமிழகத்திலே பதவிக்கு வந்துள்ள கலைஞர் அரசின் ஆதரவிலே தான் மத்தியிலே ஆட்சி அமைத்துள்ள அரசு தங்கியிருக்கிறது. அந்த மத்தியிலே அமைந்திருக்கின்ற தேவகௌடாவின் அரசுக்கு இன்றைக்கு சரியான நேரம் வந்துள்ளது. அதாவது, "தமிழ் மக்கள் ஈழத்திலே வாழமுடியாத சூழ்நிலையிலே விரட்டியடிக்கப்படுகிறார்கள் - சொந்த நாட்டு மக்கள் என்றுகூடப் பாராமல் சிங்கள் இராணுவம் அவர்கள் மீது குண்டுமாரி பொழிந்து கொண்டிருக்கிறது - அவர்கள் தங்குகின்ற இடங்களிலே எந்த ஒரு அடிப்படை வசதியுமில்லாமல் அவர்கள் தவியாகத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையிலே நான் அன்றைக்கு தமிழ்நாடு சட்டசபையிலே பேசிய பேச்சுக்கள் பத்திரிகைகளிலே வெளிவந்திருக்கிறது. நான் அவைகளைத் தெளிவாகக் குறிப்பிட்டுச் சொன்னேன்." "வங்கதேச அகதிகளுக்கு உதவினார் இந்திரா அம்மையார். வங்கதேசம் உருவாகிவிட்டது. வங்கதேசம் வந்துவிட்ட காரணத்தாலே இந்தியாவிலே உள்ள மாநிலமான மேற்கு வங்காளம் தனியே பிரிந்து விடவில்லை. இன்றைக்கும் இந்தியாவிலே மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட வங்க அகதிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பராமரித்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள். வங்க அகதிகள் 1970 களிலே இந்தியாவுக்கு வந்தபொழுது தபால் முத்திரையில் விலையை 5 சதத்தால் உயர்த்தி அவர்களைப் பராமரித்தார்கள். ஆக, இந்தியாவிலுள்ள அனைத்துக் குடிமக்களும் அந்த அகதிகள் காப்பாற்றப்பட வேண்டு மென்பதற்காக அதை ஏற்று வழங்கியிருக்கிறார்கள். அப்படி உள்ள பொழுது, எங்கள் தமிழ் மக்கள் மட்டும் என்ன பாவம் செய்தார்கள். ஈழத்திலே இருந்து வரும் அகதிகளுக்கு இந்த இந்திய அரசும், தமிழக அரசும் ஏன் உதவக்கூடாது" என, குறிப்பிட்டுச் சொன்னேன்.

அது மட்டுமல்ல, "இன்றைக்கு எங்கு வன்முறை நடந்தாலும் புலிகள் தான் காரணம் என்று நீங்கள் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், டெல்லியைச் சுற்றி ஏறத்தாழ வாரத்திற்கு இரண்டு முறை குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், அதற்காக யாரும் டெல்லியைச் சுற்றியிருக்கிற ஆப்கான் அகதிகளை வெளியேற்றி விடவில்லை. அவர்களை வைத்துக் கொண்டு மாதத்திற்கு மூவாயிரம் ரூபா நீங்கள் பணம் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அவர்களை வைத்துப் பராமரித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய ஈழ அகதிகளுக்கு மாதத்திற்கு நூற்றியைம்பது ரூபாய் கூடத் தர முடியாமல் அவர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட மாற்றாந் தாய் மனப்பான்மையை இந்திய அரசு கடைப்பிடிக்குமேயானால், தமிழகத்திலே இருக்கக் கூடிய குடிமக்கள் நாங்கள் இந்தியர்கள் தானா என்ற ஒரு கேள்வியை அவர்கள் மனதின் முன்னால் நிறுத்த வேண்டியிருக்கும் என்பதை எச்சரிக்கையாக இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று சொல்லி இந்திய அரசிற்கு நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, நம்மைப் பொறுத்த வரையிலே ஒரு தமிழன் இன்னொரு தமிழனுக்காகக் குரல் கொடுப்பது எந்த வகையிலும் தீதாகாது - தவறாகாது. எந்த ஒரு இனமும் தன்னுடைய தேசிய இனத்திற்காக இரங்குவது என்பது உலகத்திலே இயல்பாக இருக்கிற செய்தி. சைப்பிரசில் கிரேக்க தேசிய இனமும், துருக்கி தேசிய இனமும் வாழ்கிறது. அங்கே சண்டை வருகிறபோது, துருக்கி பேசுகின்ற மக்களுக்கு துருக்கி நாடானது சென்று உதவிய காரணத்தினால்தான், இன்றைக்கு அவர்கள் நிம்மதியான ஒரு பிரிவினையைப் பெற்றிருக்கிறார்கள்.

ஆக, சைப்பிரஸ் நாட்டிலுள்ள துருக்கி பேசுகிற மக்களுக்கு துருக்கி சென்று உதவுவதைப் போல, தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய தமிழர்கள் ஈழத் தமிழர் களுக்கு உதவ வேண்டும். ஆனால், அங்கு அடக்கு முறைச் சட்டங்களுக்கும், அரசினுடைய கறுப்புச் சட்டங்களுக்கும் அஞ்சி நடுங்கிக் கொண்டு அங்கே ஈழத்தமிழர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் கூட, உணர்வுகள் நீறு பூத்த நெருப்புப் போல இருக்கிற சூழ்நிலையிலே கனடா போன்ற மேற்கத்தைய நாடுகளிலேயே இருக்கக் கூடிய நீங்கள், உங்களைப் போன்றவர்கள் நினைத்துப் பார்க்கவே நெஞ்சு வேகும் வேதனையை அனுபவிக்கும் ஈழத் தமிழர் களுக்கு தாராளமாக உதவ வேண்டும்.

ஏனெனில், தமிழர்களுக்கென ஒரு நாடில்லா காரணத்தினால் இன்றைக்கு இது பற்றி ஐ.நா. சபையிலே குரல் கொடுக்க முடியாமல் உள்ளது. அதனால் தான் தமிழர்கள் அடிபட்டால், உதைபட்டால், வதைபட்டால் கேட்பதற்கு நாதியில்லாமல் போய்க் கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. இதை மாற்றியமைக்க வேண்டுமென்று சொன்னால், கனடா போன்ற நாடுகளிலே வசிக்கக் கூடிய நீங்கள் அங்கே உண்ண உணவின்றி, பரிதவித்துக் கொண்டிருக்கும் அந்த ஈழத்தமிழ் மக்களுக்கு, இயன்ற அளவுக்கு நம்முடைய பங்களிப்பைச் செய்வோம் என்ற உறுதியுடன் நீங்கள் நிச்சயமாக உதவ வேண்டும். ஏதோ எங்களைப் பார்த்து அப்படிச் சொல்லுகிறீர்களே, நீங்கள் என்ன செய்தீர்கள் என்று நீங்கள் கேட்கலாம்.

நாங்கள், கடந்த ஜெயலலிதா ஆட்சியிலே, தமிழகத்திலே வசதி படைத்த கட்சிகளெல்லாம் முப்பது இலட்சம் ரூபா, இருபத்தைந்து இலட்சம் ரூபா என்று சொல்லி பணத்தை வாரிக் கொடுத்தார்கள். ஈழத் தமிழர்களுக்கு உதவுவதாகச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கொடுத்தார்கள். இரத்த தானம் செய்தார்கள். ஆனால், இரத்தமோ பணமோ போய்ச் சேரவில்லை. எங்களுடைய நிறுவனரும் நாங்களும் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய இயக்கத்தைச் சார்ந்தவர்களும் கடந்தாண்டு தமிழகம் முழுவதும் இதை ஒரு பிரச்சாரமாக தமிழ் மக்களிடையே கொண்டு சென்றோம். ஊர் தோறும் நாங்கள் இலங்கைத் தமிழர்களுக்கு உதவுவதற்காக, "யாழ்ப்பாணத்திலே இருந்து ஒரு நாளிலேயே ஒரு சில நாட்களிலேயே சுமார் 5 இலட்சம் தமிழர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் என்ன பொருள்? வெளியேறியிருக்கிறார்கள் என்றால் என்ன பொருள்? அந்த நாட்டின் இராணுவமானது அந்த நாட்டு சொந்த மக்களின் மீது குண்டு வீசித் தாக்கி அழித்துக் கொண்டிருக்கிறது. அந்த நாட்டினுடைய இராணுவத்தை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே அங்கே வதைபடுகிற, உதைபடுகிற, காயப்படுகிற அந்த மக்களுக்கு மருந்துகளை, உயிர் காக்கும் மருந்துகளைத் திரட்டித் தர வேண்டும் என்று சொல்லி சுமார் 25 இலட்ச ரூபாய்க்கு உயிர் காக்கும் மருந்துகளைச் சேகரித்து அதை உரிய வகையிலே, அவர்களைப் போல நாங்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கொடுத்து விட்டு, "இலவு காத்த கிளிகளைப் போல" ஏமாந்து நிற்காமல் அந்த மருந்து உரியவர்களுக்கே எப்படிப் போய்ச் சேர வேண்டுமோ, அப்படிப் போய்ச் சேர்வதற்கு எங்களாலான முயற்சிகளைச் செய்திருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே நான் பெருமையுடனும் உரிமையுடனும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

ஆக, எங்களைப் பொறுத்தளவிலே நாங்கள் ஒரு சாதாரண கட்சி. தமிழகத்திலே ஆண்டு கொண்டிருக்கிற கட்சியினரும், ஆண்ட கட்சியினரும் பொதுமக்களின் வரிப்பணத்தைக் கொள்ளையடித்து, கோடி கோடியாக வைத்திருக்கிறார்கள். ஜெயலலிதாவிடமுள்ள பணத்திலே ஒரு நூற்றிலே ஒரு பங்கு இருந்தாலும் கூட, தமிழீழம் ஒரு மூன்று மாதத்திலே மிகச் சுலபமாகக் கிடைத்துவிடும். ஆனால், மனமிருக்க வேண்டுமே கொடுப்பதற்கு. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இல்லாமல் போனாலும் கூடப் பரவாயில்லை. "சிறு துளி பெரு வெள்ளம்" என்று சொல்வது போல உலகத்திலே பல இலட்சம் தமிழர்கள், அதிலும் குறிப்பாக ஈழத் தமிழர்கள் புலம் பெயர்ந்த தமிழர்கள் நீங்கள் வசித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

எனவே, நீங்கள் நினைத்தால் ஒரு டொலர் தருகின்ற நீங்கள் உங்களுடைய செலவீனங்களை எல்லாம் கொஞ்சம் சுருக்கிக் கொண்டு, அடக்கிக் கொண்டு, உங்களுடைய ஆசாபாசங்களைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு சற்றுக் கூடுதலாக ஒரு டொலர் தருவதற்குப் பதிலாக - இரண்டு டொலர்; இரண்டு டொலர் தருபவர் ஐந்து டொலர்; ஐந்து டொலர் தருபவர் பத்து டொலர் என்று சொல்லி உங்களுடைய உதவிகள் பெருக, அங்கே இருக்கக்கூடிய ஈழத் தமிழர்களுடைய கண்ணீரானது துடைக்கப்படும் - கவலைகள் தீர்க்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தில் அமைந்திருக்கும் கலைஞர் அரசு, ஒரு "சூடு கண்ட பூனை போல..." ஏதோ ஈழத் தமிழர்களுக்காக உதவியதன் காரணமாகத்தான், தாம் பாதிக்கப்பட்டதைப் போல பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் கூட, "ஆடுகிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும் - பாடுகிற

> “தமிழ் மக்கள் ஈழத்திலே வாழமுடியாத சூழ்நிலையிலே விரட்டியடிக்கப்படுகிறார்கள் - சொந்த நாட்டு மக்கள் என்றுகூடப் பாராமல் சிங்கள் இராணுவம் அவர்கள் மீது குண்டுமாரி பொழிந்து கொண்டிருக்கிறது - அவர்கள் தங்குகின்ற இடங்களிலே எந்த ஒரு அடிப்படை வசதியுமில்லாமல் அவர்கள் தவியாகத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.”

> நம்மைப் பொறுத்தவரையிலே ஒரு தமிழன் இன்னொரு தமிழனுக்காகக் குரல் கொடுப்பது எந்த வகையிலும் தீதாகாது - தவறாகாது. எந்த ஒரு இனமும் தன்னுடைய தேசிய இனத்திற்காக இரங்குவது என்பது உலகத்திலே இயல்பாக இருக்கிற செய்தி.

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

படிப்பகம்

www.padippakam.com



# தகவல் வெகுசன தொடர்பு சாதனங்களை மிரட்டும் ஆளுங்கட்சி

பொதுசன ஐக்கிய முன்னணி அரசு மீது 'அபாண்டமான' குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவரும் உபாலி பத்திரிகை நிறுவனத்தின் மீது உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டுள்ளதாக சிறிலங்காவின் வெகுசனதுறைப் பிரதி அமைச்சர் ஜனாப் அலவி மௌலானா அண்மையில் குற்றம் சாட்டினார்.

சில பத்திரிகை நிறுவனங்கள் தனக்கு எதிராக நடந்து கொள்வதாகவும், தேவையேற்படின் அவற்றை தடை-செய்யக்கூடத் தயங்கமாட்டேன் என்ற எச்சரிக்கையை சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரும் கூடச் செய்திருந்தார். இவ்வாறான எச்சரிக்கை தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கும் விடுக்கப்பட்டது.

சிறிலங்காவின் பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இன முரண்பாட்டையும் இனங்களுக்கு இடையே பகையையும் மூட்டி, அவற்றின் மூலம் மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றி வந்தமையும் வெளிப்படையான விடயங்களே.

தமது அரசியல் நலன்களுக்காக தமிழினத்தை அழிக்கவும் கூட அவை தயங்கவில்லை என்பதுடன், அதனையே தொடர்ந்தும் செய்து வருகின்றன.

அத்தோடு, தமது ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள தமது இனத்தைச் சேர்ந்த பல்லாயிரம் இளைஞர்களை இவ் இரு கட்சிகளும் அழித்தொழித்தமையும் சரித்திர நிகழ்வுகள்தான். 1971இல் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களை தற்போதைய பிரதமர் சிறிமாவோ தலைமையிலான சுதந்திரக் கட்சி கொன்று ஆறுகளில் வீசியது. பின்னர் 1988 – 1989 காலப் பகுதியில் அதை விட அதிகமான சிங்கள இளைஞர்களை ஐ.தே.க. ஆட்சியனர் கொன்று புதைத்தனர். 'ரயர்'கள் போட்டு அரைகுறையாக எரித்தனர்.

எம்பிலிப்பிட்டியவில் காணப்பட்ட புதைகுழிகளைப் பற்றி பொதுசன ஐக்கிய முன்னணி பெரிதாகப் பிரசாரம் செய்து கொண்டிருந்தபோது "சிறிலங்காவின் அரசியல்வாதிகள் அனைவரினதும் வீட்டுக்கோடிகளுக்குள்ளும் புதை குழிகள் இருக்கும்" என அப்போதைய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க கூறியிருந்தார்.

இவ்வாறு வன்முறைகளுக்கூடாக ஆட்சியைக் கைப்ற்றுவதும் அவற்றைத் தக்கவைத்துக் கொள்ள வன்முறைகளைப் பிரயோகிப்பதும் சிறிலங்காவில் புதியதொன்றல்ல.

ஆனால் இவ்வாறான "அரசியல் வன்முறைகளை முற்றாக ஒழிப்போம். எமது ஆட்சிக் காலத்தில் அரசியல் வன்முறைகளுக்கு இடமில்லை" எனக்கூறிப் பதவிக்கு வந்த பொ.ஐ.மு. அரசு, இப்போது தனது 'தவறை' உணர்ந்து வன்முறை வழிக்கே திரும்பிவிட்டதை அண்மைக்காலச் சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன.

போர் தொடர்பான செய்திகளுக்கும், 'தேசிய நலனுக்கு எதிரான' விடயங்களுக்கும் தணிக்கையை அமுல் செய்த ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.மு அரசு, அதற்கு மேலாக – ஜனாதிபதி முதல் அமைச்சர்கள் வரை வெகுசனத் தொடர்பு சாதனங்களுக்குப் பயமுறுத்தல்களையும் விடுத்து வருகின்றனர். இவற்றில் மூடிவிடுதல் முதல் கொலைப் பயமுறுத்தல் வரை அடங்குகின்றன.

இவ்வாறான நிலையில் பொ.ஐ.மு. ஆதரவாளர்களுக்கும் ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்கள் குறித்துச் செய்தி வெளியிட்டமைக்காகவே உபாலி பத்திரிகை மீது பிரதி அமைச்சர் கண்டனம் தெரிவித்தார்.

பொ.ஐ.மு. பதவிக்கு வந்த காலம் முதல் ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கும் அரச கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையில் ஆங்காங்கே மோதல்கள் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. ஆனால் அண்மையில் கட்டு நாயக்கா, நீர்கொழும்புப் பகுதி மோதல்கள் – அதன் அளவிலும், அதில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள், மோதல்களில் சம்பந்தப்பட்டோர் அளவில் முக்கியத்துவம் கூடியதாக உள்ளன.

கடந்த ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி கட்டுநாயக்கா குரான எனும் இடத்தில் இந்த மோதல்கள் ஆரம்பித்ததாக அரச கட்சி கூறுகிறது. ஆனால், ஐ.தே.கட்சியோ 1995 ஏப்பிரலில் ஆனமடுவவில் தமது ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட அரச வன்முறையின் தொடர்ச்சியே இதுவெனக் கூறுகிறது.

ஐ.தே.க.வின் பொன்விழா கொண்டாட்டங்களுக்காக அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தலை பிடுங்க முயன்ற பொ.ஐ.மு. ஆதரவாளர்களுக்கும், ஐ.தே.க. ஆதரவளார்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டதாகவும் இதன்போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒவ்வொரு கட்சியையும் சேர்ந்த ஒவ்வொரு ஆதரவாளர்கள் பலியாகியதாகவும் முதற் சம்பவம் கூறப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பாக மேல் மாகாண சபையின் ஐ.தே.க உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினர் விஜேபால மெண்டிசின் மகனுமான தவிந்திர தென்டிஸ் சரண் அடைந்துள்ளார்.

இதனையடுத்து நீர்கொழும்பு பிரதான வீதியிலுள்ள கடைகள் மீது பொ.ஐ.மு. ஆதரவாளர்களால் போத்தல்கள், கற்கள் என்பன வீசப்பட்டன. கடைகளை மூடுமாறும் வற்புறுத்தப்பட்டது. இது தொடர்பாக 8 பேர் கைது செய்யப்பட்டு அன்று மாலையே விடுவிக்கப்பட்டனர்.

அத்துடன் அன்று மாலை நீர்கொழும்பு சென் மேரிஸ் தேவாலயத்தில் நடைபெற்ற ஐ.தே.கயின் பொன்விழா ஆராதனை நிகழ்வு பொ.ஐ.மு.யின் ஆதரவாளர்களால் குழப்பியடிக்கப்பட்டத.

> அரசியல் வன்முறைகளை முற்றாக ஒழிப்போம். எமது ஆட்சிக்காலத்தில் அரசியல் வன் முறைக்கு இடமில்லை எனக் கூறிப் பதவிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு, இப்போது தனது தவறை உணர்ந்து வன்முறை வழிக்கே திரும்பிவிட்டதை அண்மைக்கால சம்பவங்கள் வெளிப் படுத்துகின்றன.

நீதிமன்றத்தில் சரணடைந்த தவிந்திர மெண்டிசின் வழக்கு செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி நீர்கொழும்பு நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது, அந்த வழக்கைப் பார்வையிட்டு விட்டு திரும்பிய ஐ.தே.க. ஆதரவாளர்களின் வானக அணிமீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐவர் பலியானதுடன், 12 பேர் காயம-டைந்தனர். இந்த வாகன அணியில் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரரான அநுராவும் பயணம் செய்தமை ஒரு குறிப்பிடத்தக்க விடயமாக அமைந்தது.

இந்த விடயத்தில் பலியானவரில் கட்டுநாயக்கா விமான நிலைய வாடகைக் கார் சங்க உப தலைவரும் ஒருவர். இவரின் மரணச் சடங்கை அவரது சொந்த வீட்டில் நடத்தக் கூட பொ.ஐ.மு. ஆதரவாளர்கள் விடவில்லை என ஐ.தே.க. குற்றஞ் சாட்டுகிறது.

ஆனால், இச் சம்பவத்தை வாடகைக் கார் உரிமையா-ளர்களுக்கிடையிலான மோதலாகக் காட்ட அரசு முயற்சி செய்தது. இந்தச் சம்பவத்தில் ரி–56 ரக. ஆயுதங்கள் பாவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆயுதங்களைக்கூட ஐ.தே.க. ஆட்சிக் காலத்திலேயே வழங்கப் பட்டவை என பிரதி அமைச்சர் ஒருவர் குற்றம் சாட்டினார்.

ஆனால் இந்தச் சம்பவங்கள் பொ.ஐ.மு.வின் தொடர்ச்சியான வன்முறையின் ஒரு அங்கமாகக் காட்டவும், ஒரு வன்முறை ஆட்சி சிறிலங்காவில் நடைபெறுவதாகக் காட்டவும் ஐ.தே.க. முயற்சி செய்து வருகிறது. இதன் ஒரு அங்கமாக, வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளை சந்தித்த ஐ.தே.க. உறுப்பினர் அநுரா இச் சம்பவம் குறித்து விளக்கம் அளித்துள்ளார்.

இதேவேளை, இச்சம்பவத்தின் போது அநுரா குறிப்பிட்ட வாகன அணியில் சென்றமையை குடும்ப மோதலாக்க பத்திரிகைகள் முயல்வது பொ.ஐ.மு.வினருக்கும் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயம் குறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் சிறிமாவோ உத்தரவிட்டுள்ளார் எனச் செய்திகள் வெளியிட்டமை மூலம் சந்திரிகாவிற்கும் – சிறிமாவோவிற்கும் 'சிண்டு முடிய' முனைவதாக பொ.ஐ.மு.வினர் கருதுகின்றனர்.

அத்துடன்,

பாகிஸ்தான் பொலிசாரால் அந் நாட்டு பிரதமர் பெனாசீர் பூட்டோவின் சகோதரன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையும், நீர்கொழும்புச் சம்பவத்தையும் சில பத்திரிகைகள், ஒப்பிட முனைந்தமை பொ.ஐ.மு.வினருக்கு பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், செய்தித் தணிக்கை நீக்கப்பட்ட போதும் கூட, வெகுசனத் தொடர்பு சாதனங்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் விடப்படும் மிரட் டல்கள் குறைவடையுமா என்பது கேள்விக்குரிய ஒன்றாகும். ❑

வேலவன்


# கேணல் கிட்டு ஞாபகார்த்த



உள்ளரங்க உதைபந்தாட்டச்
சுற்றுப்போட்டி
1996



திகதி: 22.12.96 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி

இடம்: Sportanlage Fronwald
Fronwald str-115, Affolten (ZH)

கேணல் கிட்டு அவர்களின் நினைவாக, சுவிற்சலாந்தில் முதல் முதலாகத் தமிழர்களின் உள்ளரங்க உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**தமிழீழ விடுதலைப் புலிகள் (சுவிஸ் கிளை)**


படிப்பகம்

www.padippakam.com






பேர்மனியில் மாவீரர் நாள் 96 இன் போது...

## வீரத்தின் விளைநிலங்களே

எரியும் இனியும் எரியும் – உங்கள்
கண்கள் நெருப்பு பகையை எரிக்கும்.
மலரும் ஈழம் மலரும் – உங்கள்
வாழ்வில் இலட்சிய ஈழம் மலரும்
பாசத்தை மறந்து பந்தத்தைத் துறந்து
மண்ணில் புதைந்த மாவீரரே
தேகத்தை மறந்து
தேசத்தை நினைந்து
எங்களில் வாழும் செல்வங்களே
காலம் மாறும் வேங்கை வெல்லும்
உங்கள் கனவு இனிதே நிறையும்




## எம் மாவீரர் !

சத்தம் வேட்டுச் சத்தம் – இங்கு
எதிரியின் கதையை விரைவில் முடிக்கும்
சீற்றம் புலியின் சீற்றம் – எங்கும்
பகைவனின் தலையை பணியவைக்கும்
தலையே இங்கு சரிந்தாலும் – எமது
தமிழீழக் கொள்கை மறப்போமா
மலைபோல் எதிரி திரண்டு வந்தாலும்
மாவீரர் கனவை மறப்போமா
எங்கள் தலைவன் வழியில் நாங்கள்
உங்கள் கல்லறையை
உயிர்த்தெழச் செய்வோம்






இலண்டனில் மாவீரர் நாள் 96 நிகழ்வின் போது...

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-9463
Fax: 718-623-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

படிப்பகம்